இந்திய விடுதலைப்

தொண்டர்

விமலா மதிவேல்

Q6:4582
N64
109276

# இந்திய திருச்சபைத் தொண்டர்

(இரண்டாம் பாகம்)

விமலா மனுவேல்

...ரிடையாளர் இறையியல் வரிசை

272
272 / 4. 64.
MADRAS RECORD OFFICE
இ6:4582
N64
109276

# இந்திய திருச்சபைத் தொண்டர்

( இரண்டாம் பாகம் )

MADRAS RECORD OFFICE
MADRAS

விமலா மனுவேல்

உண்மை விடுதலை செய்யும்

IXΘYΣ

திருப்பணிவிடையாளர் இறையியனூல் வரிசை

Q6:458.2
N64

Copyright
1964

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 109276
MADRAS-600 008

Published for the C. S. I. Tamil Theological Series by
Tamilnad Theological College, Tirumaraiyur.
Editor : Rev. C. Selvamony.
Associate Editor : Rev. A. D. Manuel.
Printed at the Tirunelveli Diocesan Press, Tirunelveli—2

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வில்லியம் கேரி | ... | 1 |
| 2. | ஹென்றி மார்ட்டின் | ... | 22 |
| 3. | அலெக்சாந்தர் டப் | ... | 31 |
| 4. | நாராயண வாமன திலகர் | ... | 44 |
| 5. | பண்டிதை இரமாபாய் | ... | 57 |
| 6. | ஐடா ஸ்கடர் | ... | 68 |
| 7. | வேதநாயகம் சாமுவேல் அசரியா | ... | 78 |
| 8. | சாது சுந்தர் சிங் | ... | 95 |

1

# 1

## வில்லியம் கேரி

19-ஆம் நூற்றூண்டின் துவக்கத்தில், ஆங்கிலேயரின் ஆட்சி இந்தியாவில் வலுவடைந்து வந்தது. வர்த்தகம் செய்ய வந்த கிழக்கிந்திய வாணிகக் குழு நாட்டின் பல இடங்களைக் கைப்பற்றி, தன் அரசையும் இந்திய மண்ணில் நிறுவி விட்டது. ஆகவே, இந்தியாவை நோக்கி, போர் வீரர், மாலுமிகள், வர்த்தகர், அரசாங்க ஊழியர் எனப் பலவகைப் பதவிகளை வகிக்க, ஆங்கிலேயர் விரைந்தனர். ஆனால், நற்செய்தித் தூதை இந்தியா சென்று பரப்ப, ஆங்கில மகன் ஒருவனுக்கும் அவா எழவில்லை.

இதற்கு ஒரளவு காரணம் வாணிகக் குழுவினரின் கண்டிப்பான சட்டங்கள். இந்திய மக்கள் கிறிஸ்தவராவதை அவர்கள் விரும்பவில்லை. மார்க்க சம்பந்தமான காரியங்களில் ஈடுபட்டால், குழப்பங்கள் விளையும்; நம் அரசாட்சிக்கும், வர்த்தகத்துக்கும் தீங்கு தோன்றும் எனப் பலவாறுக அஞ்சினர். இங்கிலாந்தில் திருச்சபையும் ஆர்வமோ வளர்ச்சியோ அற்ற நிலையில் இருந்தது. இந்நிலையை மாற்றி அமைத்து, இங்கிலாந்தில் சுவிசேட வாஞ்சை பற்றி எரியவும், உலகின் நாலு பாகங்களிலும் சுவிசேடச் சுடரொளி ஏற்றி வைக்கப்படவும், கடவுள் பயன்படுத்திய கருவி, ஓர் ஏழை—பழஞ் செருப்பைப் பழுது பார்த்த செம்மான். இவர் தான் வில்லியம் கேரி (William Carey).

வில்லியம் கேரி பிற்காலத்தில் ஆற்றிய சேவைக்கோ, எய்திய புகழுக்கோ அறிகுறியாக, அவர் பாலியப் பருவத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் எவையும் நிகழவில்லை. ஏழைப் பெற்ருேருக்குத் தலைமகனுகப் பிறந்த காரணத்தால், பதினன்காம் வயதிலேயே தம் படிப்பை முடித்துக்கொண்டு, குடும்பத்தின் வருவாயைப் பெருக்க வேலையில் அமர்ந்தார். காலணிகள் செய்து வந்த செம்மான் ஒருவரிடம், அத் தொழிலைக் கற்றுக் கொண்டே, அவருக்கு உதவியாளாக வேலையும் பார்த்தார்.

இவ்வகைக் கைத்தொழில்கள், கற்பனையில் ஈடுபடவும், கருத்துக்களை வளர்க்கவும், அனுகூலம் அளிப்பவை. கேரி இவ்வாய்ப்பைச் சிறந்த வகையில் பயன்படுத்திக்கொண்டார். கல்விக் கூடத்துக்குச் சென்று, கல்வி கற்கக் கூடிய வாய்ப்பை இழந்து விட்டதால், கல்வி முயற்சிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டியது தான் என அவர் மனம் கூறவில்லை. வீட்டிலோ, வேலைக் கூடத்திலோ, அறிமுகமானவர் வீடுகளிலோ, எங்கெங்கே புதிய நூல்களைக் காண நேரினும், அவைகளை ஆவலுடன் வாசித்து விளங்கிக் கொண்டார். அறிவைப் பெருக்க அவர் தாமே எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலருக்கு வியப்பை யூட்டின. ஸ்காட் (Rev. Thomas Scott) என்னும் பெரியார், ஒரு கால் இவரது தொழிற் கூடத்தைக் கடந்து போகையில், ''கேரி அவர்களின் கல்லூரி அது" எனத் தம் சகாக்களிடம் கூறினாராம்.

அவர் வேலை பார்த்து வந்த முதலாளியின் வீட்டில் புதிய ஏற்பாடு விளக்க நூல் ஒன்றிருந்தது. இதில் கிரேக்க எழுத்துக்கள் ஒவ்வொன்று காணப்பட்டன. இவைகளை மிகக் கவனமாக வரைந்து சென்று, இம்மொழி அறிந்த ஒருவரின் உதவியால், அவற்றின் உச்சரிப்பு, எழுதும் வகை முதலியவற்றைக் கற்று, கிரேக்க மொழியைக் கற்றார். புதுமொழிகள் கற்பதில் ஆர்வமுள்ளவர். அதில் தனித் திறமையும் அவருக்குண்டு. ஆகவே, இலத்தின் எபிரேயம் ஆகிய மொழிகளையும் தம் முயற்சியாலே கற்றுத் தேர்ந்தார். இவ்வாறு இளம் பருவத்தில் புது மொழிகளைக் கற்ற பழக்கம், பிற்காலத்தில், வங்காளம், சமஸ்கிருதம், மராத்தி ஆகிய கடுமையான இந்திய மொழிகளை இலகுவில் கற்றுப் புலமை பெற உதவியது.

### கடவுளின் கொத்தடிமை

இவ்வகைத் தனித் திறமைகளும், ஆர்வமும் படைத்த மகானின் சேவை திருச்சபைக்குக் கிடைக்க உதவியவருள் ஒருவர் ஜாண் உவார் என்பவர். இவர் கேரியுடன் வேலை பார்த்தவர். இவருடன் ஒரு சுவிசேடக் கூட்டத்துக்குக் கேரி சென்றார். நற்செய்தி தூதுரையின் அரிய அம்சங்கள் அவரைக் கவர்ந்தன. அன்று முதல் இயேசு பிரானின்

கொத்தடிமையானார். பண்பும் பலமுமுள்ள கிறிஸ்தவ வீரராக வளர, இக்கால அனுபவம் அவருக்குப் பெருந்துணை புரிந்தது. அச்சமயம் அவருக்கு வயது பதினெட்டு. தாம் பிறந்து வளர்ந்த ஆங்கிலிக்கன் சபையை விட்டு, இச்சமயம் பாப்திஸ்து சபையில் சேர்ந்து கொண்டார். தாமஸ் ஸ்காட் என்னும் குருவானவர் இவ்விளங் கிறிஸ்தவர் ஆவிக்கடுத்த வளர்ச்சி அடைவதை அக்கறையுடன் கண்காணித்து வந்தார். பிற்காலத்தில் கேரி தன்னில் "கடவுளின் திருச்செயல் ஏதாவது காணபபட்டால், அதற்கு ஸ்காட் ஐயரின் முயற்சியே காரணம்" எனக் கூறுவாராம்.

இதன் பின், வாய்ப்புக் கிட்டும் பொழுதெல்லாம். சுவிசேடத்தைப் பிரசங்கித்தார். வார நாட்களில் செருப்புத் தைக்கும் தொழிலை வருவாய்க்காகச் செய்வார். ஞாயிற்றுக் கிழமைகளில் இலவசமாகச் சபைகளில் பிரசங்கங்கள் செய்வார். இவ்வாறு சுமார் எட்டு ஆண்டுகள் பணிபுரிந்தார், 1787-ஆம் ஆண்டு, இருபத்தாரும் வயதில், குரு அபிடேகம் பெற்று, மோல்டன் கிராமத்தின் சபைப் பொறுப்பை ஏற்ருர். குருவாகச் சேவை செய்யப் போதிய ஆற்றல் அவருக்கு உண்டோ எனச் சிலர் இச்சமயம் ஐயங் கொண்டனர்.

வில்லியம் கேரிக்கும் இச்சமயம் தம் வருங்கால வாழ்க்கையைப் பற்றி இனிய கனவுகள் காணக் காரணம் இல்லை. அவருக்கு இருபது வயதாகுமுன் அவர் வேலை பார்த்து வந்த செருப்புக்கடை முதலாளி மரிக்கவே, அவரது தொழிற் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டு, முதலாளியின் கொழுந்தியையும் மணந்து கொண்டார் கேரியைவிட அவர் மனைவி ஐந்து வயது மூப்பானவர்; கல்வி அறிவும் சுவிசேட வாஞ்சையும் சற்றும் இல்லாதவர். அதனால் கேரியின் வாழ்க்கையில் வேண்டாத வேதனைகள் சுமத்தப்பட்டன. குருவாகக் கேரி அபிடேகம் பெற்ற சமயம் அவருக்குக் கிடைத்த ஆண்டு வருமானம், 16 பவுன், (சுமார் ரூ 200-) அது அவருக்கும், அவர் மனைவி பிள்ளைகட்கும், போதவில்லை. ஆகவே, தொடர்ந்து செம்மான் தொழிலையும் செய்து வந்தார். சிலகாலம் பள்ளி ஆசிரியராகவும் தொழில் புரிந்தார். இதனால் பூகோள சாஸ்திரத்தின் விந்தைகள்

பற்றி அறிய வந்தாரே யன்றி வேறு பயன் யாதும் தோன்ற வில்லை. மீண்டும் செம்மான் தொழிலையே செய்தார். இச் சமயம் பெரியதொரு உலகப் படத்தை வரைந்து, அதில் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஜனத்தொகை, அவர்களின் பழக்க வழக்கங்கள், மதம் முதலான குறிப்புக்களையும் குறித்து வைத்தார். கூக் என்னும் ஆங்கிலேயே மாலுமி ஒருவர் உலகின் பல பாகங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து புதிய நாடுகளைப் பற்றிச் செய்திகளை வெளியிட்டகாலம் இது. "கூக்கின் சுற்றுப் பயணம்" (Cook's Voyages) என்னும் நூலைத் தம் ஆராய்ச்சிக்கு உதவியாகப் பயன்படுத்தினர். இவ்வகைச் சிந்தனைகள், உலகில் கிறிஸ்துவின் நற்செய்தி கேட்டிராத கோடானுகோடி மக்களின் நிலைபற்றி அக்கறை கொள்ளக் கேரியைத் தூண்டியது. ஆகவே ஒரு சமயம், நாட்டிங்காம் என்னும் இடத்தில் பாப்திஸ்து குருக்கள் கூட்டம் ஒன்றில், "கடவுளை அறியாதார் நடுவில் கிறிஸ்து வின் நற்செய்தியைப் பரப்ப வேண்டியது கிறிஸ்தவர் ஒவ் வொருவர் மேலும் விழுந்த கடமை" என்னும் பொருள் பற்றி விவாதிப்போம் எனச் சற்றுத் தயக்கத்துடன் தம் அவாவை வெளியிட்டார் ஆனல், கூட்டத் தலைவர் "இளைஞனே, அமர்ந்திரு. கடவுள் புறமதஸ்தரைக் குணப் படுத்த எண்ணினல், உன் உதவியையும் என் உதவியை யும் தேடாது அவர் செய்யக்கூடும்" என்றார்.

இளம் வாலிபரின் ஆர்வத்தில் பெரியாரின் பேச்சு குளிர் நீரை வார்த்தது போல் அமைந்தது. ஆனல் கேரி மனம் தளர்ந்து போகவில்லை. அவரது வாழ்க்கை முழுவதிலும் ஓர் அற்புத சக்தி நெருக்கடியான வேளைகளிலும் அவர் தோல்வி மனப்பான்மை அடையா வண்ணம் காத்து வந்த தைக் காணலாம். "இச்சக்தியின் இரகசியம் யாது?" எனப் பிற்காலத்தில் வினவியவர் ஒருவரிடம் "உழைப்பு — விடா முயற்சியுடன் உண்மையெனக் கருதிய இலக்கை அடையக் கடவுளின் உதவி பெற்று அயராது உழைப்பதே" எனக் கூறினராம்.

இதன் பின், ஆறு ஆண்டுகள் அந்தரங்கத்தில் தம் அவாவை ஆதரித்தார். பல நூல்களை வாசித்துப் புள்ளி விவரங்களைத் திரட்டினர். பல்வேறு சமயத்தினரிடம்

எவ்வாறு சுவிசேடத் தூதைப் பறைசாற்றுவதெனச் சிந்தித்தறிந்தார். கடல் கடந்து திரவியம் திரட்ட மக்கள் விரைந்து செல்லுங்கால், உலகில் அரிய திரவியமாகிய அழியா ஆத்துமாக்களைக் கடவுளுக்கென ஆதாயப்படுத்த அக்கறை காட்டாது ஏன் இருக்கவேண்டுமெனக் கலங்கினர். இவ்வகை எண்ணங்கள் "விசாரணை" என்னும் அரிய நூலைப் பிறப்பித்தது. 1792-ஆம் ஆண்டு வெளியாகிய இந்நூலால், ஒரே ஒருவரின் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்த சுவிசேடச் சுடர் காட்டுத் தீப்போல் பரவி, பலர் உள்ளத்தில் பற்றி எரிய ஆரம்பித்தது. ஒரு மிஷனெரி சகாப்தம் ஆரம்பமானது.

இதற்குப்பின் காரியங்கள் விரைவாக நிகழ்ந்தன. 1792 ஆம் ஆண்டு நார்த் ஷாம்ப்டன் என்னும் ஊரில் கூடிய பாப்திஸ்துசபைக்குருக்கள்கூட்டத்தில் கேரிஉலகப் பிரசித்திபெற்ற அருளுரை ஒன்றை நிகழ்த்தினர். அதின் சுருக்கம்:-

> "கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்; கடவுளுக்காக அரிய காரியங்களைச் சாதிக்கப் பார்"

என்பது. அக்கூட்டத்தின் இறுதியில், ஒரு மிஷனெரிச் சங்கம் உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வகையில் பிறந்ததே பாப்திஸ்து மிஷனெரிச் சங்கம். இதுவே நேர்முகமாக மிஷனெரிமாரை வேற்று நாட்டுக்கு அனுப்பி, சுவிசேடப்பணி செய்வதற்காக இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட முதல் மிஷனெரிச் சங்கம். இதற்கு முன் ஆரம்பமான நற்செய்தி பிரபல்ய சங்கம் (S. P. G.) கிறிஸ்தவ அறிவு அபிவிருத்திச்சங்கம் (S. P. C. K.) என்ற சங்கங்கள் பண உதவி மட்டும் அனுப்பி, மிஷனெரி ஊழியர்களை ஆதரித்தன.

இப்புதிய சங்கம், தன் ஊழியத்தை இந்தியாவில் ஆரம்பிப்பதெனத் தீர்மானித்தது. வங்காளத்தில் சுவிசேடத்தைப் பிரசங்கிக்க முயற்சி எடுத்த ஜாண் தாமஸ் என்னும் ஒரு மருத்துவர், அப்பாகங்களில் மகத்தான வெற்றியைக் காணலாம் எனக் கூறினர். அவர் இவ்வகை முயற்சியில் பெரும் ஆர்வம் காட்டியதால், அவருடன் சங்கத்தின் சார்பில் இந்தியா செல்லக் கேரியும் முன் வந்தார். 1793-ஆம் ஆண்டு ஜூன் மாதம் கப்பல் ஏறினர்.

இந்தியா — எதிர்பாரா இடர்கள்

ஜான் தாமஸ் பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவர் ஆனால், வாழ்க்கையில் கட்டுப்பாடு, சிக்கனம், கடன் படாமை, ஆகிய கிறிஸ்தவ குணாதிசயங்களைக் கடைப்பிடிக்கப் பழகாதவர். இவருடன் கேரி தன் கூட்டுறவை ஆரம்பித்த தால் அனுபவித்த இன்னல்கள் பல. துவக்கத்தில் தாமஸ் கடன்பட்ட தொகையை இங்கிலாந்தில் செலுத்தவில்லை யாகையால் அவர்கள் பிரயாணம் செய்த கிழக்கு இந்திய வாணிகக் குழுக் கப்பலிலிருந்து இறக்கிவிடப்பட்டனர். பின் ஒரு டச்சுக் கப்பலில் ஏறி, அவர்கள் கல்கத்தா வந்து அடைந்தனர். இந்தியாவிலும், தாமஸ், அவர்கள் செலவுக்காக வைத்திருந்த பணத்தை உதாரமாகச் செல வழித்து, கேரியையும், அவர் மனைவி மக்களையும், ஆதர வற்ற வகையில் அல்லல்குட்படுத்தினர். தாமசின் தன்மை அறிந்த பொறுப்புள்ள சில ஆங்கிலேயர், கேரி தாமசுடன் பணி செய்வதாக அறிந்தவுடன் அவருக்கும் உதவி அளிக்க மறுத்தனர்.

ஆகவே இந்தியா வந்திறங்கிய சில மாதங்களில், கேரி செலவுக்குப் பணமோ, வேலைக்கு வாய்ப்போ இல்லாது, ஒரு இந்துச் செல்வர் அனுமதித்த ஒரு சிறிய வீட்டில் குடியிருந் தார். இங்கிலாந்திலிருந்து உதவி எதிர்பார்க்கவும் வழி யில்லை. அவர்கள் கேரியின் ஆலோசனைக் கிணங்கி மிஷ னெரிமார் தம் தேவைக்கான பணத்தைத் தாமே தொழில் செய்து சம்பாதிக்க வேண்டுமெனத் திட்டமிட்டிருந்தனர். கேரிக்கு, வறுமையும், பட்டினியும், இதற்கு முன் அறிந்தி ராத நூதன அனுபவங்கள் அல்ல. எனினும் இச்சமயம் அவர் வெகுவாக வருந்தினர். மிக்க வற்புறுத்தலின் பேரில் தான் அவர் மனைவி, தன் பிள்ளைகளையும், தம் தங்கையை அழைத்துக்கொண்டு,கேரியுடன் இந்தியா வரச் சம்மதித்தார். இப்பொழுதோ புதிய இடத்தில் உணவு,உடை, சீதோஷ்ணம் ஆகிய மாற்றங்கள் ஊடே, கையில் காசில்லாது, பசி, பட்டினி, பிணி யாவும் தம்மையும், தம் இளம் செல்வங்களை யும் வாட்ட, தம் கணவர் இப்படி வைத்து விட்டாரே என அவர் உள்ளம் குமுறியது. அவர் பேசிய வசை மொழி களின் இசை, கேரியின் செவியில் விழுந்து ஊடுருவிச்

சென்று கொண்டேயிருந்தது. இத்தனை நெருக்கடிகள் ஊடே, கேரி வங்காள மொழி கற்க ஆரம்பித்தார்.

கல்கத்தாவுக்குத் தென்கிழக்கில், சுந்தரவனம் என்னும் அடர்ந்த காடுகள் இருக்கின்றன இதில் நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்ய வரி கொடுக்கவேண்டுவதில்லை. வேட்டையாடி உணவுக்குத் தேவையான ஆகாரத்தையும் சம்பாதிக்கலாம். ஆகவே தம் குடும்பத்துடன் ஆங்குச் சென்று, குடிசை கட்டி, வாழ்க்கை நடத்தினர். இச்சமயம் அவர் எழுதிய கடிதம் ஒன்றில் "எங்களை ஆதரிக்கக் கடவுளைத் தவிர வேறு யாருமில்லை. குடும்பமோ பெரிது; வறுமையோ கொடிது. எனினும் இத்தெய்வத் திருப்பணியை விட்டுவிட உலகம் முழுவதையும் எனக்குச் சொந்தமாக ஈந்திடினும், நான் அதற்குச் சம்மதிக்க மாட்டேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

என்னே! வில்லியம் கேரியின் மனவுறுதி!

கேரி இவ்வாறு அவதியுறுகையில் அவுரித் தொழிற்சாலை ஒன்றில், ஜாண் தாமசுக்கு வேலை கிடைத்தது. அதிபர் உட்னி என்பவரிடம் கேரியின் நிலை குறித்து விளக்கி, அவருக்குமோர் வேலை கொடுக்க வேண்டினர். உட்னி கேரியை மட்டினபதி என்னும் இடத்திலுள்ள அவுரித் தொழிற்சாலையின் மேற்பார்வையாளராக மாதம் ரூ. 200/- சம்பளம் கொடுத்து அமர்த்தினர். அவர் விருப்பம் போல் சுவிசேடப் பிரசாரம் செய்யவும் அனுமதித்தார். கேரியின் தரித்திர நிலை நீங்கியது. ஆனால் இதுகாறும் பொருத்த வேதனைகளால் சோர்ந்து மனம் மடிந்திருந்த அவரது மனைவிக்கு புத்தி மாருட்டம் தோன்ற ஆரம்பித்தது. ஒரு குழந்தையும் இவ்விடத்தில் மரித்தது.

ஆனால் இவ்விடத்தில் கேரி கழித்த ஐந்து ஆண்டுகள், அவர் இந்தியாவிலே பிற்காலத்தில் ஆற்றிய தொண்டின் வெற்றிக்குக் காரணமாய் அமைந்தன. இக்காலத்தில் இந்திய மக்களுடன் நெருங்கிப் பழகவும், இந்து சமய ஒழுங்குகள் பற்றி விளங்கிக் கொள்ளவும், அவருக்குப் போதுமான அவகாசம் கிட்டியது வங்காள மொழி வாயிலாகவே தொழிற்சாலையில் வேலை செய்த மக்களுடன் பேச வேண்டிய அத்தி

யாவசிய நிலை நேரிட்டதால், எளிதில் அம்மொழியைத் தவறின்றிப் பேசக் கூடிய திறமையையும் பெற்றுக் கொண்டார்.

தனித் தொழிலில் ஈடுபட்டதால், பொருளும், பதவியும், வசதியான வாழ்க்கையும், கேரியின் மிஷனெரி வாஞ்சையை அவித்துப் போடுமோ என இங்கிலாந்தில் சங்கத்தின் பொறுப்பாளர் ஐயுற்றனர். ஆனால் கேரி சாதாரண மனிதர் அல்லர்; கடவுள் கிறிஸ்துவில் அருளிய கடைசிக் கட்டளையை நிறைவேற்றத் தடையாக எழுந்த இடையூற்றை எல்லாம் உதறித்தள்ளி, விரைந்து வந்த வீரர் அல்லவோ அவர்! தான் மட்டுமல்லர்; தன்னை நெருங்கியவர், தான் நேசித்தவர் யாவரும் சுவிசேட தூதுப் பணியில் ஈடுபடவேண்டுமென விரும்பியவர். பிற்காலத்தில் தன் மகன் ஒருவருக்கு அவர் எழுதியதாவது:—

> கடவுளின் திருப்பணியில், மிஷனெரிகளாய் உழைப்பதைக் காட்டிலும், சிறந்ததோர் பணி வேறில்லை. பணியின் மூலம் புறமதஸ்தர் கிறிஸ்தவராகும் பயனைக் காணும் பாக்கியம் கிட்டாவிடினும், இத்தனைச் சிறந்த தொழிலில் நிலைப்பதே பாக்கியம். என் அருமை வில்லியம், நம் அருமை இரட்சகரின் அன்பை உலகுக்கு விளக்குவதற்கல்லாது, வேறு எதற்காக நாம் வாழவேண்டும்?

இவ்வகை வினாக்களை விடுத்த வில்லியம் கேரியின் உள்ளத்தில், சுவிசேட சுடர், மட்டினபதியில் அவர் கழித்த காலம் பூராவும் மங்காது எரிந்தது. ஒத்துழைக்க ஏனைய ஊழியர் கிடையாது. மனைவியின் நிலையோ வருந்தத் தக்கது. எனினும் கேரி தவறாது வெளியே சென்று சுவிசேடத்தைப் பிரசங்கித்தார். ஒரு பள்ளி ஆரம்பித்து நடத்தினார். வங்காளத்தில் திருமறையை மொழி பெயர்த்தார். சமஸ்கிருத மொழியைக் கற்று வந்தார். வருங்காலத்துக்காகப் பெருந்திட்டங்களையும் தீட்டினார். இன்னும் மிஷனெரிமார் இந்தியா வந்து தம்முடன் பணியில் ஈடுபடவேண்டும் என்றும், இவ்வூழியரின் மனைவிமார் தம் கணவருடன் ஒத்த வகையில் ஊழியத்தில் அவாக் கொண்டிருக்கவேண்டும்

என்றும், யாவரும் ஒரு மிஷனெரிக் கூட்டுறவாக ஒரே பெரிய வீட்டில் சேர்ந்திருந்து, கூட்டு வாழ்க்கை நடத்த வேண்டும் என்றும். இவ்வகையில் செலவைக் குறைக்கலாம் என்றும், பணியில் செலவிட, கூடிய நேரமும் கிட்டும் என்றும் கனவு கண்டார். கேரியின் கனவுகள் நனவாகக் கூடிய காலம் நெருங்கியது.

## செராம்பூர் பணி

இதுகாறும் கேரி தவருது தம் பணி பற்றி இங்கிலாந்துக்கு எழுதி வந்த கடிதங்கள், பலர் கவனத்தைக் கவர்ந்தன. நான்கு புது மிஷனெரிமார் அவருடன் பணி செய்யவென இந்தியா வந்தனர் ஆனுல் இவர்கள் கிழக்கிந்திய வாணிகக் குழுவின் ஆளுகைக் கடங்கிய கல்கத்தா நகரத்தில் இறங்கக் கூடாதபடி தடை செய்யப்பட்டனர். ஆகவே டச்சுக்காரருக்குச் சொந்தமான செராம்பூரில் சென்றிறங்கினர். இங்கு இவர்களைச் சட்டத்துக்கு மாருக சுவிசேடப் பணி செய்ய இந்தியா வந்த ஆங்கிலேயர் எனக் குற்றஞ் சாட்டி, கைது செய்ய, வெல்லெஸ்லி பிரபு உத்தரவிட்டார். ஆனுல் டச்சுக் கவர்னர் மிஷனெரி ஊழியத்தின் அருமையை அறிந்தவரா யிருந்தமையால், தம் ஆதிக்கத்துக் கடங்கிய பிரதேசத்தில் ஆங்கிலேயர் தம் சட்டத்தை அமுலாக்க அனுமதிக்கவில்லை. இந்நிலையில், கேரி மட்டினபதியில் ஆரம்பித்திருந்த ஊழியத்தை விட்டு, செராம்பூர் செல்ல வேண்டியது அவசியம் என அறிந்தார்.

1800-ஆம் ஆண்டு ஜனுவரி மாதம் 8-ஆம் தேதி கேரி செராம்பூர் வந்து சேர்ந்தார். இச்சிறு நகர் அக்காலச் சூழ்நிலையில் சுவிசேடப் பணி செய்வதற்கு ஏற்ற சிறந்த புகலிடமாக விளங்கியது. சில தினங்களில் ஏற்றதோர் இல்லத்தை மிஷன் சார்பில் விலைக்கு வாங்கி, அதில் யாவரும் கூட்டு வாழ்க்கையை ஆரம்பித்தனர்.

புதிதாய் வந்த மிஷனெரிமாரில் இருவர் சிறிது காலத்தில் இறைவனடி எய்தினர். எஞ்சிய இருவர் கேரியுடன் சேர்ந்து புரிந்த பணி எவரையும் வியப்பில் ஆழ்த்தக் கூடியது. இவர்களில் ஒருவர் வில்லியம் வார்ட்டு என்பார்.

இவருக்கு அச்சுத் தொழிலில் அனுபவம் உண்டு. ஓர் அச்சுத் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்து, அதில் கேரி மொழி பெயர்த்த சுவிசேடங்களை முதலில் அச்சிட்டு வெளியிட்டார். அடுத்தவர், யோசுவா மார்ஷ்மான் என்பார். இவரும் இவரது மனைவியும் ஆங்கிலேயர் பிள்ளைகளுக்கென ஒரு பள்ளி அமைத்துத் திறமையுடன் நடத்தினர். இதனால் பெரும் பயனும், ஆதாயமும், தோன்றியது.

மிஷன் சார்பானச் செலவுகள் முழுவதையும் தாய்ச் சங்கம் ஏற்றுக் கொள்ளத் திராணியற்ற நிலையில் இருந்தமையால், இம்மிஷனெரிமார் தாமே ஏனைய முயற்சிகள் மூலம் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டியதாகியது. ஆனால், இவ்வகையில் கிட்டிய ஊதியம் எதையும், ஒருவரும் தமக்கெனத் தனியாக வைத்துக் கொள்ளவில்லை. யாவும் பொதுப் பணப் பெட்டியிலேயே போடப்பட்டது. தனித் தேவைகளுக்கெனக் குறிப்பிட்ட சிறு தொகை ஒவ்வொரு குடும்பத்துக்கும் கொடுக்கப்பட்டது. பொதுச் செலவுகள் போக எஞ்சிய பணம் முழுவதும், சுவிசேடத்தைப் பரப்பும் முயற்சிகளுக்காகவே செலவிடப் பட்டது. கேரி தம் வாழ்நாளில், சுமார் 46,000 பவுனை (சுமார் 6 இலட்சம் ரூபாய்) மிஷனுக்காகக் கொடுத்திருக்கிறார். அதே காலத்தில் மிஷனெரிச் சங்கம் கொடுத்த பணம் எல்லாம் 2,000 பவுன் தான் (சுமார் 26,000 ரூபாய்).

கேரி, மார்ஷ்மான், வார்டு ஆகிய மூவருக்குள்ளும் துவக்க முதல் முடிவு வரை, ஒற்றுமையும், ஒரே நோக்கமும் குடி கொண்டிருந்தன. ஒருவரை ஒருவர் தாங்கி, வெளியிலிருந்து தோன்றிய இடர்கள் யாவையும் ஒருங்கு சேர்த்துப் பொறுத்து, எவ்வகைப் பிரிவினைக்கும் இடமளிக்காது தம்மைக் காத்துகொண்டது, இவர்கள் அடைந்த பெரிய வெற்றிக்குக் காரணமாய் அமைந்தது. ஒகில்வி என்னும் சரித்திராசிரியர், இப்பெரியார் தீமைகளை எதிர்க்கவும், நலன் விளைக்கும் முயற்சிகளில் ஈடுபடவும், தேவையான பணத்தைத் தயாராக வைத்திருந்த செயலும், அவருக்குப் பெரும் சாதகமாக அமைந்தது என்கிறார். இப்பண

வசதி கிட்டுவதற்கு, முதலில் தம் செலவுகளைச் சுருக்கி, பெரும் பாகத்தை மிஷன் பொது நிதியில் சேர்த்ததே காரணம்.

இக்காலத்தில் இந்தியாவின் தலைநகர் கல்கத்தா. இச் சமயம் கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி பிரபு. இந்தியாவில் பணியாற்ற வரும் அரசாங்க ஊழியருக்கு, இந்திய கலாசாரம், மொழி அறிவு முதலியவை பற்றி அறிவு புகட்ட கல்கத்தாவில் ஒரு கல்லூரியை நிறுவினர். இதில், முதலில் வங்காளமும், பின்னர் சமஸ்கிருதமும் மராத்தியும் கற்றுக் கொடுக்க, கேரி அழைக்கப்பட்டார். இப் பணியைக் கேரி ஏற்றதால், மிஷனுக்குப் பெரும் பணவுதவி கிட்டியதோடு, மிஷனெரிமாரின் பணிக்கு ஆதரவும், அவர்கள் முயற்சிகள் பற்றி நல் எண்ணமும், கல்கத்தாவில் பொறுப்பான பதவிகள் வகித்த அரசாங்க அதிகாரிகட்குள் நிலவியது. 1813ஆம் ஆண்டு கம்பெனியின் சாசனம் (Charter) புதுப்பிக்கப்பட்ட பொழுது, மிஷனெரிமார் தடையின்றி இந்தியா சென்று உழைப்பதற்கு உத்தரவளிக்கப்பட்டது. இச் சிறப்புரிமை அளிக்கப்படுவதற்குக் காரணமாய் அமைந்தது, கேரியும், அவரின் சகாக்களும் ஆற்றிய பழுதற்ற திருத் தொண்டின் ஒப்புயர்வற்ற மாதிரியேயாம்.

மார்ஷ்மான், வார்டு, கேரி ஆகிய மூவரும் தத்தம் தனித் தொழில்களுக்கென ஓரளவு நேரத்தை ஒவ்வொரு நாளும் ஒதுக்கி வைத்தனர். பின்பு சுவிசேடத்தைப் பிரசங்கித்தல், திருமறையை மொழி பெயர்த்தல், துண்டுப் பிரதிகளை வினியோகம் செய்தல் முதலான பல்வேறு கிறிஸ்தவத் தொண்டுகளையும் தவருது செய்து வந்தனர். இப்பணிகளில், திருமறையை இந்திய மொழிகளில் வெளியாக்க வேண்டும் என்பதில், கேரி தனிக் கவனம் செலுத்திஞர்.

### திருமறை மொழி பெயர்ப்பு

கேரி மட்டினபதியில் இருந்த சமயம், வங்காளத்தில் மொழி பெயர்த்த புதிய ஏற்பாட்டு நூல், முதல் வெளியீடாக வார்டின் அச்சகத்திலிருந்து வெளியாகியது. இந் நூல் குறையின்றி இருந்ததெனக் கூறுவதற்கில்லை. தம் வாழ்நாள் முழுவதும் கேரி தாம் மொழி பெயர்த்த வேதா

கமப் பகுதிகளை மீண்டும் மீண்டும் திருத்தினுர். இந்திய மொழிகள் யாவிலும் புதிய ஏற்பாட்டு நூலையாகிலும் வெளியாக்கி விட வேண்டுமென விரும்பினுர். ஆனல், இந்திய மொழிகளின் எண்ணிக்கை எத்தனை அதிகம் என்பதை அவர் அச்சமயம் அறிந்தார் அல்லர். சமஸ்கிருதம், ஹந்தி, மராத்தி, ஒரியா என்னும் மொழிகளில் திருமறை வெளியாகியது. இந்தியாவுக்கு அப்பால் உள்ள சீனுவிலும் திருமறையில் சுடரொளி வீசவேண்டு மென்று எண்ணினர். இம் மொழியில் புலமை பெற்ற மார்ஷ்மான் பதினைந்து ஆண்டுகள் சீனமொழி கற்றுர். பின்பு சீனமொழியில் முதல் வேதாகமத்தை வெளியாக்கினுர். கேரியின் ஆயுள் காலத்தில், திருமறை முழுவதும் ஆறு மொழிகளிலும், புதிய ஏற்பாடு இருபத்து மூன்று மொழிகளிலும் வெளியாயின. இன்னும் வேறு ஐந்து மொழிகளில், வேதத்தின் சில பாகங்கள் வெளிப்பட்டன. இவை எல்லாம் பெரும்பாலும் கேரியால் மொழிபெயர்க்கப் பட்டனவாம். சில வெளியீடுகள் அவரது மேற்பார்வையில் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டன,

எவ்வாறு இத்தனை மொழிகளை கற்றுத் தேர்ந்தார் என, அவரிடம் வினுவியவர் ஒருவரிடம், "ஒருவர் தாம் எத்துணை திறமை படைத்தவர் என்பதைத் தாம் ஒரு முயற்சியில் ஈடுபடுமுன் அறிந்து கொள்ள முடியாது" என்றுராம். புது மொழி கற்கத் தனித் திறமை இருந்ததுடன், கேரி கவனத்துடன் தம் ஒவ்வொரு விநாடியையும் திட்டமிட்டுப் பயன் படுத்தியதால் தான், மூவர் செய்து புகழ் எய்தியிருக்கத் தக்க பணி யாவையும், தாம் ஒருவரே செய்து முடித்தார்.

### சுவிசேடப் பணி

திருமறையை இந்திய மொழிகளில் வெளியாக்கியதின் சிறந்த நோக்கம், அதின் சக்தி மிகுந்த அற்புதச் செய்தி மக்களைக் கிறிஸ்துவினண்டை இழுத்து வர வேண்டும் என்பதற்காகவே. கல்கத்தாவில் ஏழைகள் வசித்த 'லால்பசார்' பகுதியில், கிரமமாக நற்செய்தித் தூது அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு தினமும், யாராவது ஒருவர் வெளிச் சென்று பிரசங்கித்து வருவார். காலப் போக்கில் புது ஊழியர் தொகை பெருகவே, அலகபாத், ஆக்ரா, சிட்டகாங்,

ஆஜ்மீர், நாகபுரி, டெல்லி ஆகிய இடங்களுக்குச் சென்று, பணியாற்றி வந்தனர். மேலும் ஜாவா, இலங்கை என்னும் தீவுகளுக்கும், இந்தோனேசியாவில் அம்போனு என்ற இடத்திற்கும் மிஷனெரிமார் அனுப்பப்பட்டனர்.

1803 ஆம் ஆண்டு முதற் பல சிறிய மிஷன் நிலையங்களை ஆங்காங்கே நிறுவி, அவைகள் ஒவ்வொன்றிலும் ஒரு மிஷனெரியையும், இரண்டு இந்தியக் கிறிஸ்தவரையும் நியமித்து வைத்தனர் இவரும் தம் தேவைகளை நிவிர்த்திக்க ஏதாவதொரு தொழில் செய்து தீரவேண்டும். ஓய்வு வேளைகளில் சுவிசேடத்தைப் பிரசாரம் செய்வார். இத்திட்டம், 1813ஆம் ஆண்டு வாணிகக் குழுவின் சாசனம் புதுப்பிக்கப்பட்ட போது, இத்தியாவில் மிஷனெரிப் பணிக்கு எதிராயிருந்த தடைகள் நீங்கிய பின்பு, அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

கேரி செராம்பூர் வந்து சேருமட்டும், அவர் முயற்சியால் எவரும் கிறிஸ்தவர் ஆகவில்லை. எனினும் நம்பிக்கையைக் கைவிடாது உழைத்தார். 1800 ஆம் ஆண்டு கிருஷ்ண பால் என்னும் சூத்திரர் கிறிஸ்தவர் ஆக முன் வந்தார். இவரே முதற் கிறிஸ்தவர். பின்பு அவர் மனைவி, கொழுந்தி ஆகியவரும், திருமுழுக்குப் பெற்றனர். இதன்பின், பிராமணர், முகம்மதியர் முதலான பலதரப்பட்ட மக்களும், கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்பட்டனர். இவர்கட்குள் எள்ளளவும் சாதி வித்தியாசம் கிடையாது என்பது மெச்சத் தக்கது. முதற் கிறிஸ்தவர் மரித்த பொழுது, அவரது பிரேதப் பெட்டியை, முன் முகமதியராயிருந்தவர் ஒருவர், இந்துப் பிராமணராயிருந்தவர் ஒருவர், இரு ஐரோப்பியர், ஆகிய நால்வரும், பயபக்தியுடன் சுமந்து சென்றனர். "சாதிக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெரியத்தக்க அவ்வளவு பெரிய சக்தி இப்புது மார்க்கத்திற்கு இருக்கிறதே!" என, இக்காட்சி கண்டவர் அனைவரும் அதிசயித்தனர்.

1810ஆம் ஆண்டு இக்கிறிஸ்தவரின் தொகை 300 ஆகியிருந்ததெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் திறமையுள்ளவரைச் சுவிசேடப் பணிக்காகவும், பள்ளிகளில்

ஆசிரியத் தொழிற்காகவும் பயிற்சி அளித்தனர். வார்டு என்பார் பின்வருமாறு எழுதிவைத்தார் :—

> கடவுள் எம் முயற்சிகள் மூலம் இந்தியரை உயர்ப்பித்து, உணர்வடையச செய்யவேண்டும். அவர்கள், "மேல் நாட்டு மிலேச்சரால் கொண்டு வரப்பட்ட அருவருக்கப்படும் கோட்பாடுகள்" எனப் புறக்கணிக்கப்படும் சுத்த சுவிசேட சத்தியத்தைப் பிராமணரின் செவியில் இன்னிசை அமுதமாகப் பாயவைக்க வேண்டுமே. திருமறையின் அடிப்படையில், கிறிஸ்துவே வாக்களிக்கப்பட்ட உலக இரட்சகர் என்பதையும் விளக்கவேண்டும். இத் திருப்பணியை இந்தியரே ஏற்கும் நிலை தோன்ருவிடின், இம்மாபெரும் நாட்டில் சுவிசேடம் எளிதில் பரவும் என நம்புவதற்கு இடம் இல்லை.

இவ்வாறு, வார்டு தாம் வந்த மூன்ரும் ஆண்டிலேயே எழுதியுள்ளார். கேரியும் இந்தியரைத் திருப்பணிக்காகப் பக்குவப்படுத்துவதில் ஆர்வம் காட்டினர். மட்டினபதியில் கேரி தொடங்கியிருந்த ஆரம்பப் பள்ளி பயனுள்ளதாய்த் தோன்றியதால், அது போன்ற 126 பள்ளிகள், 1818 ஆம் ஆண்டுக்குள், பல்வேறு இடங்களில் நிறுவப்பெற்றன. இவைகளில் 10,000 மாணக்கர் பயின்றனர். இவைகளில், தாய்மொழியில், பொதுக் கல்வி புகட்டினர். கிறிஸ்தவப் போதனையும், நல்லொழுக்க விதிகளும், பள்ளிப் பயிற்சியும் மாணவர் பெற்றனர்.

1821-ஆம் ஆண்டு செராம்பூர்க் கல்லூரி ஆரம்பமாயிற்று. அயராது உழைத்து. தாம் சேமித்து வைத்திருந்த நிதியைக் கொண்டே, செராம்பூரின் மும்மணிகளாக விளங்கிய கேரி, மார்ஷ்மான், வார்டு என்பார் மூவரும் இதற்குத் தேவையான கட்டடங்களைக் கட்டினர். கட்டடங்கள், இப்பெரும் மக்களின் உயரிய நோக்குக்கும் அவாவுக்கும் ஏற்ற வண்ணம், வனப்பும் கவர்ச்சியு மிக்கனவாய் எழும்பின. கீழ்நாட்டு இலக்கியங்களின் நயத்தை இவர்கள் அறிந்தவராயிருந்தமையால், அவைகளையும், மேல்நாட்டு விஞ்ஞானத்தையும், இக்கல்லூரியில் கற்றுக் கொடுக்கத்

திட்டமிட்டனர். இக்கல்லூரியில் இந்துக்களும், கிறிஸ்தவரும் கல்வி கற்பார். இவர்களுக்குப் பொதுக் கல்வி பயனளிக்கும். கிறிஸ்தவ மாணுக்கரில் சிலர் சுவிசேடப் பணியில் ஈடுபடப் பக்குவம் அடைதல் வேண்டும். இத்தகையோர் தேவையான பொது அறிவையும், இறையியல் அறிவையும், பெறவேண்டும். ஆகவே இறையியற் கல்வி கற்பிக்க அங்குத் தனித்துறை அமைக்கப்பட்டது. பொது அறிவும் மத போதனையும் சிறந்த வகையில் பெற்ற இந்திய கிறிஸ்தவரும், குருக்களுமே, இந்தியாவில் கிறிஸ்தவ சமயத்தை நிலை நாட்ட முடியுமெனக் கேரி நப்பினர்.

> இந்தியாவில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் பணியை அங்கு மிங்குமாகச் சிதறிக் கிடந்து பணி செய்யும் சில மிஷனெரிமாரால் நிறைவேற்றி வைக்க முடியாது. இந்தியக் கிறிஸ்தவர் ஒத்துழைக்க முன் வரவேண்டும். இவர்கள் இந்நிலையை அடைவதற்குப் போதிய பொது அறிவையும், மத போதனையையும் திட்டமிட்டுப் புகட்ட வேண்டும். இவ்வகை முயற்சிகள் சுவிசேடத்தைப பரப்பும் பணியுடன் சேர்ந்து நடைபெறவேண்டும் .. ......... இவர்களிலும் குருக்களாகப் பணியாற்ற அழைக்கப்படுவோர் ஆவிக்கடுத்த வகையில் மிகச் சிறந்த கிறிஸ்தவப் பண்பு படைத்தவராயும், அறிவுத் துறையில் எவ்வளவுக்கதிகம் அறிவை விருத்தி செய்யக் கூடுமோ அவ்வளவுக்கு விருத்தி செய்து கொண்டவராகவும் இருத்தல் தேவை.

இன்றும் செராம்பூர் கல்லூரி கீழ்நாடுகளில் கிறிஸ்தவ ஊழியரைப் பயிற்றும் தலைமை இடமாய் விளங்குகின்றது.

சமூகப் பணி

கிறிஸ்துவின் ஆவியால் பரிபூரணமாய் உயிர்ப்பிக்கப்பட்ட அடியான் கேரி என்பது, அவர் இத்துறையில் ஆற்றிய சேவையினுல் இனிது விளங்கும். கைம் பெண்களைக் கணவன் பிரேதத்துடன் சேர்த்துக் கட்டிச் சுட்டெரிக்கும் 'சத்தி' என்னும் கொடிய பழக்கம், தெய்வ நதி எனக் கருதப் பெற்ற கங்கையில் இளங் குழந்தைகளைத் தூக்கி

எறிந்து கொன்று புண்ணியம் தேடுதல், ஜகர் நகரத்தில் கோவில் தேர் ஊர்வலம் வருங்கால், அதின் சக்கரத்தின் கீழ் விழுந்து உயிர் நீத்தல், முதலான பல தீய வழக்கங்கள், இந்திய சமுதாயத்தைக் கெடுத்துப் பாழாக்கிச் சீர்குலைத்து வந்தன. கேரி இந்தியா வந்தது முதல் இப்பழக்கங்களை எதிர்த்துப் போராடி வந்தார். 1818 ஆம் ஆண்டு முதல், இம் மூவரின் முயற்சியால், 'சமாசார் டர்பன்' என்ற வங்காள வாரப் பத்திரிக்கையும், 'இந்தியாவின் நண்பன்' என்ற ஆங்கிலேய மாத பத்திரிக்கையும் வெளியாயின. இவை பொதுமக்களில் நல் மனச்சாட்சி உருவாக்கும் சிறந்த கருவிகளாக அமைந்தன. இத்தீமைகளை ஒழிக்க இந்தியாவிலும், இங்கிலாந்திலும் கூட்டம் கூட்ட வேண்டுமென மக்கள் கோரினர். இறுதியாக 1829-ஆம் ஆண்டு, சத்திப் பழக்கம் சட்டத்துக்கு விரோதமான குற்றம் எனத் தீர்மானம் பிறந்தபொழுது, அத்தீர்மானத்தை வங்காளத்தில் மொழிபெயர்க்குமாறு கேரியிடம் கொடுத்தனர். அன்று ஞாயிற்றுக்கிழமை. கேரி ஆராதனை நடத்தப் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். ஆனால் உடனடியாக வேறொருவரை ஆராதனை நடத்த ஒழுங்கு செய்து விட்டு, தாம் அதனை மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டார். சில மணி நேரம் பிந்தினால், அருமையான சில பெண்களின் உயிர்கள் அநியாயமாய்க் கொடுமைக்குள்ளாகி மடிந்து போகுமே என்பது அவரின் அச்சம்.

### மதிப்புக்குரிய மிஷனெரி

வில்லியம் கேரியின் முதல் மனைவியார், 1807-ஆம் ஆண்டு உயிர் துறந்தார். சில காலத்துக்குப் பின்பு கேரி தமக்கேற்ற பண்பும், பக்தியும் நிறைந்த அம்மையார் ஒருவரை மணந்து, பதின்மூன்று ஆண்டுகள், அவருடன் இல்லறம் நடத்திக் காலம் கழித்தார்.

ஆனால் மிஷன் சம்பந்தமாக எழுந்த சிக்கல்கள் பல. ஒரு முறை பெரும் தீ விபத்தால், பல அரிய கைப்பிரதிகளும், அச்சுக்கூடமும் அழிந்து மாபெரும் நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் இவ்விடர் பற்றிப் பல்வேறு நாடுகளில் செய்தி பரவி, இத்தொண்டர்களின் அரிய சேவை பற்றிப் பெருமக்கள்

அறிய வந்தனர். அவர்கள் சிலர் பண உதவி செய்தனர். ஆகவே முன்னைவிடச் சிறந்த வகையில் மறுமுறையாகக் கட்டடங்கள் எழுந்தன. வேலை தொடர்ந்து நடந்தது. வாணிகக் குழு அரசாங்கம் துவக்கத்தில் பல வகைகளில் இன்னல் விளைத்தது. இங்கிலாந்தில் சங்கத்தின் பொறுப்பை தாங்கி வந்த தலைவர்கள் மாறிப்போனபொழுது அவர்கள் இடத்தில் வந்த புதியவர்கள், கேரி, வார்ட், மார்ஷ்மான் என்னும் பெரியோர்கள் நடத்தையைக் கட்டுப் படுத்தவும், கண்டிக்கவும் முற்பட்டனர். புதிதாகச் சங்கத் தின் சார்பில் மிஷனெரிமாராய் வந்தவரும், இவ்விரு திறத் தினர்க்குமிடையில் உறவு முறியக் காரணமான செய்கை களில் ஈடுபட்டனர். இறுதியாக, நிலைமை சீர் அடையா தெனக் கண்ட கேரியும், அவர் சகாக்களும், தனியாகப் பிரிந்து கொண்டனர். தாம் கடவுளின் திருப்பணியைக் களங்கமற்ற வகையில் நிறைவேற்றுகிறோம் என்பதைக் குறித்து, அவர்கள் மனமே அவர்கட்கு சாட்சியாய் விளங் கியது. ஆகவே குழப்பங்கள் மத்தியிலும் குறைகூருது, திட மனதுடன் அவர்கள் தெய்வ பணியில் ஈடுபட்டு, பிறர் நம்பிக்கைகளைப் பெற்றனர்.

கேரி தனி அன்புடன் பேணி நீர் பாய்ச்சி வளர்த்த தாவரத்தோட்டம் பற்றி இவண் குறிப்பிடாது போவது கூடாது. சிறுவயது முதல் செடி கொடிகளைக் கவனத்துடன் ஆராய்வார். பின்பு செராம்பூரில் பற்பல தாவர வர்க்கங் களும் பூச்செடிகளும் அடங்கிய தோட்டம் ஒன்றை உண்டாக்கி, அதை மேற்பார்வை செய்து வந்தார். ஆசியா கண்டத்திலேயே அரியதொரு செல்வமாக அது கருதப் பட்டது. அத்தோட்டத்தின் சிறப்பும் இத்துறையில் அவர் பெற்றிருந்த நுண்ணிய அறிவும் மேல் நாடெங்கும் எட்டி அவருக்குப் பெரும் புகழைச் சம்பாதித்துத் தந்தது. இத் துறையில் பட்டம் பெற்றுப் புகழ் எய்திய கலைஞர்கள், தம் சுய முயற்சியால் கற்று முன்னேறிய கேரியிடம் விளக்கம் கேட்க வந்தனர். ஓய்வு நேரத்தை இவ்வகை ஊக்கம் அளிக்கக்கூடிய பொழுது போக்கில் செலவிட்டதும் கேரியின் பொது வாழ்வு வளம் அடைய ஓரளவு அனுகூலம் செய்தது எனக் கூறலாம்.

காலம் செல்லச் செல்லக் கேரியின் புகழ் பல திக்கு களிலும் பரவியது. இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய கண்டங்களில், புரோட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர் புதிய ஊக்கத்துடன் அவரது மிஷனெரிப் பணியை ஆதரிக்க முன் வந்தனர். அவர் வாழ்வின் முன் மாதிரியால் தூண்டப் பட்டு, சுவிசேடப் பணி செய்ய இந்தியாவிற்கு வந்த மிஷ னெரிமார் பலர். இவர் யாவரும் கேரியைத் தேடி, அவர் வாய்மொழிகளுக்குச் செவி சாய்க்கவும் அவரிடமிருந்து ஆலோசனைகள் பெறவும் செராம்பூர் வந்தனர்.

தமது அனுபவத்தின் அடிப்படையில், கிறிஸ்துவின் தொண்டர் ஒருவர், உலகில் அறிவும் பெருமையும் படைத்த மக்களோடு எவ்வாறு பழகவேண்டுமெனத் தம் மகன் ஜேப சுக்கு எழுதிய அறிவுறையை இவண் அறிந்து கொள்ளுதல் நலம்.

> யாவருடனும் அன்பாகவும், பெருந்தன்மை யுடனும் நடந்து கொள். ஆனால் நீ தாழ்ந்தவன் அடுத்தவர் உயர்ந்தவர் என்னும் தப்பபிப்பிராயத் தில் எழும் அடிமை மனப்பான்மை உன்னில் தோன்றக்கூடாது. நீயும் ஒரு தனி மனிதன் என் பதை உணர்ந்து கொள். எச்சந்தர்ப்பத்திலும், யாவருடனும், மாயமற்ற மனதோடு, உண்மையாய்ப் பழகு. இதனால் பிறரின் நன்மதிப்பை நீ பெறு வாய். சாதாரணமாக உலகில் பெருமக்களெனக் கருதப்படுவோரின் கூட்டுறவை நாடாதே. ஆனால் அவர்களுடன் பழக வேண்டிய நிலை தோன்றின் உன் மதிப்பும் நேர்மையும் குறையாத வகையில் அவர்களுடன் பேசிப் பழகு. இதற்கு அனுகூலமாக சரித்திரம், பூகோளம், மக்கள், காரியங்கள் ஆகிய பல பொருட்களைப் பற்றிப் போதிய அறிவு பெறப் பெரு முயற்சி செய். நற்பண்பு படைத்த பெருமகன் (gentleman) தான் ஒரு கிறிஸ்தவனுக்கடுத்த சிறந்த குணம் படைத்தவன். ஆனால் ஒரு கிறிஸ்த வன் நற்பண்புகளுக்கு உறைவிடமானவன். ஒரு வன் பண்பு படைத்த பெருமகன் ஆவதற்குப்

பணமோ, சிறந்த உடற்கட்டோ உதவா. ஆனால் விரிவடைந்த மனப்பான்மையும் எளிதில் பழக உதவும் நடத்தையுமே அவசியம்.

கேரியின் மூத்த குமாரன் பெலிக்ஸ் (Felix) என்பவர் மிஷனெரியாகப் பர்மாவுக்குச் சென்றவர். பின்பு பிரிட்டீஷ் அரசாங்கப் பிரதிநிதியாய்ப் பர்மிய அரசனின் கோர்ட்டுக்குச் செல்ல ஒப்புக்கொண்டார். இதைக் குறித்து கேரி, "பெலிக்ஸ் ஒரு பெரிய மிஷனெரியா யிருந்ததை விட்டுச் சுருங்கி, ஒரு பிரதிநிதி ஆகிவிட்டான்" எனக் கூறி வருந்தினாராம். மிஷனெரிப் பணியைவிட வேறு சிறந்த பணி உலகில் இல்லை என்பது அவரது திடமான நம்பிக்கை.

கேரிக்குப் பின் கல்கத்தாவில் பெருந் தொண்டாற்றிய அலெக்சாந்தர் டப் Alexander Duff) கேரியின் அந்திய காலத்தில் அவருடன் கலந்து ஆலோசனை செய்து, வருங் காலத்துக்குரிய திட்டங்களைத் தீட்டுவது வழக்கம். ஒருகால் இப்புதிய மிஷனெரி பெரியவரின் வாழ்க்கைக் குறிப்புக்கள் பற்றிக் கேட்டறிந்து, ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தார். இந் நிலையில் அவர் விடை பெற்றுச் சென்றார். ஆனால் படுக்கையில் பலகீன நிலையிலிருந்த கேரி அவரை மீண்டும் அழைத்து "நீர் அடிக்கடி பண்டிதர் கேரி, பண்டிதர் கேரி என, கேரியின் பெருமைகள் பற்றியே பேசுகிறீர் நான் மரித்த பின்பு பண்டிதர் கேரியைப் பற்றி ஒன்றும் கூறுதேயும். பண்டிதர் கேரியின் இரட்சகரைப் பற்றியே பேசும்" என்றார். இப்புனித வேண்டுகோளை டப் ஒருக்காலும் மறக்கவில்லை.

1834-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 9-ஆம் தேதி கேரி இறைவனடி எய்தினார். அவர் வேண்டுகோளின்படி எளிய முறையில் அடக்கச் சடங்குகள் நடைபெற்றன. கல்லறையின் மேல்.

வில்லியம் கேரி, பிறந்தது ... ... .. மரித்தது ... ... ...

"யாது மற்ற ஏழை நான்
உம் அருள் கரத்தில் சாருவேன்"

எனனும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. துவக்க முதல் முடிவுவரை எளிய உள்ளத்தோடு தன்னல மற்ற வாழ்க்கை நடத்தி முடித்தார். இதனாலேயே கடவுட்கென அரிய காரியங்களைச் சாதிக்க கூடியவரானார்.

இந்தியத் திருச்சபை வரலாற்றில் மட்டுமின்றி உலகத் திருச்சபை வரலாற்றிலும், கேரிக்குத் தனி இடமுண்டு. தற்கால சுவிசேட முயற்சிக்கு மூல புருடர் அவரே. அவர் எழுதிய 'விசாரணை' என்ற நூலால் விழிப்படைந்தவர் இவரின் அரிய சேவை பற்றிச் செவியுற்றுச் செயலில் ஈடு பட்டனர். எல். எம். எஸ்., சி. எம் எஸ் கிறிஸ்தவ இலக்கியக் கழகம், மெதடிஸ்து மிஷனெரி சங்கம் முதலிய பலப் புதுச் சங்க முயற்சிகள் எழும்பின. இந்தியாவிலும் மிஷனெரிமார், தங்கு தடையின்றி வந்து பணிபுரிய வாயில் திறக்கப்பட்டது. கேரியின் வாழ் நாளில், 18 இடங்களில் மிஷன்கள் நிறுவியிருந்தார். கல்வி முயற்சிகள், சமூக சீர் திருத்தம், மொழி பெயர்ப்புத் தொண்டு யாவும், இந்திய நாட்டில் சிலுவைக் கொடியை உயர்த்திப் பறக்கவிட வேண்டுமென்னும் ஒரே நோக்கின் அடிப்படை வாயிலாகவே துளிர்த்தன.

19-ஆம் நூற்றுண்டின் துவக்கத்தில் தொண்டாற்றிய இவ்வீரர் சுவிசேடத்தைப் பிரசங்கிப்பதென்பது, இந்தியாவைப் போன்ற இந்து நாட்டில் நேர் முகமாகப் பிரசங்கிப்பதுடன் நின்று விடுவதன்று என உணர்ந்தார். அக்காலத்தில் உருவாகி வந்த புதிய சூழ்நிலையில், கிறிஸ்தவர், இரட்சகரின் அன்பை உலகுக்கு விளக்கும் வழி வகைகளைக் கண்டறிந்து, அவைகளில் ஈடுபட்டார் இத்தகைய உள் உணர்வடைந்த உத்தமரை இந்தியத் திருச்சபை, மூலைக் கற்களின் முதற் வரிசையில் பெற்றுள்ளது பெறற்கரிய பெரும் பேறு ஆகும்.

இறையியற் கல்வி வளர்ச்சி

வில்லியம் கேரி ஆரம்பித்து வைத்த செராம்பூர் கல்லூரி (பல்கலைக் கழகம்) தான் இன்று நம் நாட்டில் குருத்துவ பணிவிடைக்கெனப் பயிற்சி பெறுவோரின் கல்வித் திறமை பற்றிப் பரிசோதித்து, M. Th., B D., போன்ற பட்டங்களையும், L. Th. டிப்ளோமா (diploma) வையும் அளிக்கின்றது. பல்வகைச் சபைப் பிரிவினர் தத்தம் சபைகளின் திருப்பணிக்கென நடத்தும் இறையியற் கல்லூரிகள் செராம்பூர் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ளன. தமிழ் நாடு இறையியல் கல்லூரி (திருமறையூர்) போன்று, பல கல்லூரிகள் பல பிர

தேசங்களில் நிறுவப்பெற்றுள்ளன. ஒரே மொழி பேசும் இடங்களிலேயுங்கூட பலபல சபைகள் வெவ்வேறு இறையியற் கல்லூரிகளை அமைத்துள்ளன. தமிழ் நாட்டில் தானும் திருமறையூர்க் கல்லூரி, தமிழ் பேசும் தென் இந்தியத் திருச்சபை அத்தியட்சாதீனங்களின் திருப்பணியாளருக்குப் பயிற்சி அளிக்கின்றது; அப்படியே நாகர்கோவிலில் கண் கார்டியா செமினரி, இந்திய எவாஞ்சலிக்கல் லுத்தரேனிய சபைக்கும், தரங்கம்பாடியிலுள்ள குருசாலை, தமிழ் எவாஞ்ச லிக்கல் லுத்தரேனிய சபைக்கும், திருப்பணியாளரின் பயிற்சி யைக் கொடுத்து வருகின்றது. ஒரே மொழியில் பல சபைப் பிரிவினர் தத்தம் கல்லூரிகளைத் தனித்தனியாக வைத்து நடத்துவதில் பல வகைகளில் வீண் செலவுகள் ஆகின்றன. கல்லூரிகளில் முற்போக்கான வசதிகளைச் செய்வதும் இயலா மற் போகின்றது. இதற்கு மாருக, கூட்டு முயற்சியில் சேர்ந்து யாவரும் ஈடுபட்டால் பெரும் பயன் தோன்றும். இவ்வகை ஐக்கிய இறையியற் கல்லூரி ஆந்திரா பிரதேசத் தில் தெலுங்கு மொழியில் இராசமுந்திரி (Rajamundry) என்ற இடத்தில் இவ்வாண்டு முதல் ஆரம்பமாயுள்ளது. இந்தி பேசும் எல்லைகளிலும் அத்தகைய முயற்சி கூடிய சீக்கிரம் கைகூடும் வாய்ப்புள்ளதாய்ப் தோன்றுகின்றது. ஏனைய பாகங்களிலும் இத்தகைய ஐக்கிய இறையியற் கல்லூரிகள் அமைக்கப்படுதல் நலம்.

செராம்பூர் கல்லூரி, பங்களூர் ஐக்கிய இறையியற் கல்லூரி, ஜபால்பூரில் லெனர்டு இறையியற் கல்லூரி (அமெரிக்கன் மெதடிஸ்து சபை), சென்னையில் லுத்தரேனிய இறையியற் கல்லூரி, கல்கத்தாவில் பிஷப் இறையியற் கல்லூரி (ஆங்கிலிக்கன் சபை), போன்றவை ஆங்கில மொழியில் B D பட்டத்திற்கும், ஒருவாறு அதற்கு மேற் படிப்புக்கும் பயிற்சி தருகின்றன. ஆனால் இறையியலின் மேற்படிப்புக்காக மேல் நாடுகளுக்கே இன்று பலர் செல்கின் றனர். மேலை நாட்டுச் சூழ்நிலையில், அந்நாடுகளின் பண் பாடு, கலாசாரம் ஆகிய அடிப்படைகளின்கண் தோன்றி வளர்ந்துள்ள எண்ணங்கள் பெருமளவில் நம்நாட்டுச் சூழ் நிலையில் உதவக் கூடியனவாய் இருப்பதில்லை. ஆகவே, நம் நாட்டிலேயே இறையியல் உயர் கல்வி பெற வாய்ப்புக் கள் கொடுப்பதற்கென முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

# 2

## ஹென்றி மார்ட்டின்

இந்தியக் கிறிஸ்தவத் தொண்டர்களின் வரிசையில், ஹென்றி மார்ட்டின் (Henry Martyn) தனிச் சிறப்புக்கு உரியவர். இவர் முகம்மதியர்க்குள் கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துச் சென்று, முற்பணி யாற்றிய முதல் வீரர். அதுகாறும் மிஷனெரி ஊழியம் பற்றி அக்கறை காட்டாதிருந்த ஆங்கிலிக்கன் திருச்சபை, தன் பொறுப்பை உணர, கடவுள் அச்சபையின் உத்தம பக்தரான மார்ட்டினேயே பயன்படுத்தினர். 'நான் கடவுளுக்காக எரிந்து ஓயட்டும்' ('let me burn out for God') என்பதே, அவர் உள்ளத்தின் உண்மை அவா.

1781-ஆம் ஆண்டு பெப்ருவரித் திங்கள் 17-ஆம் நாள், ஹென்றி மார்ட்டின் இங்கிலாந்து தேசத்திலுள்ள கான்வால் மாகாணத்தில் பிறந்தார். பதினரும் வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்க அனுப்பப்பட்டார். இங்கே தான் இவரது பிற்கால சேவைக்குரிய ஆயத்தம் ஆரம்பமானது. அறிவுக் கேள்விகளை நுணுக்கமாக ஆராய்ந்து கற்ருர். இலக்கியக் கலைகளில் இவரடைந்த ஆழ்ந்த பயிற்சிகள், கடவுளின் காரியங்கள் பற்றி ஆழமாகச் சிந்திப்பதற்கேற்ற மன நிலையை உருவாக்கியது. கல்லூரிப் படிப்பை முடிக்கும் பொழுது, கணிதத்தில் முதல் மாணுக்கராகத் தேறி, மிக முக்கிய பரிசுகளைப் பெற்ருர். இப் பெருமையை அடைந்த மார்ட்டின் கூறியதாவது:— 'என் பேரவா நிறைவேறப் பெற்றேன். ஆனால் என்ன ஏமாற்றம்! வெறுமையான நிழலைப் பற்றியதாக வன்ரோ தோன்றுகின்றது?'

இக்காலத்தில் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில், சார்லஸ் சிமியோன் (Charles Simeon) என்னும் பெரியார் தொண்டாற்றி வந்தார். அவரது கடவுட் பற்றும், தூய வாழ்க்கையும், பல இளைஞரின் வாழ்க்கை மாற்றம் அடையக் காரணமாய் அமைந்தன. அவரது பெரும் முயற்சியாலேயே

இதற்குச் சில காலத்துக்கு முன் ஆங்கிலிக்கன் சபையின ரால் சிம். எம் எஸ். (Church Missionary Society) ஆரம்பிக் கப்பட்டிருந்தது. இவருடன் ஹென்றி மார்ட்டின் போய்ப் பழக நேர்ந்த காரணமாக, பெரியவரின் விசுவாசம் இளைஞர் உள்ளத்தில் இறைவனின் அன்பைத் தோற்றுவித்தது. பின், தம்மை ஆட்கொண்ட ஆண்டவரின் அன்பைப் பறை சாற்ற, இந்தியா செல்வதென உறுதி பூண்டார். அரிய அறிவுத் திறமைகள் பெற்ற இளைஞர் ஒருவர், இங்கிலாந்தில் தமக்குக் காத்திருந்த பட்டம் பதவிகளை உதறித் தள்ளுகிருர் என்னும் செய்தி, பலரை வியப்பில் ஆழ்த்தியது. ஹென்றி மார்ட்டினே, தன் உயிரைப் பெரிதாக மதித்து அதைப் பேண முயலுகிறவன், அதினுல் உண்மைப் பயனைக் காணுன்; கடவுளின் சேவையில் செலவிடத் தன் உயிரைக் கொடுக்கக் கலங்காதவன், பின் அதனுல் பெரும் பயன் விளையச் செய் வான் எனும் உண்மையை அறிந்தவர். ஆதலால், அவர் காதலித்த மங்கை உடனடியாக அவரை மணம் செய்து கூட வர விரும்பாததையும் பொருட்படுத்தாது, தன்னந்தனியாக இந்தியா புறப்பட்டார்.

ஹென்றி மார்ட்டின், சிம். எம் எஸ். சங்கத்தின் சார்பில் மிஷனெரியாக இந்தியா செல்லவே வாஞ்சித்தார். ஆனுல் இச்சமயம் எதிர்பாராத வகையில் அவரது தங்கையின் கண வன் மாண்டதால், அவரின் குடும்பப் பொறுப்புக்கள் பெருகின. மிஷனெரி சங்கம் அளிக்கும் ஊதியம் அவர் தேவைகளை நிவிர்த்திக்க கூடாதாகையால், கிழக்கிந்திய வாணிகக் குழு வினரின் சார்பில் இந்தியாவிற்கு அனுப்பப் பெற்ற குரு (chaplain) என்னும் பொறுப்பில், இந்தியா வந்தார். இவ் வகைக் குருக்களின் முக்கிய பொறுப்பு, ஆங்கிலேயப் போர் வீரர்களுக்குள் திருப்பணி செய்தல். ஹென்றி மார்ட் டின், அப்பணியுடன், புற மதத்தினருக்குள் சுவிசேடத் தைப் பரப்பவும் தமக்கு வாய்ப்புக் கிட்டும் என எதிர் பார்த் தார்.

மார்ட்டினை ஏற்றிச் சென்ற கப்பல் இந்தியா வந்தடையு முன், ஆப்பிரிக்காவில் கேப் டவுணில் தான் கொண்டு வந்த தளவாடங்களை இறக்கியது. இது டச்சுக்காரர்களுடன்

இங்கிலாந்து போர் தொடுத்து, தென் ஆப்பிரிக்காவைத் தனக்கெனக் கைப்பற்றிய சமயம். ஆகவே, போரினால் காயம் பெற்றோர், மரிக்கும் தருவாயில் இருப்போர், எனப் பல வகைப்பட்ட மக்களைச் சந்தித்து, அவர்கட்கு நற்பணி யாற்றினர். இச்சமயம்,

> போரில் வெற்றி அடைந்த ஆங்கிலேயருடன் நானும் வெற்றி வாகை சூட வேண்டியவன். ஆனால் ஆங்கிலேயரால் போரில் மடிந்த மக்களின் இனத்தாருடன் சேர்ந்து, துக்கம் விசாரித்தால் அஃது இபபோதைய என் மனநிலைக்கு பொருத்த மான தாக அமையும்

எனக் குறிபபிட்டுள்ளார். பகைவரே யாயினும் அவரும் மனுக்குலத்தின் மக்கள்—ஒரே தந்தையின் பிளளைகள். அவர் துன்பத்தினை துடைக்க இவர் உள்ளம் தவித்தது.

1806-ஆம் ஆண்டு மே மாதம், கப்பல் கல்கத்தா அடைந்தது. இங்கு சுமார் ஆறு மாத காலம் தங்கி விட்டு, டினாப்பூர் என்னும் இடத்தில் போர் வீரர்களுக்குக் குருவாக நியமனம் பெற்றுச் சென்றார். இங்கு இரணடரை வருட காலம் பணிபுரிநதார். இதன் பின் கான்பூரில் ஒன்றரை வருடத்தைக் கழித்தார். இக்காலத்தில் இவர் ம[illegible]வாய்ப் படவே, விடுமுறை பெற்றுக்கொண்டு, கடல் மார்க்கமாய் அரேபியா அடைந்து, பின் தரை வழியாய் இங்கிலாந்து செல்வதெனத் தீர்மானித்தார். ஆனால், பாரசீகத்தில், அவர் விருமபி அன்புடன் வேதத்தை மொழிபெயர்த்து அளித்த மக்கள் மத்தியிலேயே உயிர் துறந்தார்.

பிரான்சிஸ் சேவியரைப் போல், இவர் பணியின் காலம் மிகக் குறைவானது. இந்தியாவில் தங்கிய காலமெல்லாம் நாலரை ஆண்டுகள் மட்டுமே ஆகும் இச் சுருங்கிய காலத் துக்குள் அவர் ஆன்மா அதிசயிக்கத்தக்க வகையில் விரி வடைந்தது. ஆணடவரின் அன்பால் நிறைந்து வழிந்தது. இக்காலத்தில் அவர் பெற்ற அனுபவங்கள், எணணிய எண்ணங்கள், தீட்டிய திட்டங்கள், கண்ட கனவுகள், சகல

மும் பற்றித் தினக் குறிப்புப் புத்தகத்தில் தவருது எழுதி வந்தார். கான்பூரிலிருந்து அவர் வெளியேறிய சமயம், இப் புத்தகங்களைத் தீயிலிட எடுத்து வைததிருந்தார். ஆனால் அவரது நண்பரான தானியேல் கோரி (Daniel Corrie) தடுத்து நிறுத்தி, மார்ட்டின் திரும்பி வருமளவும் அவை களைத் தாம் பத்திரப்படுத்தி வைத்திருப்பதாகக் கூறிக் காப் பாற்றினர். நண்பர் திரும்பினர் அல்லர். அவர் வாழ்வு முடிவடைந்து விட்டது. ஆனால் அவர் எழுதியவைகள் அச்சிட்டு வெளியாக்கப்பட்டன. ஹென்றி மார்ட்டினின் உள்ளத் தூய்மையும், ஆவியின் ஆழமும், மனுக்குலத்தின் மீட்புக்காகச் சரீரத்திலும் ஆவியிலும் அவர் அடைந்த வேதனையும், வருத்தமும், உலகைத் திடுக்கிட வைத்தன. வெகு விரைவில் அவர் சுடர் விட்டு எரிந்து ஓய்ந்தார். ஆனால், அவர் வாழ்க்கை ஒளியில் கடவுளின் இன்முகம் காணுமாறு, அவர் எழுதி வைத்த நாட் குறிப்பு நூல் இன் றும் பலருக்கு உதவுகின்றது.

சாப்ளேன் (Chaplain) பணி

இந்திய நாட்டில், ஐரோப்பியரும், ஆங்கிலேயரும், ஆங் காங்கே சுவிசேட ஊழியம் செய்து வந்தனர். அத்தோடு ஆங்கிலிக்கன் சபை குருக்களும், சில முக்கிய இடங்களில் சபைப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தனர். 18-ஆம் நூற் ருண்டின் இறுதி மட்டும் பம்பாய், மதராஸ், கல்கத்தா ஆகிய பட்டினங்களில் மட்டுமே ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தன. 19-ஆம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் ஆங்கில மொழி பேசிய பிரிட்டீஷ் மக்கள் ஓர் இலட்சம் பெயர் இருந்தனர். வங் காளத்தில் மட்டுமே, ஐம்பது இடங்களில் இவர்கள் தங்கி வசித்து வந்தனர். ஆனால் இவை ஒன்றிலும் சாப்ளேனு வது, ஆலயமாவது கிடையாது. கிறிஸ்தவ விசுவாசத்தில் பிறந்தவராயினும் இந்துக்களின் இடையில், விசுவாச வளர்ச்சிக்கு ஏதுவான உதவி ஒன்றும் இன்றி, இவர்கள் வைக்கப்பட்டிருந்தமையால், கடவுளற்ற வாழ்க்கை நடத்தி வந்தனர்.

ஹென்றி மார்ட்டின் கல்கத்தாவில் கழித்த ஆறு மாத காலத்திலேயே, இவ்வகை மக்களின் பாவ நிலை குறித்து எச்சரித்து உணர்த்த ஆரம்பித்து விட்டார். இங்கு நிலவி வந்த கேடுகள் ஊடே அவரை உற்சாகப்படுத்துவதற்கு, அவரோடு ஒத்த எண்ணம் படைத்த டேவிட் பிரவுண் (David Brown), தானியேல் கோரி ஆகிய குருக்கள் இருந்தனர். செராம்பூரில் இருந்த முப்பெரும் மகான்களின் (கேரி, மார்ஷ்மான், வார்டு) முன் மாதிரியும் இவருக்கு உற்சாக மூட்டியது. ஆனால் டினப்பூர் சென்றவுடன் தன்னைத் தனியாக நின்று கலங்கினர். இங்கு ஆலயம் கிடையாது. ஆராதனைக்குக் கூடுவோர் திறந்த இடத்தில் வரிசையில் நிற்க, ஜெபம் ஏறெடுக்கப்படும். இந்நிலையில் நெடுநேரம் நிற்பது இயலாது எனக் கருதி, பிரசங்கம் செய்வதை நிறுத்தக் கேட்டுக் கொண்டனர். ஹென்றி மார்ட்டின் மக்களுக்கு உண்மையை உணர்த்தத் தமக்கு ஒரு வாய்ப்பும் கிட்டவில்லையே என வெதும்பினர். இக்காலத்தில் அவரைச் சந்தித்த ஒருவர் அவரைப் பற்றி எழுதியதாவது :—

> அவர் உலகோடு போராடி மேற்கொள்ள வேண்டியவர் என்று தோன்றவில்லை. உலகின் சிற்றின்பங்களில் அவர் கவனத்தைச் செலுத்த அவை அத்தனை முக்கியத்துவம் வாய்ந்தவை என அவருக்குத் தோன்றவில்லை. அந்நிலையில் அவைகளின் கவர்ச்சியினின்று விடுவிக்கப்பட வேண்டியது அவசியம் என்பது அவருக்கு எவ்வாறு தோன்றும்? அன்றாட வேலைகள் முடிந்த பின், நண்பர் மத்தியில் ஓய்ந்திருந்தால், களங்கமற்ற குழந்தையைப் போல் பேசி மகிழ்வார். அதிலும் சிறுவர் இருந்தால், அவரது மகிழ்ச்சி பொங்கி வழியும்.

பரம நாட்டைச் சீக்கிரம் கிட்டிச் சேரப் போகும் பக்தர், அந்நாட்டின் தூய சூழ்நிலையைத் தாம் சென்ற இடமெல்லாம், இவ்வுலகிலும் பரப்பி வந்தார். இதற்கிடையில் அவர் சரீரம் வாட்டமுற்றது. அவர் குடும்பத்தினரைக் கொன்று வீழ்த்திய காச நோய் இவரது சுவாச கோசத்தை

யும் தாக்கியது. கான்பூருக்கு மாறுதலாகிச் சென்றார். இங்கு வியாதியின் கொடுமை முற்றியது. எனினும், அவ் வூரில் தங்கியிருந்த சிப்பாய்கள் சேர்ந்து வணங்குவதற் கோர் ஆலயத்தைத் தம் பணி காலத்துக்குள் கட்டி முடித் தார். பின் விடுமுறை பெற்றுக் கொண்டு கடற் பயணத்தை மேற்கொண்டார்.

### மிஷனெரிப் பணி

கல்கத்தாவில் கழித்த ஆறு மாதங்களையும் மார்ட்டின் இந்திய நாட்டை இறைவனடி கொண்டு வரத் தக்கதாக மக்களுடன் பேசிப் பழகி, அவர்களின் மொழியைக் கற்பதில் கழித்தார். அதே வேளையில் வில்லியம் கேரியுடன் அவருக் குத் தொடர்பு ஏற்பட்டது. இத்தனை திறமைகள் பெற்று, இங்கிலாந்திலிருந்து வந்துள்ள இளைஞரைத் தம் வேத புத்தக மொழிபெயர்ப்புத் திட்டத்தில் பங்கெடுக்கச் செய்வது நலம் எனக் கேரி உணர்ந்தார். இந்துஸ்தானி, பாரசீகம், அராபிக் ஆகிய மொழிகளைக் கற்று, அவைகளில் திருமறை யைத் தாம் மொழி பெயர்ப்பதாக மார்ட்டின் வாக்குக் கொடுத்து, டினப்பூர் சென்றார். இம் மொழிகளைப் பெரும் பாலும் பயன்படுத்துபவர் முகம்மதியரே. அவர் முயற்சி யால் மொழிபெயர்க்கப்படும் வேத நூல்கள் இம்மக்களுக்கே பயன்படும். ஆகையால், அவர்கள்மாட்டுத் தனிக் கவனம் செலுத்த ஆரம்பித்தார். இவ்வாறே ஹென்றி மார்ட்டின் கவனம் முகம்மதியருக்கு இரட்சிப்பின் தூது பற்றிப் பறை சாற்றுவதில் இழுக்கப்பட்டது.

டினப்பூர், கான்பூர் ஆகிய இடங்களில் பணியாற்றிய காலம் தமக்குக் கிடைத்த ஓய்வு நேரம் முழுவதையும், வேதத்தை மொழி பெயர்ப்பதில் செலவிட்டார். மூன்று வருட காலத்தில் இந்துஸ்தானியில் புதிய ஏற்பாடு மொழி பெயர்க்கப்பட்டு, அச்சிடப்படுவதற்காக ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஆனால், பாரசீகம், அராபிக் மொழிபெயர்ப்புக் களில், சாதாரண மக்கள் விளங்கிக் கொள்வதற்கு இயலாத அரும் பதங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப் பட்டது. இக்குறை ஓரளவுக்கு இவருக்கு மொழி பெயர்ப்

புக்களில் உதவி அளித்தவரால் தோன்றியவை எனினும், குறையின் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டு, அரேபிய மொழி பெயர்ப்பை அரேபியாவிலும், பாரசீக மொழி பெயர்ப்பை பாரசீகத்திலும் சென்று திருத்தி முடிக்க வேண்டும் எனத் தீர்மானித்தார்.

இந்துஸ்தானி மொழி கற்றவுடன், மக்களுக்குக் கடவுள் இரட்சிப்பின் செய்தியை எடுத்துக் கூறினர். ஒவ்வொரு ஞாயிறும் தம் வீட்டின் முன், ஊரிலுள்ள ஏழைகளைக் கூட்டி வைத்து, சுவிசேடத் தூதுரைத்து, அரிசி தானம் செய்வாராம். பலர் தருமம் பெறும் நோக்குடன் வந்தனரேயன்றி, செய்திக்குச் செவி சாய்க்கவில்லை. எனினும் இவ்வகைக் கூட்டம் ஒன்றை கடந்து செல்ல நேர்ந்த செய்யிக் ஷாலா (Sheik Saleh) என்னும் பாரசீகர், இளைஞரின் கவர்ச்சி மிக்க செய்தியைக் கேட்டுக் குணப்பட்டார். பின் தம் சொந்த மக்களுக்குள் கடவுளின் ஊழியராகச் சென்று உழைத்தார். இந்திய மக்களைக் கிறிஸ்துவின் அடியாராககுவது இலகுவான காரியம் அன்று என்பதை ஹென்றி மார்டின் நன்குணர்ந்தார். எனினும் அவரின் விசுவாசம் குறையவில்லை.

> கங்கை நதி, கிறிஸ்தவ ஆலயங்களால் அணி செய்யப்பட்ட பூமி வழியாய் ஓடுவதற்கு உரிய ஒரு காலம் வரும். அந்நாட்டைக் கிறிஸ்தவ உழவர் உழுது, பயிர் செய்து, பயன் சேர்ப்பார். புளிய மரங்களின் நிழலின் குழுமியிருப்போர், இனிய கீதங்களை இசைத்து இயேசு அண்ணலைச் சேவிப்பார்

எனக்கூறி, இந்திய மண்ணைவிட்டுக் கடந்து சென்றார்.

## பாரசிகம்

1811-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கல்கத்தாவில் கப்பல் ஏறி, குமரி முனையைச் சுற்றிக் கடல் மார்க்கமாய், பம்பாய் வந்தடைந்தார். மீண்டும் கடற் பயணம் செய்து பாரசீக நாடு சேர்ந்தார். காசநோய்க்குத் தக்க மருந்து கிடையாத அக்காலத்தில், கடற்காற்று தான் பெரும் பயன் அளிக்கும் என நம்பினர். ஒரளவுக்கு குணமும் பெற்றவராகக் காணப்பட்டார்.

இங்கு அவர் வந்ததின் முக்கிய நோக்கம் வேதத்தின் மொழி பெயர்ப்பைத் திருத்தி எழுத வேண்டும என்பதே. ஆனால் அதற்கிடையில் எதிர்பாராத வகையில் இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களின் உண்மை பற்றித் தர்க்கம் தோன்றி விட்டது. பல பெரும் படிப்பாளிகள் முன்னிலையில் சிலுவையின் சிறப்புப்பற்றி கனிவுடன் எடுத்துக் கூறினர். மார்ட்டினின் கல்வித் திறமையையும், அறிவு நுட்பமும், பக்திக் கனிவும் கண்டு பலர் வியந்தனர். ஆனால் விளக்கம் கேட்டு விசுவாசத்தை ஏற்றுக்கொள்ள எவரும் முன் வர வில்லை தர்க்கங்களை உருவாக்குவதும், அவைகளில் பங் கெடுப்பதும், அம்மக்களுக்கு ஒரு பொழுது போக்காயிருந் ததே யன்றி வேறில்லை.

ஒரு வருட காலத்துக்குள், பாரசீகத்தில் புதிய ஏற் பாட்டு நூலைத் திருத்தி எழுதினர். ஹென்றி மார்ட்டின் இலக்கிய உலகுக்குச் செய்த மாபெரும் சேவை இது. இந் நூலின் பிரதி ஒன்றைப் பாரசீக அரசரிடம் தாமே வழங்க விரும்பினர். ஆனால் அவரது விருப்பத்தை எவரும் மதித் தார் அல்லர். அதற்கு இரண்டு ஆண்டுகட்குப் பின்னர், ஹென்றி மார்ட்டினின் புகழ் பற்றி அறிய வந்த மன்னர், மிக மரியாதையுடன் இந்நூல் ஒன்றைப் பெற்றுப் பாராட்டி னர். அதற்குள் மார்ட்டினின் ஆவி மறுவுலகை அடைந்து விட்டது.

பாரசீகத்துக்கு வந்த நோக்கம் முடிவடைந்தவுடன், மிகவும் களைப்புற்றவராகக் காணப்பட்டார். பாரசீகத்தி லிருந்த பிரிட்டிஸ் தூதரின் விருந்தினராக அவருடன் அச் சமயம் தங்கினர். இங்கேயே அவரின் முடிவு நேர்ந்திருந் தால், நலமாயிருந்திருக்கும். ஆனால் சற்றுப் பலம் அடைந் தது போல் தோன்றியவுடன், மீண்டும் ஐரோப்பா நோக்கித் தம் பயணத்தைத் தொடங்கினர். குதிரையில் சவாரி செய்து, கடும் வெயிலின் கொடுமையைச் சகித்து, 1300 மைல்களுக்கு அப்பால் இருந்த கான்ஸ்டாண்டிநோபிலை அடைவது. பூரண பலமுடையவர் ஒருவர் தானும் செய்யக் கூடிய காரியம் அன்று. ஆனால் மார்ட்டினின் உள்ளம், இங்கிலாந்தை அடைந்து விட்டால் எவ்வளவு இனிமை யாயிருக்கும் என ஏங்கியது. ஆகவே பிரிட்டிஷ் தூதர்

உதவியாளருடன் மார்ட்டினை வழிவிட்டனுப்பினர். உதவி யாளர் கூலிக்காக உழைத்த கல்நெஞ்சர். இரக்கமற்ற வகையில் மார்டடினை இழுத்துச் சென்றனர். வியாதியின் அகோரம், வெயிலின் கொடுமை, பயணக் களைப்பு, உற்ருர் உறவினர் இல்லாத் தனிமை நிலை, உதவியாளரின் ஈவு இரக்கமற்ற தன்மை, இவையெல்லாம் உயிரை உறிஞ்சிக் கொண்டிருக்க,

> நான் மிக ஆறுதலுடனும், சமாதானத்துட னும, என் ஆண்டவரைப்பற்றிச் சிந்தித்தேன். அவரே தனிமையில் என் துணை, என் சிநேகிதர், என் தேற்றரவாளர். இக்கால வரம்பு கடந்து, என்று நித்தியம் உதயமாகும்? என்று நீதி நிலைத் திருக்கும்? புதிய வானமும் புதிய பூமியும் என்று தோனறும்?.........

எனக் கடவுளின் வாக்கில் உறுதியை வைத்துக் காத்திருந் தார். வெகு சீக்கிரத்தில் விண்ணுலகை நோக்கி அவர் ஆவி பறந்து விட்டது. அப்பொழுது அவருக்கு வயது முப்பத்தொனறு. இறுதி வரை அவர் குறிப்புப் புததகத்தில், தம் நிலைபற்றி எழுதி வைத்த குறிப்புக்கள் வாசிப்போரின் நெஞ்சைக் கசிந்து உருகச் செய்கின்றது. கடவுளின் நாமத் துக்காகப் பாடு அனுவிப்பதைப் பாக்கியமெனக் கருதிய பக்தர் அவர்.

அவரது மரணத்துக்குப் பின்னரே, ஆங்கிலிக்கன் சபை, தான் எவ்வளவு பெரிய பக்தனை இழந்து விட்டதென எண்ணிக் கலங்கியது. இதன் பின்னரே மிஷனெரி ஊழியம் பறறிய அவாவும், இச்சபையின் கண்ணே பிறந்தது. சுவிசேடத்துக்காகப் போராட வல்ல பெரும் வீரர்களைப் பிறபபித்தும் அளித்தது.

இந்தியாவில் இப்பெரியாரின் நினைவில், இஸ்லாமி யருக்குள் பணி செய்ய ஊழியரை ஆயத்தப்படுத்தவும், இஸ்லாம் மதம் பற்றி ஆராய்ச்சி செய்யவும், ஓர் ஆராய்ச்சி நிலையம் நிறுவப் பெற்றது. மிகச் சிறப்பாக அது தன் பணியை நடத்தி வருகின்றது. இன்று அது ஜபல்பூரிலுள்ள லெனார்டு இறையியற் கல்லூரியில் அமைத்துள்ளது.

# 3

# அலெக்சாந்தர் டப்

## இந்தியாவின் கல்வி நிலை

செராம்பூர் மிஷனெரிமாரின் முயற்சியால் பல ஆரம்பப் பள்ளிகள் எழும்பின. தென் இந்தியாவிலும் ஆங்காங்கே மிஷனெரிமார் பள்ளிகளை ஆரம்பித்தனர். இவை பெரும்பாலும் புதியவராய்க் கிறிஸ்தவராகியவரின் பிள்ளைகள் முனனேறுவதற்கு உதவியாகவே தோன்றியவை. பாடங்கள் தாய்மொழி வாயிலாகவே கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தன. உயர் கல்வி, கல்கத்தாவில் கம்பெனியாரின் செலவில் நடத்தப்படட இந்துக் கல்லூரியில் அளிக்கப்பட்டது. இக் கல்லூரியில் மதபோதனை யாது மின்றி, மேனாட்டு அறிவு மட்டும் புகட்டப்பட்டதால் மாணவர் இதுகாறும் தாம் நம்பி வந்த இந்து மதக் கொள்கைகளை உதறித் தள்ளி விட்டு, கட்டுப்பாடற்ற வாழ்க்கை நடத்தி வந்தனர்.

இக்காலத்தில் இந்தியர், வர்த்தகம், அரசாங்க அலுவல் முதலிய காரணங்களால், ஆங்கிலேயருடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை அதிகரித்து வந்தது. ஆங்கில மொழி அறிவு பெற்றுக்கொண்டால், இவ்வகைச் சந்தர்ப்பங்களை எளிதில் சமாளிக்கலாம் என எண்ணினர். நாட்டுப் பற்றை வளர்த்து வந்த சிலருக்கு, தாம் ஆங்கிலேயருடன் சரி சமமாகப் பழக, ஆங்கில மொழி அறிவு உதவும் எனப் பட்டது. வேறு சிலர், ஆங்கில மொழி கற்று விட்டால், எளிதில் உயர் உத்தியோகங்களை அரசாங்கத்தில் பெறலாமே என எண்ணினர். ஆனால் இந்துக் கல்லூரியின் கல்வி முறை எவரையும் கவரவில்லை. வேறு எவவகையிலாவது ஆங்கில அறிவு பெற வழி திறக்குமா எனக் காத்து நின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் இந்தியா சென்று, உயர் கல்வி அளித்து, அதன் அடிப்படையில் கிறிஸ்துவின் சுவிசேடத்தை சமுதாயத்தின் வருங்காலத் தலைவர்களாக விளங்கப் போகும் வாலிபர்

ஏற்க வகை செய்யவென ஸ்காட்லாந்து தேசச் சபையின் சார்பில் அலெக்சாந்தர் டப் (Alexander Duff) என்பார் மிஷனெரியாக அனுப்பப்பட்டார். டப், தக்க சமயத்தில் வந்து திறமையுடன் தம் திட்டத்தைக் கடைப்பிடித்து நிறைவேற்றியதால், இந்திய மக்களுள் பல உயர்குல வாலிபர் கிறிஸ்துவின் அருமையைக் கண்டறிய நேர்ந்ததுடன், இந்தியநாட்டுச் சரித்திரத்திலே பெரியதோர் முன்னேற்றம் ஆரம்பமாயிற்று

டப்பின் இளமைப் பருவம்

ஸ்காட்லாந்து தேசத்தினரை உலகின் எப்பாகத்தில் காண நேரிடினும், குறிப்பிட்டு அறிந்து விடலாம். சுவாதீனப் பிரியர். நாட்டுப் பற்றும் மதப்பற்றும் மிகுந்தவர். கடின உழைப்பாளிகள். எளிதில் தம் முடிவை மாற்றி அமைக்க விரும்பாதவர். இயற்கையாகவே இந்நாட்டு மக்களுக்கு ஓரளவு கவித் திறமை உண்டாகையால், உள்ளத்தைத் தொட்டு எழுப்பத்தக்க வகையில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவர். இத்தனி இயல்புகளை எல்லாம் குறைவில்லாது பெற்றவர் டப்.

டப்பின் தகப்பனுர் ஒரு குடியானவர். மகனுக்குச் சிறந்த மத போதனையும் பொதுக் கல்வியும் கிடைப்பதற்கு வசதிகளைச் செய்தளித்தார். எடின்பரோவில் தூயர் அந்திரேயா கல்லூரியிலிருந்து அவர் வெளியேறிய அவ்வருடம், அக்கல்லூரியின் மிகச்சிறந்த மாணுக்கர் அவர்தான். அக்கல்லூரியில் அச்சமயம் பேராசிரியராய்ப் பணியாற்றிய பண்டிதர் சார்மர்ஸ் (Dr. Chalmers) என்பவர், கடவுளின் வழியை உலகுக்கு விளக்கி வந்த ஓர் ஒப்பற்ற பிரசங்கி. அவரது ஆர்வத்தாலும் விசுவாசத்தாலும் கவரப்பட்டவருள் ஒருவர் டப். சிறு வயதிலேயே கடவுளின் அன்பால் உயர்ப்பிக்கப்பட்ட அனுபவம் பெற்றிருந்தார். அவருடைய கடவுட் பற்றை வளர்த்து, தக்க முறையில் அது பயன்படுத்தப்பட உதவியவர், பண்டிதர் சார்மர்ஸ். டப்பின் நண்பர் ஒருவர் சீன தேசத்திற்கு மிஷனெரியாகப் போகத் தம்மை ஒப்புக்கொடுத்திருந்தார். ஆனால் திடீரென மரணமடைந்து விட்டார். ஆகவே டப், தான் அவருக்குப் பதில் வெளி நாடு சென்று, கடவுளின் கொடியை நாட்டி வெற்றி

காண்பது எனும் முடிவுக்கு வந்தார். இவ்வாறு கடவுளின் அழைப்புக்கு உடன் மாறுத்தரம் அளிக்காது பின் வாங்கியவர், அவருக்கு எரிச்சலை மூட்டினர்.

> தாய் நாட்டிலேயே வாழ வேண்டுமாம். ஓய்வு பெற்று வசதியான வாழ்க்கை நடத்த வேண்டுமாம். ஆகவே கடவுள் அழைப்பைச் செவியில் ஏற்காது பின் வாங்கி, பதுங்கிப் பதுங்கி நடக்கின்றனர். இத்தகையோர் கோழைகள்; உழைக்க விருப்பமற்ற சோம்பேறிகள். அஞ்சாது இத்தகையோரை இழித்துரைத்து வருகின்றேன்.
>
> வீரத்துடன் வெளிநாடு சென்று இரட்சகரின் நாமத்தில் புதிய வெற்றிகள் அடையவேண்டும்; புதிய இடங்களில் சிலுவைக் கொடிஂயை நாட்ட வேண்டும். அவ்வாறு செயலில் ஈடுபடாது, வெறும் வாய்ப் பேச்சாக, பல பெரிய கருத்துக்களை அடுக்கிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி விட்டு, நீர் குமிழிகளைப் போல் உடைந்து ஒடுங்கிப் போகக் கூடியவர்களையும், நான் வெறுக்கிறேன். மக்களின் பேச்சால் அல்ல, அவர்களின் செயலால் அவர்களை மதிப்பிட வேண்டும்.

இவ்வகை வீர முழக்கம் செய்து, டப் 1830-ஆம் ஆண்டு மே மாதம் இந்தியாவில் கல்கத்தா வந்திறங்கினார். காலதாமதம் செய்யாது, உடன் காரியங்களை ஆராய்ந்தறிந்தார். இந்திய இளைஞர் ஆங்கிலக் கல்வி பெற ஆவலுள்ளவராய்க் காணப்பட்டனர். ஆனால் இந்துக் கல்லூரியின் முறை அவர்களைக் கெடுத்து வந்தது. ஆகவே ஆங்கில மொழி, விஞ்ஞானம் முதலியவற்றை கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையில் கற்றுக் கொடுக்கக் கூடிய கல்லூரி ஒன்று ஆரம்பிப்பதென முடிவுக்கு வந்தார். எல்லா உண்மைக்கும் உறைவிடம் இயேசு கிறிஸ்துவே. எவ்வகைப் பாடமாயினும், அதன் உண்மையைக் கிறிஸ்தவ ஆசிரியர் ஒருவர் எடுத்துக் காட்டும் முறையில், அதைக் கேட்பவர் கடவுளைக் கிட்டிச் சேர உதவக் கூடும் என்பது டப்பின் நம்பிக்கை. இவ்வகைக் கல்வி அறிவு இந்து இளைஞர் உள்ளத்தில் கடவுளைப் பற்றி நிலவியுள்ள தவறான

கொள்கைகள், எண்ணங்கள் முதலியவற்றைச் சிதறடிக்கும். அதே வேளையில், கடவுள் இயேசுவில் தம்மை வெளிப்படுத்தி யுள்ள உண்மையையும் ஏற்றுக் கொள்ளப் பெருந்துணை செய்யும். இவ்வகைப் போதனையும் பயிற்சியும் நாடெங்கும் தொடர்ந்து நடைபெறுமாயின், இந்து மதத்தின் வலிமை குன்றி, இந்தியா நாடு இயேசு பெருமானின் முழு ஆளுகைக் குள் எளிதில் கொண்டு வரப்படும். இவ்வாறு டப் எண்ணி, திட்டங்கள் வகுத்த செயல், பல அனுபவம் படைத்த பழைய மிஷனெரிமாருக்குக் கேலியாகத் தோன்றியது. ஆனால் டப் செராம்பூர் சென்று, வில்லியம் கேரியின் ஆதரவையும், ஆசியை யும், தம் திட்டத்தின் சார்பில் பெற்றுக் கொண்டார். அனுபவம் படைத்த அப்பெரியார் தம் திட்டத்தை ஆமோதித்தது டப்புக்கு உற்சாகம் அளித்தது. தாய்ச் சங்கம் அவர் தம் பணியைக் கல்கத்தாவில் ஆரம்பிக்க வேண்டாமென ஆலோசனை கூறி யிருந்தது. ஆனால் டப்புக்குக் கல்கத்தாவே தகுந்த இடமென உள்ளத்தில் பட்டது. ஆகவே தாய்ச் சங்கத்தின் ஆலோசனை யையும் ஏற்காது, வேறு எவரின் ஆதரவையும் நாடாது, கடவு ளின் உயரிய நாமத்தை உலகுக்கு வெளிப்படுத்தும் பணியில், தாம் சரியென நம்பிய திட்டத்தை நிறைவேற்றத் தன்னந்தனி யாக இறங்கினர். அப்பொழுது அவருக்கு வயது 24 தான்.

### கல்விப் பணி

டப் இந்தியா வந்திறங்கியது மே மாதம் 27-ஆம் தேதி. ஜூலை மாதம் 13-ஆம் தேதி அவர் கல்லூரி ஆரம்பமாகியது. முதல் நாள் 5 மாணவரே வந்திருந்தனர். கர்த்தருடைய ஜெபத்தை வங்காளத்தில் வாசித்து, வகுப்பை ஆரம்பித்தார். கிறிஸ்தவ உண்மைகளை விளக்குவதே கல்லூரியின் முதற் நோக்கம் என்பதை வெளிப்படையாக யாவரும் அறிந்திருக்க விரும்பினர். வங்காளச் சுவிசேட பிரதிகளை மாணவரிடம் கொடுத்து, அவைகளை வாசிக்க வேண்டியபொழுது அவர்கள் பின்வாங்கினர். இச்சமயம் எதிர்பாராத வகையில் இராஜாராம் மோகன்ராய் என்னும் வங்காளப் பிரமுகர் அவருக்கு ஆதரவு அளிக்க முன்வந்தார்.

இராஜாராம் மோகன்ராய் வங்காளத்தில் பெயர் பெற்ற மகான். அவர் பக்தியுள்ள இந்து. இஸ்லாம், கிறிஸ்தவம்

ஆகிய மதங்களையும், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் நன்கு கற்றவர். இயேசு பெருமானைப் புகழ்ந்து ஒரு சிறு நூலும் இயற்றியிருந்தார். ஆனால் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்துவின் அடியார் ஆக, அவர் விரும்பவில்லை. மேலும் பூர்வ வேதங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள இந்து சமய நிலையை மீண்டும் நடைமுறையில் கொண்டு வர விரும்பினார். விக்கிரக வணக்கம், மூட நம்பிக்கைகள் முதலானவை இடைக் காலத்தில் தோன்றி, இந்து சமயத்தின் தூய்மையைக் கெடுத்து விட்டன வெனக் கருதினர். ஆனால் பொதுமக்கள் மூடப் பழக்கங்களைக் கைவிட்டு சீர்திருந்த வேண்டின், அவர்கள் ஆங்கில மொழி, விஞ்ஞான முன்னேற்றம் முதலானவை பற்றி அறிந்து கொள்வது அவசியம் எனக் கண்டார். ஆகவே, டப் ஆங்கிலக் கல்வி கற்பிக்கப் பள்ளி ஆரம்பித்ததை முழு மனதுடன் வரவேற்று ஆதரித்தார். மாணவர் சுவிசேட நூலை வாசிக்க அஞ்சியகால், தாமும் பலமுறை அந்நூலை வாசித்திருப்பதாகவும், அதனால் உடனே மதம் மாறி விடவில்லை என்பதாகவும் கூறி, அச்சமின்றி வாசிக்க ஏவினர்.

ஆனால் டப்பின் முயற்சி எளிய தன்று. ஆங்கில எழுத்துக்களை ஒவ்வொன்றாக மாணக்கருக்குக் கற்றுக் கொடுத்து, பின் பிற பாடங்கள் பற்றிய அறிவையும புகட்ட வேண்டியிருந்தது. ஒரு வாரத்துக்குள் 300 பேர் மாணவராகச் சேர மனுச் செய்தனர். அவர்களில் 250 பேர் மட்டும் தேர்ந்து எடுக்கப்பட்டனர். ஒரு வருடம் முடிவடைந்தவுடன், கல்கத்தாவின் பொதுமக்கள் முன்னிலையில் இம்மாணக்கர் தேர்ச்சி பற்றி அறிய கேள்விகள் கேட்கப்பட்டன. மாணக்கரின் அபிவிருத்தி கண்டு அனைவரும் அதிசயித்தனர் கிறிஸ்தவ வேத அறிவையும் இம் மாணக்கர் பெற்று வருவதை, இந்துக்கள் விரும்பவில்லை. எனினும், ஆங்கிலக் கல்வியின் மீது அவர்கட்கு இருந்த விருப்ப மிகுதியினால் முன்னிலும் இரு மடங்கு மாணக்கரை ஏற்றுக்கொள்ள டப் ஆயத்தமாயிருந்திருந்தால், அத்தனை மாணக்கர் உடனே பள்ளியில் சேர ஆயத்தமாயிருந்திருப்பர்.

### முதற் கனிகள்

இவ்வகைப் பணியின் ஊடே, வேறு வகைகள் மூலமாகவும் மக்கள் கருத்தையும், கவனத்தையும் கிறிஸ்துவின்பால் இழுக்க

முயன்று வந்தார். 'இயற்கையாகத் தோன்றிய சமயம், வெளிப் பாட்டின் அடிப்படையில் தோன்றிய சமயம்' என்னும் தலைப் பின் கீழ் தம் இல்லத்தில் சொற்பொழிவுகள் நடத்த ஏற்பாடுகள் செய்தார் முதல் கூட்டத்திற்கு வந்தவருள் பெரும்பான்மை யோர் இந்துக் கல்லூரி மாணவர் ஆனால் வைதீக இந்துக்கள் இச் செயல் பற்றி அறிந்து, பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆகவே கவர்னர் ஜெனரல் வில்லியம் பென்டிங்கின் வேண்டு கோளுக்கிணங்க, இச் சொற்பொழிவுகள் நிறுத்தப்பட்டன. ஆனால் இளம் உள்ளங்கள் உண்மையை அறிய ஆவல் கொண் டன அடக்கு முறைகள் அவர்கள் ஆவலை அதிகரிக்கச் செய் தன. இவ் வாலிபருக்கு டப் ஏற்ற தோழராக அமைந்தார். அவர்களின் தேவைகளில் உதவி செய்து, அச்சங்களைத் தவிர்த்து, விசுவாசத்தைப் பொறுமையுடன் வளர்த்து வந்தார். ஏற்ற காலத்தில் பலன் கிடைக்கும் என்பதில் அவருக்குச் சிறிதும் ஐயம் இல்லை.

பலன் தோன்ற ஆரம்பித்தது. முதல் வருட முடிவுக்குள், மோகேஷ் சந்தர் கோஷ் என்னும் வாலிபர், வெளிப்படையாக விசுவாச அறிக்கை செய்து, கிறிஸ்தவரானார். இவர், கிறிஸ் தவ போதனையில் குற்றங் குறைகள் காணப்படும் என்றும், அவைகளை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கருதி டப்பின் பேச்சைக் கேட்க வந்தவர். ஆனால் கிறிஸ்துவின் மெய்ம்மை அவரைக் கவர்ந்தது திருமுழுக்குப் பெற்ற பொழுது, அவர் கூறிய சாட்சியாவது :—

> பன்னிரண்டு மாதங்களுக்கு முன், நான் எவ் வகையிலும் ஆறுதல் காணாது கலங்கி வருந்தியவன். இப்பொழுது என் நிலை யாது? என் மனதில் பெறற் கரிய இன்பத்தைப் பெற்றனுபவிக்கின்றேன். எத் துணைப் பெரும் மாறுதல்! இதன் காரணம் தான் யாது? ...... என் விருப்பத்துக்கு, என் உணர்வு களுக்கு மாறாக, கிறிஸ்தவத்தில் உண்மை அடங்கி யுள்ள தென்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

சிறிது காலத்தில் இன்னும் சில வாலிபர் கிறிஸ்தவ ராயினர். இவர்கள் எல்லாரும் உயர் குலப் பிராமணர். கல்வி

அறிவு பெற்றவர். கிறிஸ்தவராஞல் சமுதாயத்தில் அநாதைகளாக விடப்படுவர் என்பதை நன்கு அறிந்தவர். எனினும், சிலுவையைச் சுமந்து, வாசலுக்குப் புறம்பே போகப் புறப்பட்டனர். இவர்களில் ஒருவரைத் தவிர ஏனேயோர் முடிவு மட்டும் விசுவாசத்தை விடாது பற்றி நின்று, திருச்சபையில் அரும்பணியாற்றினர். 'அப்போஸ்தலரின் காலத்துக்குப் பின்னே, இவ்வகை அரிய மாறுதல், தனி மனிதர் ஒருவர் முயற்சியால், வேறு எங்கும் நிகழ்ந்ததில்லை' எனச் சரித்திர ஆசிரியர் ஜியார்ஜ் ஸ்மித் என்பவர் கூறுகின்ருர்.

இராபர்ட் டீ நோபிலி இந்திய சமுதாயத்தின் உயர் குடிகளுக்குக் கிறிஸ்தவ விசுவாசத்தின் சிறப்பை விளக்க முயன்றபின், வெற்றியுடன் அப்பணியைத் தொடர்ந்து நடத்தியவர் அலெக்சாந்தர் டப் தான்.

டப்பின் வெற்றி பற்றிய செய்தி, கிறிஸ்தவ உலகை உற்சாகத்தில் அமிழ்த்தியது. கல்கத்தாவில் ஆரம்பித்த கல்லூரி போன்றவை, பம்பாய், மதராஸ் ஆகிய பட்டினங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன. அவை பம்பாய் வில்சன் கல்லூரி, மதராஸ் கிறிஸ்தவக் கல்லூரி என்பனவே. கல்கத்தாவில் நிகழ்ந்தது போன்ற மனமாற்றங்கள் இப்பட்டினங்களிலும் நிகழ்ந்தன. இன்னும் சில காலத்தில் இந்து மதத்தின் மதில்கள் இடிந்து விழுந்து, இந்திய நாடு முழுவதும் கிறிஸ்தவ விசுவாசம் கோபுரம் போல் எழுந்து நிற்கும், எனப் பலர் கனவு கண்டனர்.

டப்பின் முயற்சியைக் கண்ட அரசாங்கத்தினர், ஆங்கில மொழி வாயிலாகப் பெறுகின்ற மேல் நாட்டுக் கல்வி முறைகளை இந்திய மக்கள் வரவேற்கின்றனர் என்றும், அதனல் நல்ல பயன் தோன்றுகின்றது என்றும் விளங்கிக் கொண்டனர். ஆகவே அரசாங்கம் கல்வி உதவிக்காக ஒதுக்கும் தொகையை ஆங்கில இலக்கியம், விஞ்ஞானம் முதலியவைகளைப் போதிப்பதற்காகச் செலவழிக்கப்படவேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது. இத் தீர்மானம், இந்திய நாடு பல துறைகளில் வெகு விரைவில் முன்னேறி, உலகின் ஏனைய நாடுகளுக்கு ஒத்த மதிப்பைப் பெற பெருந்துணை புரிந்தது.

இங்கிலாந்து

டப் இவ்வாறு நான்கு ஆண்டு இரவு பகலாக ஊக்கம் குன்ருது உழைத்ததின் பயனுக, அவரது உடல் நலம் குன்றியது. அவர் உயிரைப் பாதுகாக்கும் ஒரே வழி, அவரை இங்கிலாந்துக்கு அனுப்பி வைப்பதுதான் எனக் கருதி, அவரைக் கப்பலில் கொண்டு சேர்த்தனர். இந்தியாவில் அவர் செய்த பணியின் பொறுப்பை அவர் நண்பர் ஒருவர் ஏற்றுக் கொண்டார்.

கடற் பயணம் உடல் நலத்தை மீண்டும் அளித்தது. ஸ்காட்லாந்து போய்ச் சேர்ந்தவுடன், அங்குள்ள சபைகளில் மிஷனெரி ஆர்வம் தோன்றுமாறு அயராது உழைத்தார். போதிய பணமும் கிடைத்தது. புது ஊழியர் முன் வந்தனர். ஒவ்வொரு சபையிலும் மிஷன்களுக்கென உதவவும் உழைக்கவும் சங்கங்கள் அமைத்தார். 1840-ஆம் ஆண்டு மீண்டும் இந்தியா நோக்கிப் புறப்பட்டார்.

பணியில் வளர்ச்சி

இதற்குள் அவர் விட்டுச் சென்ற பள்ளி விரிவடைந்து, புது இடத்துக்கு மாற்றப்பட்டு, அழகிய கட்டடங்களுடன் காட்சி அளித்தது. 700 மாணவர் பயின்று வந்தனர். நாடெங்கும் ஆங்கிலக் கல்வியில் புத்தார்வம் தோன்றியது. முன்னேற்றம் தோன்றியதற்காகக் கடவுளுக்குத் துதி செலுத்தி, பின்னும் நடைபெற வேண்டியிருந்த காரியங்களில் கருத்தைச் செலுத்தினுர்.

கல்லூரியில், பாடங்களே ஆசிரியர் திறமையுடன் கற்றுக் கொடுக்க வேண்டுமென்னும் தீர்மானத்தினுல், ஒவ்வொருவரும் தத்தம் தனித் துறைப் பாடங்களே மட்டுமே கற்றுக் கொடுக்க அனுமதி பெற்றனர், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. வங்காள குமாஸ்தாக்களுக்கென ஞாயிற்றுப் பள்ளி ஒன்று தொடங்கியது வாரம் ஒரு முறை, இந்துக்களில் ஆர்வமுள்ளோருக்கு, ஆங்கில மொழியின் இலக்கியச் செல்வம் பற்றிச் சொற்பொழிவாற்றி வந்தார். பெண்களுக்கென ஒரு பள்ளியும் எழுந்தது. நன்மையும் நேர்மையுமான வரங்கள் எவை எல்லாம் தம்மிடம் இருக்கின்றனவோ

அவைகளைப் பிறருடன் பகிர்ந்துக் கொள்வதால், கடவுளின் அன்பை அவர்கட்கு விளக்கக் கூடும் என்னும் உண்மையை அறிந்தவர் அவர்.

இக்காலத்தில் ஸ்காட்லாந்து சபையில் பிளவு தோன்றிய தால், மிஷனெரிமாரும் எவ்வெவ் வகுப்பைச் சேர்வது எனத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் புதிதாகப் பிரிந்து போன சுவாதீனச் சபையை ஆதரித்தனர். இதனால் பழைய சபையின் சொத்துக்களை விட்டு விட்டு, புது இடம் தேட வேண்டுவதாயிற்று.

இச்சமயம் கல்கத்தா வாசிகளும் டப்பின் பல சிநேகிதர் களும் தேவையான பண உதவி கொடுத்து புதிய கட்டடங்கள் கட்ட உதவினர். பழைய சபை வேறு புது ஊழியர்களை அனுப்பி, பள்ளியைப் புதுப்பித்து நடத்தியது. இதனால் ஸ்காட்லாண்டு நாட்டுச் சபை இந்தியாவில் செய்து வந்த பணி அதிகரித்தது.

1850-ஆம் ஆண்டு டப் ஸ்காட்லாந்து நாட்டுக்கு வர வழைக்கப்பட்டார். தாய்ச் சபைக்கு உற்சாக மூட்டி வளர்க்க, விசுவாசம் நிறைந்த புதுத் தலைவர் தேவை ஆயிற்று. டப் இவ் வகைப் பொறுப்பைத் திறமையுடன் நிறைவேற்றினர். சபை களை மேலும் அதிக சுவிசேட வாஞ்சை படைத்த உறுப்பினராக மாற்றினர்.

இந்திய நாட்டின் முன்னேற்றத்துக்காகவும் அக்காலம் உழைத்தார். அக்காலம் இந்தியாவை ஆண்டு வந்த கிழக்கு இந்திய வாணிகக் குழுவினர் இங்கிலாந்திலுள்ள பாராளு மன்றத்தின் ஆட்சிக் குட்பட்டவர்கள், அம்மன்றத்தில் இந்தி யாவின் நலனுக்காக விவாதிக்கப் பெற்ற கேள்விகளில் எல் லாம் பங்கு பெற்று, கல்வித் துறையில் அரசாங்கம் புதிய மாறு தல்களை உண்டாக்கக் காரணமாய் இருந்தார். அரசாங்க மானியவுதவி (grant-in-aid) முறை இக்காலத்தில் தோன்றிய தேயாம்

### மூன்றும் முறை இந்தியாவில்

டப் உடல் இங்கிலாந்தில் இருந்தபோதும், அவர் உயிர் இந்தியாவிலேயே இருந்தது. 1854-ஆம் ஆண்டு

கடைசி முறையாக இந்தியா வந்தார். மூன்று ஆண்டுக்குள் 'சிப்பாய்க் கலகம்' என்றழைக்கப்படும் ஆங்கிலேயருக்கு விரோதமான எதிர்ப்பு ஆரம்பமாகியது. ஆனால் டப்பின் பணியோ, அவர் தம் உடமைகளோ, எவ்வகையிலும் சேதம் அடையவில்லை. விக்டோரியா மகாராணியார் ஆணையின் கீழ் இந்திய அரசாங்கம் கொண்டு வரப்பட்ட பொழுது, டப் தம் நெடுங்கால இந்திய அனுபவத்தினால், புதிய சட்ட திட்டங்கள் வகுக்க உதவி அளித்தார். 1863-ஆம் ஆண்டு உடல் நலம் குன்றவே, இந்தியாவை விட்டு நீங்கி, இங்கிலாந்திலேயே தங்கியிருக்க வேண்டுமென மருத்துவர் கூறினர். அதனால் அவர் அன்புடன் பணியாற்றி வந்த மக்களையும், நாட்டையும் விட்டுப் பிரிந்து வாழ வேண்டியதாயிற்று. மக்களும் அவருடைய பிரிவுச் செய்தியைத் துயருடன் ஏற்றனர். பல திக்குகளிலுமிருந்து அன்பளிப்புக்களும், பிரிவு உபசார வாழ்த்துக்களும் வந்து குவிந்தன. இந்தியா, சிங்கப்பூர், சீனா ஆகிய நாடுகளில் வியாபாரம் செய்து வந்த ஸ்காட்லாந்தியர் மட்டும், அவருக்கு 13,000 பவுனை நன்கொடையாக அளித்தனர். அம் முதலை தாம் எடுத்துப் பயன்படுத்தாது, அதன் வட்டித் தொகையைப் பெற்றே காலம் கடத்தினார். தமக்குப் பின் வியாதிப் பட்டு வருந்தும் மிஷனெரிமாருக்கு, அவ் வட்டி உதவ வேண்டுமென வழி செய்தார். 'என் இறுதி மூச்சு இருக்கும் வரை இறைவன் அருளை நம்பி, இந்தியாவின் நலனுக்காக உழைப்பேன்; என் இறுதி வேளை வருங்கால், கடவுள் இந்தியாவையும் அந்நாட்டு மக்களையும் ஆசீர்வதிக்க வேண்டி ஜெபிப்பேன்' எனக் கூறி, இந்தியா விட்டுச் சென்றார்.

இங்கிலாந்தில் அதன் பின் 14 ஆண்டுகளைப் பயன் மிக்க வகையில் செலவிட்டார். சபையில் தோன்றிய பிளவை நீக்கி ஒன்று சேர்க்க அவர் எடுத்த முயற்சி, பிற்காலத்தில் பயனளித்தது.

ஸ்காட்லாந்து சபையின் பிளவை நீக்குவது, புதிய மிஷனெரிமாரை வெளிநாடுகளுக்கு அனுப்புவது, இவை போன்ற பணிகளில் தம் கவனத்தைத் திருப்பினார். இவ்வாறு பிற்காலத்தில் 14 ஆண்டுகள் உழைத்து, இறுதியில்

நெடுந்துயில் கொண்டு இளைப்பாறலாயினர். அவர் தம் சமாதியில் பொறிக்க விரும்பிய வாசகம் :—

> தொழிலால், ஒரு மிஷனெரி; வாழ்க்கையாலும் உழைப்பாலும் இந்தியாவின் உண்மையும் நம்பிக்கையுமுள்ள நண்பன்.

கடவுளின் உத்தம தொண்டர் இவர் அன்ருே? நாட்டு மக்களின் நிலையை உயர்த்த இவர் எடுத்த முயற்சிகளில் வெற்றி கண்டார். அதற்குக் காரணம், அவர்களின் குறைகளைக் கூறிச் சீர்திருத்த எண்ணுமல், கடவுளின் உன்னத அன்பில் சார்ந்து, தாமும் தன்னலமற்ற வகையில் மக்களை நேசிக்க முற்பட்டதே.

### உயர் கல்வித் தொண்டு

ஆனல், டப் காலத்தில் உயர் கல்வி மூலம் சுவிசேடப் பணி செய்வதற் கிருந்த வாய்ப்பு சீக்கிரத்தில் குறைந்தது. அரசாங்கத்தினரும், பொது மக்களும், தத்தம் நோக்கத்திற் கேற்பக் கல்லூரிகள் திறந்தனர். ஆங்கில அறிவு, அரசாங்கத்தில் வேலை வாய்ப்புப் பெற உதவும் ஒரு கருவியாக மாறியது.

கல்லூரிகள், மாணவரின் மனதை விசாலமாக்கவோ, உள்ளங்களைப் பண்படுத்தவோ, உயிர்ச் சக்திகளை வெளிப் படுத்தவோ உதவும், கருவிகளாக இராது, தேர்வுகளுக் காகப் பயிற்சி அளிக்கும் ஆலைகளாக மாறின. அரசாங்க மான்யம் பெருது இத்தாபனங்களை நடத்துவது இயலாது. மான்யம் பெருங்கால், அரசாங்க விதிகளுக்கு அடங்கி நடக்க வேண்டியது அவசியம். இந்நிலையில், அரசாங்கத் தேர்வில் இடம் பெருத திருமறைப் போதனைகளைக் கருத்துடன் கற்றுக் கொடுப்பவர் யார்? அவைகளை ஆவலுடன் கேட்டுப் பயனடைவார் யார்?

எத்தனை சத விகிதம் வெற்றி கிட்டியதென்பதை யொட்டிக் கல்லூரிகளுக்கிடையில் போட்டி ஏற்பட்டது. ஆண்டுதோறும் வரவு செலவைச் சமப்படுத்துதலுக்கே சிரமப்படும் நிலைமை வந்தது. கிறிஸ்தவக் கல்லூரிகள் அரசாங்கக் கல்லூரிகளுடன் போட்டியிட்டு முற்போக்கான

வசதிகளைச் செய்ய முடியாது, எப்பொழுதும் தவித்துக் கொண்டிருக்கும் நிலை—இவ்வகைத் தாபனங்கள், இன்று புறமதத்தினருக்குக் கிறிஸ்து மத உயர் உண்மைகளை விளக்கும் கருவிகளாக அமையக் கூடும் என எதிர் பார்த்தல் கூடாது.

1950 ஆம் ஆண்டு கிறிஸ்தவக் கல்லூரிகளின் நிலைபற்றி ஆராய்ந்து ஆலோசனை கூறிய லிண்சே (Lindsay) ஆய்வுக் குழுவினர், அவை வருங்காலக் கிறிஸ்தவ மாணுக்கருக்கு உயர் கல்வி அளிக்கும் தாபனங்களாக நிலைக்க வேண்டும் என அறிவுறுத்தினர். குறைவான தரம் உடைய கல்லூரிகள் பல சபைகளின் சார்பில் நடத்தப்படுவதை விட, கிடைக்கக் கூடிய உதவித் தொகை யாவையும் கூட்டிச் சேர்த்து, முதல்தரமான சில கல்லூரிகளை வைத்து நடத்துவதே மேல் எனவும் கூறினர். கல்லூரிகள் கிறிஸ்தவப் பண்பு மணம் வீசும் இடங்களாக அமைய வேண்டும். கல்லூரிகளுக்கும் திருச்சபைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவும் வேண்டும்.

இவ்வகை எண்ணங்களை, கல்லூரிகளுக்குப் பதிலாக சபை மேற்பார்வையில் நடத்தப்படும் ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகளுடனும் பொருத்திப் பார்க்கலாம். வருங்கால உலகில் இவை கிறிஸ்துவின் ஒளியை உலகுக்கு காட்டும் சுடர்களாக விளங்க ஏற்றவை செய்தல் நம் கடன்.

உயர் குலத்தாரிடையே கிறிஸ்து சமய வளர்ச்சி

இந்து சமயம், இதன் முன் பௌத்தம், சமணம், இஸ்லாம் ஆகிய மதத் தாக்குதல்களைப் பொறுமையுடன் சகித்து மேற்கொண்ட மார்க்கம். நாளடைவில், கிறிஸ்தவ உண்மைகளையும் தன்னுள் சேர்த்து அடக்கிக் கொண்டு தன்னைத் தானே சீர்திருத்திக் கொள்ள முயன்றது. கிறிஸ்துவின் அறை கூவலைக் கேட்டு விழிப்படைந்த வாலிபர் பலர், இவ்வகை இந்து சமய எழுப்புதல்கள், சீர்திருத்தங்களில் ஈடுபட்டு, தம் மனதைச் சாந்தி செய்து கொண்டனர். இக்காலத்தில் சுய ஆட்சியை நாடித் தவித்த இந்தியர் பலருக்கு, கிறிஸ்து சமயமும் ஆங்கிலேயரின் அடக்கு முறை முயற்சிகளோடு சம்பந்தப்பட்ட மதம் போலவே தோன்றி

யது. ஆகவே அதுபற்றிக் கேட்டு அறிந்து கொள்ளவும் அவர்கட்கு விருப்பம் குன்றியது.

ஆனால் நிலை இன்று மாறியுள்ளது. இந்தியா நாடு எவரொருவரின் ஆட்சியின் கீழும் நில்லாது, தனித்து சுதந்தர நாடாக விளங்குகின்றது. கல்வி வாய்ப்புக்கள் எவரும் எளிதில் பெற்று முன்னேறலாம். ஒருகால் தாழ்ந்த வகுப்பினரிடையே யிருந்து கிறிஸ்துவானவரின் பெயரர் பூட்டர்களெல்லாம், இன்று, பட்டம் பெற்று உயர்குல மக்களுடன் ஒத்த உரிமையும், மதிப்பும் பெற்று, தொழில் செய்கின்றனர். கல்வி வளர்ச்சி, சமுதாயத்தில் சாதி அடிப்படையில் தோன்றிய ஏற்றத் தாழ்வுகளைச் சமப்படுத்துகின்றது. இந்நிலையில் கல்வி பெற்று முன்னேறியுள்ள கிறிஸ்தவர், புற மதத்தினரிடையே அறிவும் அந்தஸ்தும் உள்ளோரை அணுகி, இயேசுபிரானின் மாறாத உண்மைகள் பற்றி விளக்கி, கிறிஸ்தவ விசுவாசத்தின் உயர் செல்வத்தை அவருடனும் பகிர்ந்து கொள்ள, என்றும் காணாத இனிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர். நம் நாடு முன்னேற வேண்டும். மக்களாட்சி நிலைக்க வேண்டும். உள்ளத்தைக் கறைப்படுத்தி, உயிர்ச்சக்திகளை உலரச் செய்யும் பாவத்தின் மேலும், தீமைகள் மேலும், வெற்றி பெற்று வாழ உதவும் அண்ணல் இயேசுவின் தண்மலர் அடிகளைச் சார்ந்து வாழாது, வேறு எவ்வகையில் நாம் நிலைத்து வாழ முடியும்?

# 4

## நாராயண வாமன திலகர்

1858-ஆம் ஆண்டு, இந்திய நாடு ஆங்கிலப் பேரரசின் ஆட்சிக் கீழ் வந்தவுடன், இந்தியத் திருச்சபைச் சரித்திரத்தில் புதியதோர் சகாப்தம் உதயமாயிற்று. 1857-ஆம் ஆண்டு 'சிப்பாய்க் கலகம்' நடந்த பொழுது, ஆங்கில வாணிகக் குழுவினர் ஆட்சிக்கு முடிவுகட்ட இந்தியர் முயன்றனர். அதற்கு மாருக, அவர்கள் அக்காலத்தில் உலகில் முதன்மையான செல்வாக்குப் பெற்று அரசு செலுத்திவந்த ஆங்கில அரசின் நேர்முக ஆட்சிக்குக்கீழ்வந்து சேர்ந்தனர். சுதந்திரத்தை இழந்து விட்ட நிலையில், நாட்டுப்பற்று மிகவும் பேணிப் போற்றப்பட்டது இந்திய நாட்டின் கலாசாரம், பண்பாடு, நாகரீகம், முதலானவை, புதிய விருப்பத்துடன் பாதுகாத்து வளர்க்கப்பட்டன. இந்து சமயம் தன்னைத் தானே சீர்திருத்திக்கொண்டு, புது உலகின் தாக்குதல்களை நிர்வகிப்பதற்குத் தயாராகியது. இந்நிலையில் பண்பும், அறிவும், படைத்த இந்தியர் எவருக்கும், கிறிஸ்தவ உண்மைகளைக் கேட்க விருப்பம் இல்லை. மிஷனெரி ஒருவர், அவர் அமெரிக்கரோ, ஐரோப்பியரோ எவராயிருப்பினும், அவரை வெள்ளையர் எனப் பொதுவாக ஒதுக்கித் தள்ளினர். வெளி நாட்டினர் இந்தியர் உள்ளத்தை நேர்முகமான போதனை மூலம் கவர்ந்து இழுத்து, கல்வாரியின் அண்டை கொண்டு வரும் காலம் கடந்து விட்டது. இநதியர் தாமே, ஆதி முதல் இருந்ததும், தாங்கள் கேட்டதும், கண்களால் கண்டதும், தரிசித்ததும், கைகளால் தொட்டதுமான ஜீவ வார்த்தையைப் பற்றி தங்கள் சகோதரருக்கு அறிவிக்க வேண்டிய காலம் உதயமாகியது.

ஆனல் இது காறும் கிறிஸ்தவர் ஆகியோர் எவ்வகை வாழ்க்கை நடத்தினர்? ஒரு சாரார் மிக எளியவர்; தாழ் குலத்தினர். இவர்கள் பெரும்பாலும் தம் வகுப்பினரில் தலைவர் ஒருவரின் தூண்டுதலை ஏற்று, கிறிஸ்தவர் ஆகியவர். இவர்களின் கூட்டு வாழ்க்கை குலைந்து போகவில்லை. நடையுடை பாவனைகள் மாறவில்லை. ஆனல், கிறிஸ்து

வின் சாயலை உலகுக்கு விளக்கக் கூடிய வகையில், தனி ஆட்களில் விசுவாசமோ. வளர்ச்சியோ காணப்படவில்லை. பெயரளவில் கிறிஸ்தவராயிருந்தனர். ஆங்கில ஆட்சியின் கீழ்க் கிறிஸ்தவர் பெறக்கூடிய உரிமைகளை நாடி மத மாறியவர் என்று சமுதாயம் இவர்கள் பேரில் குற்றஞ் சாற்றியது.

மற்றொரு சாரார் உண்மையை அறிந்து அதை ஏற்று, கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்தவர். ஆனால் இன ஜனத்தவரின் எதிர்ப்புகட்கு அஞ்சி, மிஷனெரிமாரிடம் தஞ்சம் புகுந்தனர். நாளடைவில் இவர்களின் நடத்தையும், செயலும், ஒழுக்கமும், ஆராதனைகளும் மேனாட்டு மயமாகியது. நாட்டின் கலாசாரம் பண்பு முதலியவற்றிலிருந்து நீங்கித் தம்மைத் துண்டித்துக்கொண்ட இவர்கள், இந்திய மக்களின் கண்களுக்கு அந்நியராகக் காணப்பட்டனர். கிறிஸ்து இயேசுவின் மூலம் பெறக்கூடிய புது வாழ்வின் வசீகரத்தை இக் கிறிஸ்தவரின் வாழ்க்கை பறைசாற்ற வில்லை.

இவ்விரு சாராரையும் கிறிஸ்துவின் கொடியின் கீழ் ஒன்று சேர்த்தல் வேண்டும். அவர்கட்குள் நிலவி வந்த குறைகளைத் தவிர்க்க வழி செய்தல் வேண்டும். ஏனைய இந்திய மக்கள் முன், தாம் பெற்றுள்ள ஒப்பற்ற செல்வத்தின் சிறப்பை, சீரிய வகையில் எடுத்துக்காட்டவும் வேண்டும். இவ்வகைத் தனிப் பணிக்கெனக் கடவுள் தனிப்பட்ட அடியார்களை எழுப்பினார். இவர்கள் பெரும்பாலும் தேசப் பற்று நிறைந்தவர்; உயர் குலத்தவர்; இந்திய பண்பாட்டின் சிறப்பை அறிந்தவர்; கவி பாடும் திறன் பெற்றவர். கிறிஸ்துவின் அன்பால் கவரப்பட்டு மனம் மாறி, மதம் மாறியவர்.

தமிழ் நாட்டில் வேதநாயகம் சாஸ்திரியார், கிருஷ்ண பிள்ளை முதலானோர் இவ்வகைத் தொண்டாற்றினர். சாஸ்திரியாரின் கீர்த்தனைகளும், பிள்ளை அவர்களின் இரட்சண்ய யாத்திரிகம், இரட்சண்ய மனோகரம் முதலிய நூல்களும், இன்றும் எவராலும் இரசிக்கப்படுகின்றன. மகாராட்டிரத்தைச் சார்ந்த நாராயண வாமன திலகர், சிறந்த வகையில் இப்பணியை நிறைவேற்றியவருள் ஒருவர்.

### வாழ்க்கைச் சுருக்கம்

சிற்பவன் பிராமணர் என்பவர் மகாராட்டிரருள் ஒரு வகுப்பினர். இவர்களின் முன்னோர், ஒரு காலத்தில் மன்னர்க்கு முதல் மந்திரிகளாயிருந்தவர். பிற்காலத்தில் கோபாலகிருஷ்ண கோகலே, மாதவ கோவிந்த ரனடே, லோகமானிய பால கங்காதர திலகர் என்னும் பெரும் மக்களை, அரசியல் தலைவர்களாகவும், பண்டிதை இராமாபாய், நெகேமியா கோரே, என்னும் கல்விச் செல்வர்களைத் திருச்சபையின் தலைவர்களாகவும் தந்தளித்த பெருமையுடையது இவர் பிறந்த மரபு, 1862-ஆம் ஆண்டு பம்பாய் மாகாணத்திலுள்ள ரத்னகா தாலூகாவில் நாராயண வாமன திலகர் பிறந்தார். வாமன ராவ் தந்தையார். ஜானகிபாய் தாயார். தாயின் அன்பும், ஆற்றலும, இவரின் இளம் உள்ளத்தில் கடவுட் பக்தியையும், மக்கட்குச் சேவையையும் வற்புறுத்தியது. திலகர் பதினொரு வயதாயிருக்கையில் அன்புத் தாயை இழந்தார். தந்தை ஓரளவு கொடூர குணம் படைத்தவர். அவர் கண்டிப்புக்கு இணங்கி, ஆறும் வகுப்புடன் தன் படிப்பை முடித்துக்கொண்டார். ஆனால் தன் வாழ்நாள் முழுவதும், தன் முயற்சியால் விடாது கற்று கல்வி அறிவைப் பெருக்கிக்கொண்டார்.

திலகர் 19 வயதாயிருக்கையில், அவருக்குத் திருமணமாகியது. அவரது மனைவி இலட்சுமிபாய்: அவருக்கு அச்சமயம் 11 வயது. இக்காலத்திலேயே கவி பாடுவதிலும், சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும், திலகர் திறமை வெளியாகியிருந்தமையால், பலமுறை தம் இளம் மனைவியையும் ஒரே மகன் டட்டுவையும விட்டு, அயலூர்களுக்குப் பயணமாவார்.

### மன மாற்றமும் மத மாற்றமும்

இவ்வாறு ஒரு சமயம் ரெயிலில் பயணம் செய்ய உள்ளே ஏறி அமர்ந்தார். அங்கு முன்னரே ஓர் ஆங்கிலேயர் இருந்ததைக் காணவே, ஒருகால் தன்னை வெளியேறக் கட்டளையிடக் கூடுமென அஞ்சினர். ஆனல் வெள்ளையர் அன்புடன் பல பொதுக்காரியங்கள் பற்றிப் பேசி, இறுதியாக கிறிஸ்தவ சமயம் பற்றித் திலகரின் எண்ணம் யாது

என வினவினர். இதற்கு முன், திலகர் கிறிஸ்தவ சமயம் பற்றி அக்கறை காட்டியது இல்லை. ஆனால், இந்திய நாட்டின் முன்னேற்றம் பற்றி அதிகமாக எண்ணியுள்ளார் நாடு முன்னேற உதவக் கூடியது உயரிய ஒரு மத நம்பிக்கையே என்னும் முடிவுக்கும் வந்திருந்தார். ஆகவே இந்து, இஸ்லாம், பௌத்தம் முதலிய மதங்களை ஆய்ந்து ஆராய்ச்சி செய்தார். இறுதியில், அவை அவருக்கு மன நிறைவை அளிக்க வில்லையாகையால், தாமே ஒரு புது மதத்தைக் காண்பது எனும் முடிவுக்கு வந்தார். அம்மதத்தில் அடங்க வேண்டிய குணாதிசயங்கள் பற்றியும், வரையறுத்து வைத்திருந்தார். ஆகவே துரையின் கேள்விக்குப் பதிலாக, தாம் அடைய விரும்பும் மத நம்பிக்கைகளை எடுத்துக் கூறினர். அவற்றில், ஒரே கடவுள் பேரில் நம்பிக்கை கொள்ளவேண்டும். விக்கிரக வணக்கம், ஜாதி பேதம் முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும். கடவுளையும் அவர் படைத்த மனுமக்களையும் உண்மையுடன் நேசிக்க வேண்டும், என்பன போன்ற கொள்கைகள் அடங்கியிருந்தன. பெரியவர், திலகர் கடவுளின் இராச்சியத்துக்கு நெடு தொலைவில் இல்லை என்பதைக் கண்டு 'இன்னும் இரண்டு ஆண்டிற்குள் நீர் கிறிஸ்தவர் ஆவீர்' எனக் கூறி, ஒரு புதிய ஏற்பாட்டுப் பிரதியையும் திலகரிடம் கொடுத்துச் சென்றார்.

வெள்ளையர் கூற்று திலகருக்கு வேடிக்கைப் பேச்சாகத் தோன்றியது. எனினும், தாம் சென்ற இடத்தில் ஓய்வு நேரத்தைப் போக்க, படிப்பதற்கு வேறு நூல் ஒன்றும் இல்லாமையால், அந்தப் புதிய ஏற்பாட்டுப் பிரதியை வாசிக்க ஆரம்பித்தார். இந்து சமய வேதங்களைச் சமஸ்கிருத மொழியில் வாசித்து அறிந்துள்ள அவருக்குக் கிறிஸ்தவத் திருமறையின் எளிய நடை வியப்பை யூட்டியது. ஆனால் அதில் அடங்கியுள்ள உயர்ந்த கருத்துக்கள் அவர் கவனத்தை இழுத்தன. இந்து சமயத்தின் தத்துவக் கேள்விகள் பலவற்றிற்குத் தக்க விடைகள், மத்தேயு நற்செய்தி நூலில் மலைப் பொழிவில் அடங்கிக் கிடந்தன. அறிவு ஆராய்ச்சிகளின் அடிப்படையில் கிறிஸ்தவ சமயத்தின் மேன்மையை ஏற்றுக்கொண்டார். எனினும், அறிவின் அடிப்படையில் நடைபெறும் மனமாற்றம் பூரணமானது அன்று. உள்ளத்

தில் ஒத்த விசுவாசமும் தோன்றுதல் அவசியம். இதனை அறிந்த திலகர், சிலகாலம் காத்திருந்தார். ஜெபத்தின் மூலம், விளக்க நூல்கள் வாசிப்பதின் மூலம், இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்று வெற்றி வாழ்க்கை நடத்தி வந்த பிற இந்தியருடன் பழகியதின் மூலம் எல்லாம், அவரின் விசுவாசம் ஓங்கி வளர்ந்தது. இறுதியில், அவர் உள்ளத்தில், தாம் உண்மைக் கிறிஸ்தவராகிவிட்ட நிச்சயம் பிறந்தது. தாம் தேடி அலைந்த இலக்கை அடைந்து விட்டதாகக் கூறி, அகமகிழ்ந்தார் இயேசு கிறிஸ்துவே தம் மெய்க் குரு எனப் போற்றிப் பணிந்தார். அவரை யின்றி வாழ்க்கையில், வேறு இன்பம் கிடையாது எனச் சாட்சி பகர்ந்தார்.

1895 ஆம் ஆண்டு, பம்பாய் சென்று, ஓர் இந்திய குருவினால் திருமுழுக்குப் பெற்றார். இதன்பின் அவரடைந்த இன்னல்கள் பல. சாதியிலிருந்து ஒதுக்கப்பட்டார். மனைவி ஐந்தாண்டுகள் வரை அவரைப் பிரிந்து வாழ்ந்தார். ஒரு முறை தபால் மூலம் அனுப்பியிருந்த நச்சுணவை உண்ணாதவாறு அற்புதமாய்த் தப்பிப் பிழைத்தார். மற்றொரு முறை அவரை அடிக்க வந்தவர், குதிரையில் எவரோ ஒருவர் சவாரி செய்து வரும் சத்தம் கேட்டு ஓடிப்போனார். ஆனால் நேர்முகமாக எவரும் இவரண்டை வரவில்லை. இவ் வகைச் சந்தர்ப்பங்களில் கடவுள் தம்மைக் காப்பாற்றி நடத்திய அதிசயங்களை உள்ளங் கனிவோடு நினைத்துத் துதி செலுத்தினரே யன்றி, பிறர் தமக்கு எதிராகச் செய்த துரோகங்களை எளிதில் எவரிடமும் கூறி வருந்தினர் அல்லர்.

ஐந்து ஆண்டுகட்குப் பின், திலகரின் மனைவி இலட்சுமி பாய், அவருடன் வந்து, வாழ உடன்பட்டார். சிறிதுகாலத்தில் தாமாகவே திருமுழுக்குப் பெற வேண்டினர். சாதி கட்டுப்பாட்டின் பிடியினின்று, கிறிஸ்தேசுவைப் பற்றும் விசுவாசத்தால் அவர் பெற்ற விடுதலை அவருக்கே அற்புதமாய் விளங்கியது. தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த சிறுவர் இருவரைத் தம் குடும்பத்துடன் சேர்த்து, தம் சொந்தப் பிள்ளைகள் போல் வளர்த்தார். அவருக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. பாடலும் மகிழ்ச்சியும் நிறைந்த அக் குடும்பம், இறைவனின் அதிசய அன்புக்கு ஏற்ற சிறந்த சாட்சியாகத் திகழ்ந்தது.

கிறிஸ்தவப் பணி

திருமுழுக்கு பெற்ற சில காலத்தில் திலகர் அகமதுநகர் வந்து சேர்ந்தார். அங்குள்ள இறையியற் கல்லூரியில் சேர்ந்து, தம் வேத அறிவை விருத்தி செய்யவெனப் பாடம் கற்ருர் கல்லூரியில் சில பாடல்களைக் கற்றுக் கொடுத்தும் வந்தார் அங்கு அமெரிக்க மராத்தி மிஷனின் ஊழியராய்த் தொண்டாற்றி வந்த ஹியூம் ஐயர் (Rev. R. A. Hume) திலகரின் கிறிஸ்தவ வளர்ச்சிக்கு அருந்துணையாய் இருந்தார். 1904 ஆம் ஆண்டு திலகர் குரு அபிடேகம் பெற்ருர்.

அகமது நகரில், மகாராஷ்டிர கவி பற்றிக் கற்க ஆர்வம் கொண்டவருக்கெனச் சில காலம் வகுப்புகள் நடத்தினுர். சித்திரம் தீட்டுவதில் விருப்பம் காட்டியவரை உற்சாகப்படுத்தி, அவர்கட்கென ஒரு சங்கமும் நிறுவினுர். ஒரு சமயம் மிஷன் சார்பில் நடத்தப்பட்ட போர்டிங் பள்ளியிலிருந்து ஏதோ காரணத்தால் இருபத்திரண்டு மாணவரை வெளியேற்றினர். ஆனுல், வெளியில் கொடும் பஞ்சம் தாண்டவமாடியது. உணவு மட்டுமன்றிக் குடிக்க தண்ணீர் கிடைப்பதும் அரிதான நிலே. இவ்வேளே அம்மாணவர் வருந்தி உயிர் நீக்கவே நேரிடும் எனக் கண்டு, அனைவரையும் தம் வீட்டில் சேர்த்துக் கொண்டார். இதனேக் கண்ட ஹியூம் ஐயர், திலகர் வீணுன நெருக்கடியைத் தமக்கு வருவித்துக் கொள்கிருர் என வருந்தினர். திலகரோ, 'மிஷனெரிமார் இந்தியரில் இரக்கம், உதவி செய்தல் முதலான பண்புகளே வளர்க்க முயல மறுக்கின்றனர். உதவி தேடுவோரை மிஷனெரிமாரிடம் அனுப்ப வேண்டும்; அவர்கள் கவனித்துக் கொள்வார்கள் எனும் பழக்கத்தை தான் வளர்க்கின்றனர்' எனக் கூறி வருத்தம் அடைந்தார்.

இந் நிகழ்ச்சி பற்றி இலட்சுமிபாய் அம்மையார் கூறுவது:— "அன்று எங்கள் கைவசம் இருந்ததெல்லாம் ஒரு ரூபாயும், அரைப்படி சோளமும் தான். ஆனுல் வேருெரு குறைவில்லாத பொக்கிஷம் எங்களுக் கிருந்தது ... ... அது கடவுள்பால் எங்களுக்கிருந்த மாருத விசுவாசம்''. பதினெரு மாதங்கள் இச்சிறுவர் திலகரின் குடும்பத்தினராக வாழ்ந்தனர். அக்காலத்தில் அவர்கட்காக ரூ. 500 கடன் பட்டார்.

ஆனல் அற்புதமாய் அவருக்கு இனும் கிடைத்ததால் குறைவு நீங்கி மீண்டும் சேவையில் ஈடுபட்டார்.

1903 ஆம் ஆண்டு பிளேக் வியாதி தோன்றி மிகப் பெரும் உயிர் நட்டத்தை விளைவித்தது. திலகரின் மகள் தாராவும் இவ்வியாதியால் தாக்கப்படவே, வியாதியுற்ருேருக் கெனத் தனியாகக் கட்டப்பட்டிருந்த மருத்துவ மனைக்குப் பெற்ருேர் அவளை அழைத்துச் சென்றனர். அங்கு தக்க உதவியாளர் இல்லாது வியாதியுற்ருேர் வருந்துவதைக் கண்டு, தாம் குறைகளைக் கூடிய மட்டும் நிவிர்த்திக்க எண்ணி, உதவியாளராகச் சேவை செய்தனர். சமுதாயத் திலோ, திருச்சபையிலோ, அரசாங்கத் துறையிலோ, எங் கெனினும் குறைகளைக் காண நேரிடின், அவைகளை அஞ் சாது சீர்திருத்துவது, கிறிஸ்துவின் பெயரைத் தரித்துள்ள தம் கடன் என்பது அவர் கருத்து.

கிராமங்களில் கிறிஸ்தவர் வாழ்க்கை வருந்தத் தக்க வகையில் இருப்பதைக் கண்ணுற்று, அவர்கட்குத் தனிச் சேவை செய்வதற்காக முன்வந்தார். இவ்வகைப் பணியை வருவாய் பெருது இரண்டு ஆண்டுகள் செய்தார். கிராம மக் கள் தாமும், சுயநலம் பேணுது சுயேட்சை ஊழியராகப் பணி செய்ய வேண்டுமென்பதே அவரின் அவா.

இராகுரி என்ற ஊரில், "கிறிஸ்து இல்லம்" என ஒரு நிலயம் வைத்து நடத்தினர். இங்கு கிறிஸ்துவைப் பற்றி அறிய விருப்பம் கொண்ட எவரும் வந்து தங்கவும், உண் மையை விளங்கிக் கொள்ளவும் வசதி அளிக்கப்பட்டது. ஏழைகள், உதவி அற்ருேர், நெறி தவறியோர் முதலாஞே ருக்கும் அடைக்கல நகராய் அவ்வில்லம் விளங்கியது.

கிறிஸ்தவ மக்களுக்குத் தேவையான அறிவையும், போதனையையும் அளிக்க, கிறிஸ்தவன் என்னும் ஒரு மாதாந் தரப் பத்திரிக்கையை, அவரும் அவர் மனைவியும் தொடங்கி நடத்தினர். திலகர் தாம் கிறிஸ்துவின் நாமத் தில் செய்ய முயன்று வகுத்த பல்வேறு திட்டங்களுக்கும் வேண்டிய செலவைத் தாமே தாங்கினர் அவர் இயற்றிய கவிகளுக்காகப் பெற்றதொகை முழுவதும் இவ்வாறே செலவ

Q684
N64

ழிக்கப்பட்டது. வருங்காலத்துக்காக, அல்லது தன் மனைவி மக்களுக்காக, சொத்தையோ பணத்தையோ சேர்த்து வைக்க வேண்டுமென அவர் ஒருக்காலும் விரும்பவில்லை. நான் மரித்தால், என் இறுதிச் சடங்குகட்குத் தேவையான தொகையும், பின் உங்கள் ஒரு மாதச் செலவுக்கு வேண்டிய தொகையும் என்னிடம் இருந்தால் போதும் அதன்பின் நீங்களே உழைத்து உங்கள் தேவைகளை நிவிர்த்திக்க வேண்டுமெனக் கூறுவாராம் அவரின் வாக்குப் போலவே அவர் மரித்த போது நடந்தது.

திலகரின் கருத்துக்கள்

மேல் நாடுகட்கு இந்தியரின் நிலை பற்றிப் படங்கள், அறிக்கைகள் அனுப்பி, பணவுதவி பெறும் பழக்கத்தை, திலகர் அறவே வெறுத்தார். ஒருவர் கிறிஸ்துவின் அன்பின் பிணைப்புக்குள் அடங்கியுள்ளவர் என்பதால், அவரிடம் கூசாது தானம் கேட்கத் தம்மைத் தாழ்த்துதல் தவறு என்பது திலகரின் எண்ணம். கிறிஸ்தவர் முதலில் தம்மால் இயன்ற மட்டும், தம் செலவுக்குத் தேவையான தொகையைத் தாமே தேடிக் கொள்ள முயலுதல் அவசியம். வளர்ச்சியும் பண்பும் பெற்ற கிறிஸ்தவரில் காணப்பட வேண்டிய குணாதிசயங்களில், தம் செலவுகளைக் குறைத்துக் கடவுளின் திருப்பணிக்காக உதவுவதும், தம் தேவைகளை நிர்வகிக்க தாமே உழைத்து ஊதியம் தேடுவதும் முக்கியமானவை என்பார். ஒரு கிராமத்தினர் மண் வைத்துச் சுவர் எழுப்பிக் கூரை வேய்ந்து தாமே செலவு போட்டுக் கட்டிய கோயில் ஆயின், அதைக் குறித்து அவர் பெருமிதம் அடையக்கூடும். தம் முயற்சியின் சின்னமாக விளங்கும் அவ்வாலயம், பிற சுயநலமற்ற சேவைகளில் அவர் ஈடுபடவும் அவர்கட்குத் தூண்டுதலாக அமையும் என இவ்வாறு கூறி, இந்தியக் கிறிஸ்தவர் கடவுள் கிறிஸ்துவில் அளிக்கும் சுவாதீனத்தின் தனிச் சிறப்பைப் பூரணமாகப் பெற்றனுபவிக்கத் தூண்டினார்.

109276

மிஷனெரிமாரிடம்,

'எவ்வளவு காலம் எங்களை ஊட்டி வளர்க்க விரும்புகின்றீர்கள்? நாங்களே காலூன்றி நிற்க

அனுமதியுங்கள் எங்கள் காரியங்களுக்குள் தலையிடாதீர்கள் நாங்களே பிரயாசை எடுத்துப் பார்க்கட்டும். எழும்பி வரும் அலைகளை எதிர்த்து நாங்களே போராடட்டும். அதனால் சிலர் உயிரிழக்க நேரிடலாம். ஆனால் பலர் அவ்வகையில் தான் நீந்த கற்றுக் கொள்வர்'

எனக் கூறுவார்.

இவ்வாறு மிஷனெரிமாரைப் பற்றிக் கூறி வந்தமையால், அவர்கள் சலிப்புற்று, திலகரைக் குறை கூறவில்லை. திலகர் வெள்ளை உள்ளத்தோடு, கடவுளின் நாம மகிமை விருத்திக்காக எடுத்த முயற்சிகளை, முழு மனதுடன் ஆமோதித்தனர். திலகரும் அவர்களைக் கிறிஸ்துவுக்குள் தம் சகோதரரென ஏற்றுக்கொண்டார். செல்லம் கொடுத்துப் பிள்ளைகளின் முழு வளர்ச்சிக்குத் தடை செய்யக் கூடிய பெற்றோராக அவர்கள் இருப்பதை மட்டும் அவர் விரும்பவில்லை. மக்களின் முயற்சிகளைப் பாராட்டவும், அவர்கள் திறமைகளில் நம்பிக்கை கொள்ளவும், கற்றுக் கொள்ளுங்கள். அப்படியானால் இந்தியாவின் மாபெரும் பக்தர் வரிசையில், நீங்களும் இடம் பெறுவீர் என்பார்.

கிறிஸ்தவர் சாதி வேற்றுமை பார்ப்பதையும் திலகர் இடித்துரைப்பார். மகாராட்டிரத்தில் கிறிஸ்தவருக்குள் சாதி வேற்றுமை கிடையாது. ஆனால் சுவிசேடப் பணி செய்வதற்கெனச் சென்னை மாகாணத்திலுள்ள திண்டுக்கல் நகர்க்கு வந்திருந்தார். அங்கு ஆலயத்தின் உள்ளே சிலரும், சிலர் வெளியேயும் அமர்ந்திருந்தனர். காரணம், வெளியிலிருந்தவர் தாழ்ந்த குலத்தார். இதனை அறிந்த திலகர், மறுநாள் கூட்டத்துக்கு வந்து வெளியில் உள்ளவரை நோக்கி, வெளியிலேயே அமர்ந்து, கூட்டத்தை ஆரம்பித்தார். உள்ளே திரும்பியும் பார்த்தார் அல்லர். உள்ளே இருந்தவர் மனம் குத்துண்டவராய், ஒவ்வொருவராய் வெளியே வந்து தாழ் குலத்தினருடன் அமர்ந்தனர்.

### திலகரின் தாய் நாட்டுப் பற்று

"நான் என் நாட்டை நேசித்ததைப் போல் என் பெற்றோரையோ, பிள்ளைகளையோ, சிநேகிதரையோ, என்னைத்

தானே நேசித்தது கிடையாது" எனத் தம் மரண சாசனத்தில் எழுதியுள்ளார். முன்னர் நாம் கண்டபடி, நாட்டின் நலனே வளர்க்கவே ஆத்தும அமைதி அளிக்கக் கூடிய மார்க்கமொன்றைத் தேடி அலைந்தார். அதனைக் கிறிஸ்துவில் கண்ட திலகருக்கு, இந்தியக் கிறிஸ்தவர் எவரேனும் ஒருவர் நாட்டுப் பற்றற்று போய் விடக் கூடும் என்பது விளங்குவதே இல்லை. ஒரு சமயம் அவர் கற்றுக் கொடுத்த இறையியற் கல்லூரியின் மாணவர் இருவர், இந்தியரையும், இந்தியாவையும் பற்றி இழிவாகப் பேசியதைக் கேட்ட மாத்திரத்தில், கண்ணீருடன் அவரை விட்டு அப்புறம் சென்று தம் கோபத்தைக் கவிகளாக எழுதி, ஆறுதல் பெற்றார்.

> இந்தியா இயேசுவின் பின்செல்ல முயலு மட்டும், முன்னேற்றத்துக்காக அது எடுத்துக் கொள்ளும் முயற்சிகளால் பூரண பயன் கிடையாது. இயேசுவானவர் நாட்டுப் பற்று மிகுந்தவர். தம் நாட்டைச் சீர்திருத்த முயன்றார். அந்நாட்டின் முன்னேற்றத்துக்கு அடிப்படையாக இறையாட்சியை ஸ்தாபித்தார். இந்த அடித்தளம் இல்லாத முன்னேற்றம் அழிவுக்கு நேராகவே வழி நடத்தும்.

எனக் கண்டிப்புடன் கூறினர்.

நாட்டுப் பற்றின் அடிப்படையில் தோன்றியதுதான் கிறிஸ்தவத்தை இந்திய மயமாக்க வேண்டுமென அவர் தோற்றுவித்த புரட்சி. பல பஜனைக் கீதங்களும், கீர்த்தனைகளும் அவர் பேனு முனையிலிருந்து வெளியாகி, மகாராஷ்டிர சபைகள் தோறும் இனிய சங்கீதங்களாக இசைக்கப்பட்டன. புற மதத்தினரிடையே பணியாற்றுங்கால், இவை மிகவும் பயனுள்ள சாதனங்களாய் விளங்கின.

கிறிஸ்துவை எவ்வகையிலும் மறைக்காது, அவரது பரிபூரண வடிவை இந்தியர் காண வழி செய்தல் வேண்டும். அப்படியானுல் மட்டுமே, இந்திய நாடு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் எனக் கூறுவார். இந்திய மக்களின் பண்பு, கலாசாரம், ஆத்தும தாகம், யாவும் சுவிசேடத்தின் சிறப்பை உலகுக்கு ஒப்பற்ற வகையில் எடுத்து விளக்கத் தக்கவை

யாக அமைந்துள்ளன. ஆனால் முதலில் நாடு விழிப் படைந்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளல் வேண்டுமே.

இரவும் பகலும் என் இதயத் தெழும்பும்
ஏக்கம் என்று தீருமோ?
பரமன் கிறிஸ்து பாதம் என் நாடு
*பரவி என்று சேருமோ?

என்பதே அவரின் ஏக்கம்.

### கிறிஸ்தவப் புலவர்

ஆரம்ப காலத்தில் சமஸ்கிருத கவிகளைப் பின்பற்றிய திலகர், சிறுவர், மலர்கள், இவர்களைப் பற்றிய பாடல்களை எழுத ஆரம்பித்தார். பின்னர் நாட்டுப்பற்று மிகுந்தவை யும், பக்திச் சுவை ததும்புவனவும் ஆகிய பஜனைக் கீதங் களை இயற்றினர். இறுதி காலத்தில் முழுவதும் பக்திப் பாடல்களையே எழுதி வந்தார். அவற்றுள், கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு பற்றி அவர் எழுத ஆரம்பித்த காப் பியத்தில் முதல் பாகம் மட்டுமே முற்றுப் பெற்றது. அதனை முழுவதும் முடித்திருந்தாராயின், மகாராட்டிர மொழியி லேயே மிகச் சிறந்த காப்பியமாய் அது விளங்கியிருக்கக் கூடும். பக்திப் பாடல்கள் பலவற்றை அப்ஹாங் (abhang) என்னும் மெட்டில் எழுதினர். இவையே அவரின் பாடல் களில் மிகச் சிறந்தவை. மகாராட்டிர இலக்கியத்துக்கு அணி யாகவும் திருச்சபையின் விசுவாசத்தை உலகுக்கு உயர்த் திக் காட்டும் ஒளியாகவும் அவை இன்றும் விளங்குகின்றன.

திலகரின் பாக்கள் பல கிழமை இதழ்களிலும், திங்கள் மலர்களிலும் வெளி வந்துள்ளன. நூல்களாகவும் தொகுத்து அச்சிடப்பட்டன. 1906-இல் இவரது கீர்த்தனங்கள் பஜன சங்கிரகம் (Bhajana sangraha) என்னும் பெயரால் வெளி யாயின. எஞ்சியவை அவரது மரணத்துக்குப் பின் 1919-இல் அப்ஹன் கஞ்சலி (Abhanganjali) என்னும் பெயரால் வெளி யாயின. ஏனைய மொழிகளில் மொழிபெயர்க்கவும் பெற் றன. இன்னும் இப்பணி தொடர்ந்து நடைபெற்று வரு

*குறிப்பு: *பரவி—துதித்து, புகழ்ந்து, போற்றி; பரவுதல்—துதித்தல்.*

கின்றது. ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தை வெளிப்படுத்துவது அவரின் கவிகள் எனத் திலகர் கூறுவார். அவரின் குழந்தை உள்ளத்தையும், ஆழ்ந்த பக்தியையும் அவர் இயற்றிய பாக்கள் இன்றும் உலகுக்கு வெளிப்படுத்திச் சான்று கூறுகின்றன.

## இறுதிக் காலம்

1917-ஆம் ஆண்டு, திலகர் தமது 55-ஆவது வயதில், சந்நியாசம் பூண்டு 'கிறிஸ்தவ டர்பார்' என்னும் ஒரு சங்கம் ஆரம்பித்தார். பலரைக் கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்க உதவியாக இம்முயற்சி முடிந்திருக்கக் கூடும். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குள் திலகர் இறைவனடி எய்தினர். அதன்பின் அக்கழகம் வளர்ச்சி குன்றியது. அதின் மூலம் தாம் காண விரும்பிய மாறுதலைப் பற்றித் திலகர் எழுதியதாவது:—

> இத்தக் கூட்டுறவின் அங்கத்தினர் பல திக்குகளிலுமிருந்து சேர்க்கப்படுவர். அவர்கள் மக்களை நேசிக்கிறவர்களாகவும், நாட்டுப்பற்று உள்ளவர்களாகவும், உலகுக்கு இயேசு கிறிஸ்துவின் திருக்காட்சியைத் தெளிவுடன் காட்டக் கூடியவர்களாகவும் இருப்பர். இயேசு கிறிஸ்து ஆசிய கண்டத்தினர் என்பது, மீண்டும் இவர்கள் மூலம் வெளியாக்கப்படும். கிறிஸ்தவ அன்பு, கிறிஸ்தவ சுவாதீனம், கிறிஸ்தவ அஞ்சாமை, ஆகிய இவை, மக்கள் தம் சூழ்நிலையின் குறைபாடுகளை மேற்கொள்ள உதவுகின்றவை என்பதை உலகம் அறியும். கிறிஸ்தவ சமயத்தில் காணப்படும் புறநாட்டு வேடம் குலைந்து அது இந்திய மயமாகும்.

இக் கூட்டுறவில் அடங்கியுள்ளோரின் நடத்தையிலும் ஒழுக்கத்திலும் காணப்படும் உயர்தன்மை, இந்தியர், கிறிஸ்தவர் தம் சகோதரர் எனப் பெருமையுடன் கூறத் தூண்டும்.

அக்கழகத்தின் அங்கத்தினர் கொடுக்க வேண்டிய வாக்கின் சுருக்கமாவது:—

"உம்மைப்போல், இயேசுவே, நான் எளிமையைத் தரித்துக்கொள்வேன். உம்மைப்போல் யாவருக்கும் நண்பனுக இருப்பேன். ஒருவருக்கும் விரோதியாக இருக்க மாட்டேன். உம்மைப்போல் சிலுவையில் அறையப்படத் தயாரா யிருப்பேன்; உம்மைப்போல் கடவுளின் சித்தத்தை நிறைவேற்ற முயல்வேன். உம்மைப்போல் மனுக்குலம் முழுவதையும், சிநேகிப்பேன். உமது பலத்தால் உமது சமுகத்தில் தரித்திருப்பேன்."

திருச்சபைச் சரித்திரத்தில் பொருளாசையும் உலகப் பற்றும் நிறைந்திருந்த 13-ஆம் நூற்ருண்டில், அசிசி நாட்டுப் பிரான்சிஸ் என்னும் அரிய துறவி இவ்வகைக் கூட்டுறவு ஒன்றை நிறுவி மாபெரும் சீர்திருத்தத்தை திருச்சபையில் வருவித்தார். அவ்வாறு, திலகர் ஆரம்பித்த பணியைப் புதுப்பித்தல் பெரும் பயன் விளைக்குமன்ருே?

# 5

## பண்டிதை இரமாபாய்

நாராயண வாமன திலகர் வாழ்ந்த காலத்தைச் சேர்ந்தவர் பண்டிதை இரமாபாய். இவரும் மகாராட்டிரர்; சித்பவ கோத்திரப் பிராமணர். எனினும் இவர் கிறிஸ்தவர் ஆகிய வகையும, கிறிஸ்துவின் நாமத்தில் ஆற்றிய பணியும் திலகரினும் வேறு பட்டவை. இரமாபாயின் வாழ்க்கை வரலாறு கற்பனைக் கதையைப் பார்க்கிலும் நம்புதற்கரிய நிகழ்ச்சிகள் அடங்கியவை.

இரமாபாயின் தந்தை ஆனந்த சாஸ்திரி. சமஸ்கிருத மேதை. கடவுட் பற்றும் மிகுந்தவர். அக்காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த சிற்றரசர்கள் கற்றோரையும், கடவுட் பற்று மிக்கோரையும் பெரிதும் விரும்பி ஆதரித்தனர். சாஸ்திரியார் சென்ற திக்கெல்லாம் பெருமையும் புகழும் பெற்றார். குறுநில மன்னர்கள் அவருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பினர். சாஸ்திரியாரின் முதல் மனைவி காலஞ் சென்றார். இரண்டாம் முறையாக மணம் செய்ய விரும்பினார். அப்போது அவருக்கு 45 வயது. பிள்ளைகளை 10 வயதுக்கு முன் மணம் செய்து கொடுத்து விடுவது அக்கால வழக்கு. ஆகவே அவருக்கு அமைந்த மணப் பெண் ஒன்பது வயதுள்ள இலட்சுமிபாய். சிறுமி புதுமொழி கற்பதற்குத் தக்க பக்குவமுள்ள வயதில் இருப்பதைக் கண்ட சாஸ்திரியார், அவருக்குச் சமஸ்கிருதம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். சமஸ்கிருதம் புனித மொழி. பெண் மக்களும் தாழ் குலத்தவரும் அதனை உச்சரிப்பின் அதின் புனிதத் தன்மைக்கு இழுக்கு நேருமென அக்கால மக்கள் கருதி வந்தனர். ஆகவே சாஸ்திரியாரின் செயல், அவர் வசித்து வந்த மங்களூர் நகர்ப் பிராமணர்களைக் கோபத்தில் ஆழ்த்தியது. நகரை விட்டு அவரையும் அவர் மனைவியையும் வெளியேற்றினர்.

சாஸ்திரியார் கலங்கினார் அல்லர். தம் முயற்சியைக் கை விடவும் இல்லை. மக்கள் அண்டாத மலைப் பாகங்களைத்

தேடிச் சென்று, தமக்கும் தம் மனைவிக்குமோர் குடிசை கட்டி, வாழ்க்கை நடத்தினர். இவ்விடத்தில் சுமார் 12 ஆண்டுகள் தங்கியிருந்தனர். பின் பண நெருக்கடி தோன்றவே நாடோடிகளாகப் புண்ணிய யாத்திரை செய்ய ஆரம்பித்தனர். அச்சமயம் இரமாபாய் ஆறு மாத இளங் குழந்தை.

புண்ணிய யாத்திரை

ஆனந்த சாஸ்திரி பிராமணராகவும், அதிலும் புராணங்களைச் சமஸ்கிருதத்தில் மனப் பாடமாய் ஒப்புவிக்க வல்லவராகவும் இருந்ததால், அவர் சென்ற இடமெல்லாம் உணவுக்கும் உடைக்கும் குறைவில்லாமல் தமக்கு வேண்டிய பொருள் பெற்றனர். ஆனால் பிள்ளைகளின் வருங்காலத்துக்கெனப் பொன்னையோ பொருளையோ அவர்கள் சேர்த்து வைத்தார் அல்லர். அழியாத கல்விச் செல்வத்தை மட்டும் அவர்கட்குக் குறைவின்றிக் கொடுத்து வந்தனர். இராமாபாய் எட்டு வயது முதலே பகவத புராணம், பகவத்கீதை முதலானவற்றைக் கற்க ஆரம்பித்தார். வடக்கே இமயம் முதல், தெற்கே குமரி முனை மட்டும் நடந்து திரிந்து, புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்தனர். இதனால் இரமாபாய் சிறு வயது முதலே, இந்திய நாட்டின் இயற்கை வளங்களைக் கண்டு களித்ததுடன், இந்து சமயக் கொள்கைகளின் உறைவிடங்கள் பற்றியும் நேர்முகமாய் அறிந்து கொள்ள வாய்ப்புப் பெற்றார். தம் பெற்றோரைப் போல் கடவுட் பற்று உள்ளோர் மிகச் சிலரே இருப்பதாக அவருக்குத் தெரிய வந்தது. ஆலயக் குருக்கள் மக்களை வஞ்சித்துப் பணம் பறிப்பவராகவும், பொது மக்கள் அவர்களின் குறைகளை அறிந்திருந்தும் அறியாதவர் போல் நடந்து வருபவராகவும் இருக்கக் கண்டார். சமூகத்தின் சீர்கேடுகளும் அவர் கண் முன் பட்டு மனத்தை உறுத்தின. தாழ் குலத்தவராய்ப் பிறந்தவருக்கு ஊருக்கு வெளியில் வீடு; வணங்குவதற்கெனத் தனிக் கோயில்; உயர் குலத்தவரின் நிழல் கூட தம் மீது படத் தகுதி பெற்றவர் அல்லர். இப் பிறப்பிலோ, மறு பிறப்பிலோ அவருக்கு உய்வு கிடையாது. வாய் பேசாது, வறுமையைச் சகித்து, உயர் குலத்தவருக்கு உழைத்து

உயிர் வாழ்ந்தால், ஏதோ எண்ணாயிரம் பிறப்புக்குப் பின்பு உயர் குலத்தவராய்ப் பிறக்கும் பாக்கியம் பெறலாம். அதன் பின்னரே கடவுள் அறிவு பெற்று, மீட்பின் பேறு பெறக் கூடும்.

பெண் குலத்தவரும், தாழ் குலத்தவரைப்போல் வேதங் களைக் கற்கவோ, மெய்யறிவு பெறவோ பேறு பெருதவர். கணவன் கள்வனே யாயினும், அவனையே தம் கண்கண்ட தெய்வமாகப் போற்றித் தொழ வேண்டியவர். இந்நிலை யில் சிறு பெண்களாயிருக்கையிலேயே அவரை மணமுடித்து விட்டதால், குடும்ப வாழ்க்கை நடத்த ஆரம்பிக்குமுன் விதவைகளானவர் பலர். இவர்களின் நிலை மிகவும் பரித பிக்கத்தக்கது. இவ்வுலகில் முன்னேறவோ, வரும் உலகை பற்றி நம்பிக்கை கொள்ளவோ இவர்கட்கு வழி கிடையாது.

1876—77-ஆம் ஆண்டுகட்கு இடையில், கொடிய பஞ்சம் தோன்றியது. சில மாதங்களுக்குள், ஆனந்த சாஸ்திரி அவர் மனைவி, மூத்த மகள் ஆகிய மூவரும் மரித்தனர். இரமாபாயும் அவரின் அண்ணன் ஸ்ரீநிவாசனும் மட்டும் தப்பினர். தந்தை மரிக்குமுன் "நேர்மையானவை, நித் தியமானவை, இவைகளையே பற்றித் தொடர்ந்து நட" என நல் ஆலோசனை கூறினார். தந்தையின் இறுதி மொழியை இதயத்தில் வைத்தவராய், ஸ்ரீநிவாசனும், இரமா பாயும் கல்கத்தா வந்தடைந்தனர். அச்சமயம் இரமா பாய்க்கு வயது 20.

இக்காலத்திலேதான் கல்கத்தாவில் இந்து சமய சீர் திருத்தத்துக்குரிய முயற்சிகள் மும்முரமாய் நடைபெற்று வந்தன. கேசப் சந்திர சென் முதலானோர், 'பிரம சமா ஜம்' என்ற புதிய சங்கம் ஒன்றை ஆரம்பித்து, சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்பி வந்தனர். அக்குழுவினருடன் சேர்ந்து இரமாபாய் இந்து சமயத்தில் காணப்படும் சிலை வணக்கம், பெண்டிர் நிலை, தாழ் குலத்தவர் நிலை முதலி யவை பற்றி இடித்துரைக்க ஆரம்பித்தார். மக்கள் உணர் வுடன் உண்மைக்குச் செவி சாய்த்தனர்.

இளம் பிராமணப் பெண்; அதிலும் மணமாகாதவர்; இந்து சமய சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவர், சமஸ்கிருத இலக்கிய இலக்கணங்களைக் கரை கண்டவர், எனப் பலவாறாக அவரது புகழ் பல திக்குகளிலும் பரவியது. கல்கத்தாவில் சமஸ்கிருத மேதைகளும், பல்கலைக்கழக அறிஞர்களும் குழுமி, சமஸ்கிருதத்தில் இரமாபாய் நிகழ்த்திய சொற்பொழிவுகளைக் கேட்டு வியந்தனர். 'சரஸ்வதி' என்னும் கல்விப் பட்டத்தையும் அவருக்குச் சூட்டினர். மகாராஷ்டிரத்திலிருந்து ஒரு குழுவினர் வந்து தம் நாட்டிலுள்ள பெண் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் உயர்வுக்காகவும் உழைக்க, அவரை வேண்டினர். இச்சமயம் இரமாபாயின் சகோதரர் மரணமானார். தனி வாழ்வை விரும்பாது இரமாபாய் வங்காள நாட்டுச் சூத்திரர் ஒருவரை மணந்து கொண்டு அவருடன் அசாம் சென்றார். அவர் தம் கணவரும் மிகச் சிறந்த மேதாவி, சீர்திருத்த நோக்குடையார்.

### கடவுளின் கரம்

இரமாபாய் வங்காளத்தில் இருந்த காலத்திலேயே இந்து சமயத்தின் மீதிருந்த பற்றை இழந்து விட்டார். உண்மையை விடாது தேடிச் சென்ற அவர் உள்ளம் விவரிக்க இயலாததோர் தாகத்தால் வாடியது. இவ்வேளையில் வங்காளத்தில் மொழிபெயர்க்கப் பெற்ற லூக்கா சுவிசேட நூல் ஒன்றைக் கண்டு, அதனை வாசிக்க ஆரம்பித்தார். அருகிலுள்ள பாப்திஸ்து சபைக் குரு ஒருவர், அவருக்குக் கிறிஸ்து சமய உண்மைகளை விளக்கியும் வந்தார். இப்புதுச் சமயம் பற்றித் தீர அறிந்து அதின் உண்மை தம் உள்ளத்தைக் கவர்ந்தால், கிறிஸ்தவராவதெனத் தீர்மானித்தார். ஆனால் கணவர் இச்செய்தி கேட்டு திடுக்கிட்டார். இந்து சமய சீர்திருத்தத்துக்காக அவரும் உழைத்தவர். ஆனால் அதற்கப்பால் தோன்றிய உண்மையை ஏற்றுக்கொள்ள அவர் உள்ளம் இசையவில்லை

மணமாகி 19 மாதங்களுக்குள், இரமாபாய் கணவர் கொடிய காலரா நோய்க்கு இரையானார். அவரின் கைக் குழந்தை மனோரமாபாய் மட்டுமே, இவ்வுலகில் அவருக்கு

உறவினர் என மீந்திருந்தார். ஆனால் "இம்மாபெரும் துக்கம் கடவுள்பால் என்னை இழுத்தது" என இரமாபாய் கூறுகிறார்.

மதப்பற்று என்பது ஒன்று எனக்குத் தீராத தேவை என்பதை அறிந்தேன். இந்து சமயத்தில் எனக்கு ஈடேற வழி கிடையாது. பிரம சமாஜத்தின் கொள்கைகளும் நேர்மைக்கு வழி நடத்துவதாகத் தோன்றவில்லை. அது மனிதன் தானே உண்டாக்கிக் கொண்ட ஒரு கொள்கை. அவன் பல வகை மதங்களிலிருந்து தனக்கு நலமானவையெனத் தோன்றும் கருத்துக்களைப் பிரித்தெடுத்து, அவற்றை ஒன்றாகத் தொகுத்து, அதனை ஒரு மதம் போலக் காட்டுகின்றான். பிரமோ கொள்கைகளுக்கு அடிப்படை, மனிதனின் அடங்கியுள்ள இயற்கையான ஒளியும், நன்மை தீமையைப் பகுத்தறியக் கூடிய சக்தியும் மட்டுமே ஆகும். இவைகள் மனுக்குல மக்கள் யாவரும் பெற்றுள்ள பொதுவான இயல்புகள். ஆகவே அவ்வகை மதத்தால் ஒருவர் ஆன்ம வாஞ்சை திருப்தி காண முடியாது. நானும் அமைதி காணாது அலைந்தேன்.

1882 ஆம் ஆண்டு, மகாராஷ்டிரம் திரும்பினார். அங்கிருந்து ஆங்கிலம் கற்று அமைதியான வாழ்க்கை நடத்த விரும்பினார். ஆனால் அவர் உள்ளத்தில் எழுந்து வீசிய புயல்கள் ஓயவில்லை. ஆங்கிலிக்கன் சபையில் மணப் செய்யாத நிலைமையில் இருந்து திருப்பணியாற்றிய 'வான்டேஜ்' (Wantage) சகோதரிகளில் ஒருவரிடம் புதிய ஏற்பாட்டு நூலைக் கற்று வந்தார். நீலகண்டன் நெகேமியா கோரே என்னும் குருவும் அவருக்குத் தக்க உதவி புரிந்து வந்தார். இவரும் மகாராட்டிரரே. கிறிஸ்தவராகி உற்றார் உறவினர் இனத்தாரால் கொடிய இன்னல்களை அனுபவித்தவர். கிறிஸ்தவ விசுவாசத்தின் உண்மைகளை உயர்குல இந்துகட்கு எடுத்து விளக்கும் நோக்குடன், பல அறிய ஆராய்ச்சி நூல்களையும் எழுதியவர். இந்தியர் ஒருவரின் மூலம் கிறிஸ்துவின் உண்மைகளைக் கேட்டறிந்ததால், அவரது விசுவாசம்

உறுதியடைந்தது. எனினும், கிறிஸ்துவை முழு மனதுடனும் ஏற்றுக்கொள்ள அவர் அப்போது பக்குவம் அடையவில்லை.

இங்கிலாந்து, அமெரிக்கா

பம்பாய் ஹைக்கோர்ட்டு ஜஸ்டிஸ் மாதவ கோவிந்த ரானடே முதலானோர், இந்திய மகளிர் நிலையை உயர்த்த ஏற்ற கருவி இராமாபாய் என்பதைக் கண்டு, தக்க வகையில் அவரின் திறமைகளை இக்காலத்தில் பயன்படுத்தி வந்தனர். ஆனால் இராமாபாய்க்கு இங்கிலாந்து செல்ல வேண்டுமெனும் ஓர் அவாப் பிறந்தது. தம் குழந்தையுடன் இங்கிலாந்து புறப்பட்டார். அங்கு கழித்த மூன்று ஆண்டுகளில், அவரது கிறிஸ்தவ விசுவாசம் முதிர்ந்தது. கிறிஸ்து இயேசுவில் கடவுள் நிறைவேற்றியுள்ள இரட்சிப்பின் நிறைவைக் கண்டார். திருமுழுக்குப் பெற்று கிறிஸ்துவின் அடியார் ஆயினர். பின் மூன்று ஆண்டுகளை அமெரிக்காவில் செலவிட்டார். இங்குச் சிறுவருக்கென வகுக்கப்பட்டுள்ள கல்வி முறைகளைக் கற்றார். 'உயர் குல இந்துப் பெண்' என்னும் நூல் ஒன்றையும் வெளியிட்டார். அது அமெரிக்கர் கண் முன், அக்கால இந்துப் பெண்களின் இழி நிலையைத் தெளிவுடன் சித்தரித்தது. ஆன்றோர் ஒரு சிலர் கூடி உயர்குல இந்துக்களில், சிறுமியராய் இருக்கும் பொழுது மணம் செய்யப் பெற்று விதவைகள் ஆனோரை ஆதரித்து, முன்னேற்றுவதற்காக ஒரு நிலையம் தொடங்கி நடத்த உதவி அளித்தனர். புதிய விசுவாசம், மேனாட்டுக் கல்வி, பணவுதவி யாவையும் பெற்று, 1889 ஆம் ஆண்டு கல்கத்தா வந்திறங்கினர்.

சாரதா சதன்

இரமாபாய் இந்தியா வந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே, அவரது ஆன்ம வாழ்க்கை கிறிஸ்துவில் நிறைவைக் கண்டது. திருமுழுக்குப் பெற்ற சமயம், அவர் அறிவின் அடிப்படையில் கிறிஸ்து சமயத்தின் உண்மையை ஏற்றுக்கொண்டார். ஆனால் இப்பொழுதோ விசுவாசத்தினால் மறுபிறப்பின் அனுபவத்தைப் பெற்றார்.

இரமாபாயின் உள்ளம் கிறிஸ்துவின் அன்பினல் மெருகேற்றப்பட்டது. அவ்வகை அன்பின் சக்தி ஒன்றுதான், தாம் பெண்களின் நிலையை உயர்த்த முனைந்துள்ள பணியில், வெற்றியை விளைக்குமென இரமாபாய் நம்பினர். மாதவ கோவிந்த ரானடே, கோபால கிருஷ்ண கோகலே போன்ற பெரியோரின் உதவியுடன், முதலில் பம்பாயிலும், பின் பூனுவிலும் 'விதவைகள் இல்லம்' ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இவ்வில்லத்தில் தனிப்பட்ட மதபோதனைக்கு இடமளிக்கப்படவில்லை. ஆனல், இராமாபாயின் வாழ்க்கையில் காணப்பட்ட நம்பிக்கை, அமைதி, இவைகளின் காரணத்தைக் காண வேண்டுமென்று, தம் வாழ்க்கையில் தோல்வியையும், வெறுமையையும் கண்டு கலக்க முற்றிருந்த இளம் கைம் பெண்கள் விரும்பினர். அதற்குக் காரணம், இயேசு கிறிஸ்துவில் அடையக்கூடிய இலவச இரட்சிப்பு என அறிய வந்த சிலர், தாமும் கிறிஸ்தவராக விரும்பினர். இதனல் இல்லத்தில் பெரிய குழப்பம் தோன்றியது. இதுகாறும் உதவி செய்து வந்த அமெரிக்கர் உதவி செய்ய மறுத்தனர் மகாராட்டிரப் பெரியாரும் ஒத்துழைக்கப் பின் வாங்கினர். பெற்ஞேர் சிலர் மாணுக்கரை இல்லத்தில் வைக்க மறுத்து 20 பிள்ளைகளை வீடுகளுக்குத் திருப்பி அழைத்துக் கொண்டனர். இரமாபாய் மனிதரை நம்புவதை வெகு காலத்துக்கு முன்னரே விட்டு விட்டார். ஆனல் இப்பொழுது கடவுளின் பேரில் மட்டும் தம் பாரத்தை வைத்து, அவரில் பற்றுதலாயிருப்பதின் அருமையை உணர ஆரம்பித்தார்.

முக்தி

இக்காலத்தில் இங்கிலாந்தில் ஜார்ஜ் முல்லர், சீனுவில் ஹட்சன் டெயிலர் போன்ற பக்தர்கள், தேவைக்காகக் கடவுளை மட்டுமே எதிர் நோக்கி, அற்புத பணி நடத்தி வருவதைப் பற்றி அறிந்தார். தாமும் கடவுளிடம் மட்டும் தம் தேவைகளுக்கு உதவியை நாடி, விசுவாச வாழ்க்கை நடத்தத் தூண்டப்பட்டார். 1896 ஆம் ஆண்டு மத்திய இந்தியாவைக் கொடிய பஞ்சம் வாட்டிய பொழுது, அப்பாகங்களில் வருந்திய பெண்டீர், பிள்ளைகள் முதலானேருக்கு இரமாபாய் தம் இல்லத்தில் பாதுகாப்பளித்தார். புனுவி

லிருந்து 30 கல்லுக்கு அப்பாலுள்ள கேடகான் என்னும் ஊரில், "முக்தி" என்னும் பெயரில் புதிய நிலையம் ஒன்று நிறுவி, அங்கு யாவரையும் கூட்டிச் சென்ருர். 1900 ஆம் ஆண்டு, மற்ருெரு பஞ்சம் நாட்டை வருத்தியது. உதவி வேண்டிய பெண் மக்கள் எவருக்கும் முக்தியின் வாயில் திறக்கப்பட்டது. ஒரு சமயம் சுமார் 1900 பெண்களும், பிள்ளைகளும், இரமாபாயின் ஆதரவில் இருந்திருக்கின்றனர் அங்கவீனர், முரட்டாட்டமும் அடங்காக் குணம் படைத்தோர், கற்பிழந்தோர் எவர் இருந்தாலும், முக்திக்குள் வரவேற்கப்பட்டனர். அங்கு ஒவ்வொருவரின் திறமைக்கும் தக்க, வேலைகள் கொடுக்கப்பட்டன. தோட்ட வேலை, வயல் வேலை, சலவைத் தொழில், ரொட்டி சுடுதல், கூடைகள் முடைதல், துணி நெய்தல், பெட்டிகள் பின்னுதல், சிறு பண்ணைகளைப் பேணுதல் என எண்ணிறந்த தொழில்கள் நடை பெற்றன. மேற்பார்க்கும் பணியில் உதவி செய்ய, மேல் நாட்டு மிஷனெரிமாரும், இந்தியரும், முன் வந்தனர். இந்திய அரசாங்கம் இரமாபாயின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி, அவருக்கு கெய்சாரி ஹின்ட் பதக்கம் அளித்துப் பெருமைப் படுத்தியது.

துவக்கத்தில் செய்தது போல், மத காரியங்களில் எவரும், தம் விருப்பத்துக்கேற்ப ஒழுக சுவாதீனம் கொடுக்கப்பட்டது. அங்கு முதன்மையாய்ப் பணியாற்றிய ஊழியர்களின் வாழ்க்கை, அவருடன் தொடர்பு கொள்ள நேரிட்ட யாவரையும் கவர்ந்தது. கூட்டம் கூட்டமாக முக்தியில் அடைக்கலம் தேடி வந்தோர், இயேசு பெருமானின் இனிய அருளுக்குள் அடைக்கலம் தேடினர். தூய ஆவியானவரின் அதிசய கிரியையால், பண்போ அடக்கமோ அறியாது, முரட்டாட்ட வாழ்க்கை நடத்திய பெண்கள் பலர் உணர்வடைந்து, புது வாழ்வு கண்டனர். அப்பெரும் கூட்டத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து, ஒழுக்கத்துடன் கூட்டு வாழ்க்கையை நடத்துவது எளிய செயல் அன்று. இரமாபாய் தம் சுமைகள் அனைத்தையும் கடவுள் மீது போட்டுவிட்டு அனுதினமும் அவரது அருளைப் பெற்று வாழ்ந்தார். ஒரு நாள் இரவு அவர் இறைவன்பால் ஜெபத்தில் வேண்டியவை :—

ஆவி, ஆத்துமா உடல் முதலியவற்றிற்குப் பலம், அநாதைப் பிள்ளைகளை நேசிக்கக் கிறிஸ்துவில் காணப்பட்டதை யொத்த அன்பு, ஆவியில் சுவாதீனம்; ஆகாரம், உடை, மற்றும் தேவையான செலவுகளை நிவிர்த்திக்கப் பணம்; கட்டடங்கள் கட்டத் தேவையான தளவாடங்கள்; இன்னல்களை மேற்கொள்ள அறிவாற்றல், ... ... பொறுமை எனக்குத் தேவை .... இப்பொழுது என் இருதயத்தின் பாரம் நீங்கி விட்டது. நான் என் ஆண்டவரில் களிகூருவேன்......

காலம் செல்லச் செல்ல, இரமாபாய் காது செவிடாகத் தொடங்கியது. இக்குறைபாட்டின் காரணமாய், வெளிக் காரியங்களில் அதிகக் கவனம் செலுத்தாது, அப்பொழுது தாம் செய்து வந்த வேதாகம மொழிபெயர்ப்பு வேலையிலேயே ஈடுபட்டிருந்தார். அவருக்குப்பின், அப்பெரும் பணியின் பொறுப்பை ஏற்று நடத்தப் பயிற்சியும், பக்குவமும் பெற்றிருந்த அவரது ஒரே மகள் மனோரமாபாய், அவருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னமே மரணமானார். ஆனால், இரமாபாய் கடவுளின் பரிபூரண சித்தத்தில், சகல காரியங்களும் தக்க வகையில் கவனிக்கப்படும் என நம்பிக்கை கொண்டிருந்தார். 1922-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 2-ஆம் நாள் அவர் தேவ சமாதானத்துடன் இறைவனடி எய்தினார்.

## பெண் குலத்தின் திருவிளக்கு

நம் நாடு வாழ வேண்டுமெனின், பெண்குலம் சுவாதீனத்துடன் செயலாற்ற வழி பிறக்க வேண்டும். சுவாதீனம் பெற்று விட்டால் போதாது; அதனைக் காத்து, தக்க வகையில் பயன்படுத்த, தனித்தனியே ஒவ்வொரு பெண்ணிடத்தும் ஒழுக்கமும், கட்டுப்பாடும், தோன்றல் வேண்டும். உண்மையும் உறுதியுமான மதப்பற்று ஒன்றே இப்பண்புகளை எல்லாம் வளர்க்க வல்லது. கிறிஸ்து பிரான் — கடவுள், உலகம் உய்வுபெற அனுப்பிய திருமைந்தன் — அவரிலேயே உண்மை பூரண வடிவெய்தியுள்ளது. இவ்வாறு படிப்படியாக எண்ணிய இரமாபாய் அம்மையாருக்குப் பெண்

குல வாழ்வுக்காகத் தாம் செய்ய வேண்டிய ஒரே காரியம், அவர்கள் இயேசு பிரானைக் கண்டடையச் செய்வதே என முடிவு செய்தார். தம் நம்பிக்கையைச் சொல் வடிவில் கூறி முடித்து விடவில்லை. செயலால் தன் ஆண்டவரின் அன்பை உலகுக்கு விளக்கினர். அச்சேவையிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் செலவு செய்தார்.

இரமாபாய், இயேசு பிரானின் திருநாமத்தைத் தம் முயற்சிகளோடு கலவாது தொண்டாற்றி மறைந்திருந்தாரெனின், இன்று காந்தி அடிகளின் முன்னேடி, பெண் குலத்தின் திருவிளக்கு, என்றெல்லாம், நம் நாடு அவரைப் போற்றித் தலைமுறை தலைமுறையாய் அவர் புகழைப் பாடிக் கொண்டிருக்கும். ஆனல், அவர் அதனை விரும்பாது, அப்போஸ்தலர், இரத்தச் சாட்சிகள், பக்தர், விசுவாசிகள் ஆகியோரின் திருக்கூட்டத்தில், தம்மையும், ஏனைய இந்தியப் பெண்மணிகளையும் நிற்கக் காணல் வேண்டும்; அதுவே பெறற்கரிய பெரும் பேறு என எண்ணினர். அவரது வாஞ்சை இன்றும் தொடர்ந்து நிறைவேறி வருகின்றது.

இரமாபாய் பெண் குல முன்னேற்றத்துக் கென ஏற்றி வைத்த தீபம் இன்றும் மங்கா ஒளியுடன் எரிகின்றது.

பெண்கள் ஆண்களுடன் ஒத்த உரிமை பெற்று, அரசியலிலும் சமுதாயத்திலும் இன்று தொண்டாற்றுகின்றனர். இந்நிலை தோன்ற ஓரளவு கல்வி முன்னேற்றம் உதவியது. எனினும், துவக்கத்தில் இரமாபாயைப்போல் ஆண்டவரின் அன்பால் ஆட்கொள்ளப்பட்ட மிஷனெரிகள், ஆசிரியைகள், வேதாகமப் பெண்கள், முதலானோர், தேவைப்பட்டோரைத் தனித் தனியாகச் சந்தித்து உற்சாகமூட்டி, கடவுள் தம் திட்டத்தில் வகுத்துள்ள சம உரிமையைச் சுவாதீனத்துடன் பெற்றனுபவிக்கத் தூண்டியதுவேயாம். இன்று தேசீய இந்தியக் கிறிஸ்தவ சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் திறமையுடன் தொண்டாற்றுபவர் ஒரு பெண் மணி.

தமிழ் நாட்டில் பெண்கள், சிறுமியர் முதலானேருக்குள் அற்புதப பணி செய்தவர் ஏமி கார்மைக்கல் அம்மையார்.

சாயமலையில் பெண்களாலேயே ஆரம்பித்து நடத்தப்படும் விடிவெள்ளி ஆசிரமம் அமைந்துள்ளது. கேரள நாட்டில் பெண்கள் சந்நியாசம் பூண்டு ஆங்காங்கே தமக்கெனத் "தாய் வீடுகள்" வைத்துக்கொண்டு கூட்டு வாழ்க்கை செய் கின்றனர். இந்திய நாட்டின் எல்லைகள் எங்கும் சென்று நற்செய்தித் தொண்டும் ஆற்றுகின்றனர். தென் இந்தியத் திருச்சபையின் அமைப்புக்குள் பெண்கள் மணமாகாத நிலை யில், வாக்குக் கொடுத்து, "சகோதரிகள்" என்னும் பொறுப் பில் தொண்டாற்றவும், பக்தி வாழ்க்கை நடத்தவும் இடம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வைக்கியம் வளர்ந்தும் வருகின் றது.

# 6

## ஐடா ஸ்கடர்

மேனாட்டு மிஷனெரிமார் நேர்முகமான தம் போதனைகள் மூலம் இந்தியருக்கு உண்மையை உணர்த்தக் கூடிய காலம் கடந்து விட்டதைக் கண்டு. கைகட்டி நிற்கவில்லை. பசியுள்ளோர், அந்நியர், வஸ்திரமில்லாதோர், வியாதிப்பட்டவர், தாகமுள் ளோர், காவலிலடை பட்டோர் எனும், இவ்வகை மக்களைத்தேடிச் சென்று அவர்கட்குத் தொண்டு செய்யத் தலைப்பட்டனர். "மிகவும் சிறியவராகிய என் சகோதரர்களான இவர்களில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய் தீர்கள்" என்னும் ஆண்டவரின் திருவாய்மொழி இவர்களின் செவியில் ஒலித்து நின்று, உற்சாக மூட்டியது. பல துறை களில் பிற்போக்குள்ள நிலையிலிருந்த இந்திய நாட்டிற்கும், மக்களுக்கும், மேனாட்டின் விஞ்ஞான முன்னேற்றத்தால் தோன்றிய நலன்களை முதன் முதல் பகிர்ந்தளிக்க முயன்றவர், 19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியா தேடி வந்த மிஷ னெரிமார்தான்.

இம் மிஷனெரிமாரில் பலர் இக்காலத்தில் அமெரிக்கா, ஐரோப்பா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் சபைகளில் புதி தாகத் தோன்றிய எழுப்புதலின் பயனால் உணர்வு பெற்று, கிறிஸ்துவின் பெயரால் தன்னலமற்ற சேவை செய்வதற்குத் தம்மை ஒப்படைத்தவர். கிறிஸ்துவின் அன்பால் விழிப்படைந் திருந்த இவர்களின் உள்ளம், எத்துறையில் எல்லாம் பணி செய்ய வாயில் திறந்திருக்கின்றதென்பதை எளிதில் கண்டறிந் தது. மருத்துவப் பணி, கல்விப் பணி, இலக்கிய சேவை, கைத் தொழில், வேளாண்மைத் துறைகளின் முன்னேற்றத் தொண்டு குருடர், செவிடர், தொழு நோயாளிகள், அநாதைகள் முத லானோருக்காகத் தனிப் பாடசாலைகள், இல்லங்கள் அமைத்தல், முதலானவை எல்லாம், உலகில் நன்மையே செய்து சுற்றித் திரிந்த அண்ணலார் பெயரால் ஆரம்பிக்கப்பட்டன.

இவைகளில், கல்வி பணிக் கடுத்ததாக, மக்களின் உடற் பிணி தீர்க்கும் பணிக்கே, மிகவும் ஆதரவான சூழ்நிலை அமைந் திருந்தது. நாட்டு வைத்திய முறைகள் சீர்கெட்டுப்போயிருந்த

இந்தக் காலத்தில், மேனாட்டு மருந்து வகைகள் பெரும் முன்னேற்றம் அடைந்திருந்தன. இன்னும் கோஷாக்களாக வாழ்ந்து வந்த பெண்மணிகட்குச் சேவை செய்ய, பெண் மருத்துவர் தேவைப்பட்டனர். கிறிஸ்தவரைத் தம்பால் வர அனுமதியாத வடமேற்கு மாகாணம், காஷ்மீர் முதலான நாடுகளின் முகமதியர், அவர்கள் மருத்துவரே யாயின், அவர்களை விருப்பத்துடன் வரவேற்றனர். இக்காரணங்களால், மருத்துவப் பயிற்சி பெற்றோர் குரு அபிடேகம் பெற்று, ''மருத்துவ மிஷனெரிமாராகப்'' பணியாற்ற இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர்.

இவ்வகைப் பதவியை ஏற்று முதலாவது இந்தியா வந்தவர், ஹென்ரி ஸ்கடர் (Henry Scudder) என்னும் அமெரிக்க மிஷனெரி. இவர் 1836–ஆம் ஆண்டு இந்தியா அடைந்தார். அவருக்குப்பின் அவரின் மகனும், பெயரரும், ஆர்க்காட்டில் அமைக்கப்பட்ட மருத்துவ மனையிற் சிறந்த பணி புரிந்தனர்.

அவர் பெயரர் ஜாண் ஸ்கடர் என்பார்க்கு, ஐந்து புதல்வருக்குப்பின், அருமைப் புதல்வியாக 1870-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் நாள் ஐடா பிறந்தார். இவர் பிறந்த ஊர் மதராசுக்கு அருகிலுள்ள இராணிப்பேட்டை. ஸ்கடர் குடும்பத்தினர், மருத்துவப் பணியைத் தம் சொந்தக் குடும்பப் பணி எனும் வகையில், பின் பற்றியவர், ஜாண் ஸ்கடருடன் பிறந்த ஆறு சகோதரரும் மருத்துவர் ஆயினர். ஆனால் ஐடாவுடன் பிறந்தவரில் நான்கு பேர் குருக்களாயினர்; ஒருவர் வாணிகம் செய்ய முற்பட்டார்; ஐடா மட்டுமே மருத்துவர் ஆனார்.

### அழைப்பு

ஐடாவும், தமது வாலிபப் பிராயம் மட்டும், மருத்துவப் பணி செய்ய வேண்டுமென எண்ணினர் அல்லர். அமெரிக்காவில் பள்ளிப் படிப்பு நடத்தி வந்த காலத்தில், தாம் உல்லாசமாக வாழ்க்கை நடத்த வேண்டும் எனக் கனவு கண்டவர். பின் தாயார் வியாதிப்பட்ட காரணத்தால், அவருக்கு உதவியாயிருப்பதற்காக இந்தியாவுக்கு அழைக்கப்பட்டார். அக்காலத்தில் திண்டிவனத்தில், ஜாண் ஸ்கடர் பணிபுரிந்து வந்தார். ஆங்கு ஓர் இரவு நடந்த சம்பவம் ஐடா ஸ்கடரின் வாழ்க்கையை முற்றிலும் மாற்றி அமைத்தது.

அன்று தனிமையாகத் தம் அறையில் அமர்ந்து ஏதோ ஒரு நூலில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார். ஒரு பிராமணர், ஒரு முகமதியர், ஒரு முதலியார் ஆகிய மூவரும், அவ்வேளை ஒருவர் பின் ஒருவராக, அவரைத் தேடி வந்தனர். மூவரின் சோகக் கதையும் இதுதான்; "தம் மனைவி மகப்பேறு பெறும் தருவாயிலிருக்கிறார், பிரசவம் கடினமாகத் தோன்றுகின்றது. ஐடா சென்று அவருக்கு உதவக் கூடுமா?" ஐடா ஒரு மருத்துவரின் மகள்; அமெரிக்காவில் கல்வி கற்று வந்திருப்பவர். இதனால், மருத்துவ தொழில் பற்றிய அறிவு பெற்றிருப்பார் என அன்னார் எண்ணினர் போலும். ஐடா தாம் அவ்வகைப் பயிற்சி பெற்றவர் அல்லர் என்பதை விளக்கி, தம் தந்தையார் வந்து உதவக் கூடும் என்றும், அவரை அழைத்துச்செல்ல விரும்பினால், தாமும் அவருடன் வந்து, தம்மால் இயன்ற உதவி செய்தல் கூடும் என்றும் கூறினர். மருத்துவரே ஆயினும், ஓர் ஆண் மகன் தம் மனைவிக்கு அவ்வகையில் உதவுவதைவிட, அவர் உதவி பெருது வருந்தி உயிர் விடுதலே மேல் எனக் கூறி, வந்தவர் சென்றனர். ஐடாவின் மனம், இக்கடுங் கூற்றை ஒரே இரவில் மும்முறை கேட்ட மாத்திரத்தில், திடுக்கிட்டு விழித்தது. தாம் இன்ப வாழ்வு வாழ விரும்புகையில், மருத்துவ உதவி அளிக்க ஒரு பெண் இல்லாத காரணத்தால், எத்தனை பேர் அவதியுறுகின்றனர்.

> அன்று இரவு என்னால் நித்திரை செய்ய முடியவில்லை. ... ... உள்ளத்தில் கொடிய வேதனையுடன் ஜெபத்தில் நேரத்தைக் கழித்தேன்... ... அதுதான் முதல் முறையாக நான் கடவுளை நேர்முகமாகச் சந்தித்துத் தொடர்புகொள்ள முயன்ற சமயம் என எண்ணுகின்றேன். ஆனால், அவர் என்னைத் துவக்க முதல் தம் பணிக்காகப் பக்குவப்படுத்தி வந்திருக்கிறார்.

கிழக்கு வெளுத்த நேரம் கிராமத்திலிருந்து துக்கச் சங்கு ஒலி எழும்பியது. விசாரித்ததில், அம்மூன்று பெண்களும் மரித்துப் போனதாக அறிந்தனர். மீண்டும் ஐடா தன் அறைக் கதவைப் பூட்டிக்கொண்டு ஆண்டவர் பாதத்தில் காத்துக்

கிடந்தார். பின் தம் பெற்றோரிடம் சென்று தாம் அமெரிக்காவிற்குப்போய் மருத்துவப் பயிற்சி பெற்று, இந்தியா திரும்பி வந்து, மருத்துவப் பணி செய்யப் போவதாக வெளியிட்டார்.

ஆனல், அக்காலத்தில், அமெரிக்காவை யொத்த முற்போக்கான நாடுகளிலே தானும், பெண்கள் மருத்துவப் பயிற்சி பெறுவது சுலபமான காரியம் அன்று. எனினும் ஐடா இன்னல்களைப் பொருட்படுத்தாது, அமெரிக்கா ஏகி, கார்னல் கல்லூரியில் மருத்துவக் கலை பயின்று, அக்கல்லூரியிலிருந்து முதன் முதல் வெளியேறிய பெண் மருத்துவர் வரிசையில் ஒருவராய்த் திரும்பி வந்தார்.

### கோடீஸ்வரர் செல்வக் குமாரி

ஐடா சிறுமியா யிருக்கையில், ஏன் தான் ஒரு கோடீஸ்வரர் குழந்தையாய்ப் பிறக்கவில்லை என வருந்துவாராம். அவரது தந்தை "பெருஞ் செல்வத்தைப் பயனுள்ள வகையில் நீ செலவு செய்ய அறியாது திகைப்பாய் என, ஆண்டவர் உன்னை கோடீஸ்வரர் மகள் ஆக்கவில்லை" என்பாராம். ஆனல் அவ்விடை ஐடாவைத் திருப்தி செய்யவில்லை. பிற்காலத்தில் தாமாகவே, அதற்கு ஏற்ற விடை யாது என்பதை அறிந்து கொண்டார். "நான் செல்வப் பெருக்கில் மிதந்து கிடந்திருந்தால், ஆண்டவரின் அழைப்பை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இருந்திருக்க மாட்டேன்" என உணர்வுடன் கூறுவாராம். இதன்பின் எக்காலும் அவர் தம் நிலை பற்றி எண்ணிலர். ஆனல், அவர் சர்வ லோகத்துக்கும் ஆண்டவரும், அரசருமானவரின் பணியைச் செய்ய அழைக்கப்பட்டிருப்பதால், அவரது பெருமாண்பிற்குத் தக்க வகையில் தம் திட்டங்களை வகுக்க மட்டும் சிறிதும் தவறினர் அல்லர்.

அமெரிக்காவில் படிப்பு முடிந்து, இந்தியா வருமுன், 8,000 டாலர் பண உதவி சேகரித்து வருமாறு, ஐயாவுக்குச் செய்தி எட்டியது. அத்தொகையைக் கொண்டு, வேலூரில், பெண்களுக்கென ஒரு மருத்துவ மனை நிறுவுவது எனத் தீர்மானித்தனர். ஐடாவுக்கு அப்பணிக்கு இத்தொகை மிகக் குறைந்தது எனத் தோன்றியது. அவர்கள் எண்ணியதை விடச் சிறந்த வகையில் கட்டிடங்கள் எழுப்பிப் பணியைத்

தொடங்க விரும்பினர். ஆகவே, 50,000 டாலர் தேவை என விளம்பரம் செய்து, பணம் பிரிக்க ஆரம்பித்தார். மிஷன் போர்டு அங்கத்தினருக்கு இச்செய்தி எட்டியது. ஐடாவின் அளவு கடந்த துணிவிற்காக அவரைக் கண்டித்தனர். 8,000 டாலர் மட்டுமே சேகரிக்க அனுமதி கொடுத்தனர். இரண்டு தினங்களில், பெரியார் ஒருவர், தம் மனைவியின் நினைவில் மருத்துவ மனையை ஆரம்பிக்க வேண்டி, முழுத் தொகையாக இருக்கட்டும் எனக் கூறி, 10,000 டாலர் உதவி அளித்தார். ஐடாவின் விசுவாசம் உறுதிப்பட்டது. மிஷன் போர்டு அங்கத்தினரிடம், "நீங்கள் தடுத்திராவிடின், 50,000 டாலர் முழுவதையுமே பெற்றிருப்பேனே" எனக் கூறி மகிழ்ந்தார்

பிற்காலத்தில் ஐடா, வேலூர் மருத்துவப் பணி முன்னேற்றத்துக்கென மும்முறை மில்லியன் டாலர் உதவித் தொகை திரட்டினர். மூன்றும் முறை மருத்துவக் கல்லூரி நிறுவுவதற்காக மில்லியன் டாலர் சேகரிக்க முயன்றபொழுது, இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தது. ஆனால் குறையாத விசுவாசமும், மாருத திவ்விய தரிசனமும் பெற்றிருந்த அம்மையாருக்குப் பண உதவி கிட்டியது.

மருத்துவச் சேவை

1900-ஆம் ஆண்டு ஜனுவரித் திங்கள் முதலாம் நாள், மருத்துவ மிஷனெரி என்னும் பெரும பொறுப்பைத் தாங்கி இந்தியாவில் கால் எடுத்து வைத்தார்.

கிறிஸ்தவப் பணியின் சிறப்பை, 20-ஆம் நூற்றுண்டு இந்திய மக்களுக்கு எடுத்துக்காட்ட மிகவும் பொருத்தமான வேளையில், இவ்வம்மையார் இந்தியா வந்தடைந்தார். அவர் வந்து ஐந்து மாதத்தில், அவரது, அருமைத் தந்தை மரண மடைந்தார். தாம் எதிர்பார்த்த வகையில், தம் தந்தையாரிடம் பயிற்சி பெற இயலவில்லை. பிளேக் வியாதி எங்கும் பரவி, எண்ணிறந்த உயிர்களைக் கொள்ளை கொண்டு போயிற்று. ஐடா மனம் கலங்காது உழைத்தார். தாம் தங்கியிருந்த மிஷன் வீட்டின் ஓர் அறையை, நோயாளிகள் தங்க, வசதி செய்தளித்தார். அவர் செய்த முதல் அறுவை சிகிச்சை வேளையில் அவருக்கு உதவி அளித்தவர், அவர்தாமே பயிற்சி

அளித்துப் பழக்கி வைத்திருந்த சலோமி என்ற தாதிப் பெண் மட்டுமே. இவ்வகையான சிறு ஆரம்பத்திலிருந்து பெரிய காரியங்கள் பிறந்தன.

1902–ஆம் ஆண்டு, மேரி டேபர்ஷெல் ஆஸ்பத்திரி கட்டப்பட்டது. 1907–ஆம் ஆண்டு முதல், தாதிப் பெண்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று திறமையுடன் நடத்தப்பட்டு வந்தது. பெண்களுக்கு எல். எம். பி. (L. M. P.) அளிப்பதற்காகப் பள்ளி ஒன்றை ஆரம்பிக்க ஐடா முயன்றுர்.

1918–ஆம் ஆண்டு, முதல் உலகப்போர் முடிவுக்கு வந்த சமயம், தேவையான உதவி கிடைப்பது நிச்சயம் இல்லாத நிலைமையில், வாடகைக்கு எடுத்த இல்லங்களில் ஐக்கிய மிஷன் மருத்துவப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. "மூன்று பெண்களகூட மருத்துவப் பயிற்சி பெற முன் வரமாட்டார்" என அரசியல் அதிகாரி ஒருவர் கூறினர். ஆனல் 17 இடங்களுக்கு 150 பேர் மனு செய்தனர். ஐடா, கிறிஸ்தவப் பள்ளிகள், கல்லூரிகள் ஒவ்வொன்றுய்த் தேடிச் சென்று, மருத்துவப் பணியில் பெண்கள் பங்கு கொள்ளவேண்டிய தேவை பற்றி விளம்பரம் செய்ததின் விளைவு அது. தாம் செய்யும் பணியின் சிறப்பு மரக்காலுக்குள் மட்டும் விளங்கினல் போதும் எனும் எண்ணம் ஐடாவுக்குக் கிடையாது. நன்கு விளம்பரப்படுத்தி, அப்பணியின் தேவையை மக்கள் உணரவும், அச்சேவையில் அவர்களும் பங்கு கொள்ளவும் செய்வதே அவரின் நோக்கம். நவீன உலகில் இம்முறை பயனளிக்கின்றது.

1928-ஆம் ஆண்டு தோட்டப்பாளையத்தில் 268 பேர் தங்கி சிகிச்சை பெறத்தக்க பெரிய மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டது. 1933 இல் வேலூரிலிருந்து நான்குகல் தொலைவில், மருத்துவப் பள்ளிக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு, அதின் இருப்பிடம் மாற்றப்பட்டது. நடுவில் அழகிய வெண்மோடு தாங்கி நிற்கும் சிற்றுலயம் அமைய, அதைச் சுற்றிலும் சிறிதும் பெரிதுமாகப் பல கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1937–இல் ரேடியம், எக்ஸ்ரே முதலிய நவீன சிகிச்சைகள் பெறுவதற்கான கட்டடங்கள் சேர்க்கப்பட்டன.

1937-ஆம் ஆண்டின் இறுதியில் சென்னை மாகாணத்திலுள்ள மருத்துவப் பள்ளிகள் யாவும் கல்லூரிகளாக்கப்பட

வேண்டும், அல்லது மூடப்படவேண்டும் எனும் சட்டம் விதிக்கப்பட்டது. இதுகாறும் கலங்காது உழைத்து வந்த அம்மையார், மனம் தளர்ந்தார். பள்ளியின் நிலையை உயர்த்த தேவையான கட்டடங்களுக்கான பணம், மருத்துவ ஊழியர், புதிய சிகிச்சை முறைகளுக்குத் தேவையான கருவிகள் யாவையும் விரைவில் எவ்வாறு சம்பாதிப்பது? கலக்கங்களின் ஊடே அவர் உள்ளம், தன் ஒரே நம்பகமான நங்கூரத்தைச் சார்ந்தது.

> முதலாவது சிந்தனை செய், பின் செயலில் ஈடுபடு. எதைச் செய்யப் போகிறோம், எதற்காகச் செய்யப் போகிறோம் என்பதை உன் மனத்தில் தெளிவுபடுத்திக்கொள். பணம் மிக முக்கியமானதன்று. நீ கட்டுவது மருத்துவப் பள்ளி அன்று கடவுளின் இராஜ்ஜியத்தைக் கட்டி எழுப்புகிறாய். அதைக் குறுகிய அளவுக்குள் அடக்கிவிட முயன்று தவறு விளைக்காதே. கடவுளின் சித்தம், நாம் ஒரு கல்லூரியாக இப்பள்ளியை உயர்த்துவது என்றால், அதை நிறைவேற்றி முடிக்கவேண்டும்.

இவ்வாறு தன் குறிப்புப் புத்தகத்தில் எழுதிவிட்டு, அடுத்து எவ்வகையில் வாயில் திறக்குமெனக் காத்திருந்தார்.

ஆண்களுக்கென ஒரு மருத்துவ கல்லூரியை இந்தியாவில் ஆரம்பிக்க அமெரிக்க சபைகள் விரும்பின. அதனை வேலூரிலே ஆரம்பித்தால் தேவையான பணம் கிடைப்பதாகத் தோன்றியது. ஆனால் இதுமட்டும் தமது தனி முயற்சி என்பதாகவே கருதி உழைத்து வந்த பெண்கள் சங்கங்கள் இம்மாற்றத்தை வரவேற்கவில்லை. ஐடாவுக்கு ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஒத்துழைத்து, கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுவதே சிறந்த முறையாகப்பட்டது. 1942-ஆம் ஆண்டு இருபாலாரும் சேர்ந்து மருத்துவப் பயிற்சி பெறுவதற்கான வேலூர் மருத்துவ கல்லூரி ஆரம்பமானது.

### சாலை ஓரப் பணி

வருங்காலத் தேவைகளை எவ்வாறு மனத்திற் கொண்டு, முற்போக்கான திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வந்தாரோ, அவ்வாறே துவக்க காலம் முதல் சிற்றூர்களில் பிற்போக்கான நிலையிலிருந்து வாடிய மக்களுக்கும் உதவி புரிந்து வந்தார்.

சாதாரண குதிரை வண்டியில் ஏறிச் சென்று, வேலூரைச் சுற்றி யுள்ள கிராமங்களிலுள்ள மக்களில் நோயுற்ரோரை மரத்தடி களில் சேர்த்துக் கூட்டி சிகிச்சை அளிப்பார். 10 மோட்டார் வாகனங்களில் வாரம் இருமுறை சென்று, இன்றும் இப்பணி யைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இச்சேவையால் கிராம மக்கள் பயனடைவதுடன், சிகிச்சை அளிப்போரும், நோயுற்ரோர் வாழும் சூழ்நிலை பற்றி அறிய வாய்ப்பு பெறுகின்றனர். ஐடா ஸ்கடர் இவ்வாறு கிராமங்கள் தோறும், வீடுகள் தோறும் சென்று மக்களின் துன்பத்தையும், துயரையும் நேர்முகமாக ஆராய்ந்து கண்டவர். அறிவீனமும், அறியாமையும் வருவிக்கும் தீமைகளை அறிந்தவர் ஆகவே, அதிகமாகப் பெண்கள் மருத்துவராகவும், தாதிப் பெண்களாக வும், பயிற்சி பெற்று, தொண்டாற்றி, உலகின் துயரைக் குறைக்க வேண்டுமென விரும்பினர்.

இரண்டாம் போர் சமயம் இந்திய மருத்துவர் ஒருவர் ஆங்கில மருத்துவரிடம், நோக்கி, ஆங்கில அரசாட்சியின் நீதி பற்றி எரிச்சலுடன் குறைகூறினர். பல நாட்டவர் ஒன்று சேர்ந்து தொண்டாற்றின இடத்தில், இவ்வகைப் பூசல்கள் தோன்றுவது இயற்கையே. ஆனல் ஆண்டவரின் அன்புக்குச் சான்ருய் விளங்கிய அத்தாபனத்தில் இவ்வகை உணர்ச்சிகளை அடக்காது விட்டுவிட ஐடா அம்மையார் விரும்பவில்லை. அடுத்த முறை சாலை ஓரப் பணிக்காகச் சென்ற வாகனத்தில், அவ்விரு மருத்துவரையும் சேர்த்து அனுப்பி வைத்தார்.

அந்திவேளை இருவரும் அகமகிழ்ச்சியுடன் திரும்பினர். அவதியுறும் மக்களின் துயரைத் துடைக்க சேர்ந்து உழைத்துக் களைத்து வந்த இருவர் உள்ளமும், கசப்பை மறந்து, அன்பினல் ஆட்கொள்ளப்பட்டிருந்தது. உலகின் பல நாட்டுத் தலைவர் களையும் சில முறை சேர்த்து, சாலை ஓரப் பணிக்காக அனுப் பினல் நலமாயிருக்குமென ஐடா கூறினராம்!

### தொழு நோய்ச் சிகிச்சை

கிறிஸ்துவின் நாமத்தில் மருத்துவப் பணி புரிய முற்படு வோர், தொழுநோயினர்க்கெனத் தனிச் சிகிச்சை செய்ய முயலாதிருத்தல் கூடாது. மக்களின் உடலையும் உள்ளத்தை

யும் ஒருங்கே கெடுத்து, மனிதத் தன்மையைப் பாழாக்கும் கொடிய நோய் இது. ஆனால் எங்கெல்லாம் கிறிஸ்துவின் அன்பு பரவியுள்ளதோ, அங்கெல்லாம் இந்நோயின் பலம் குன்றியுள்ளது. மேல் நாடுகளில், வியாதியுள்ளோரைத் தனியே பிரித்து வைத்துச் சிகிச்சை செய்து, வியாதியை ஒழித்து விட்டனர். ஆனால் வேலூரை அடுத்த கிராமங்களில் இந்நோய் கண்டிருந்தவர், தனியாகப் பிரித்து வைக்கப்படுவதை அறவே வெறுத்தனர். ஆகவே கிராமங்களில் குறிப்பிட்ட இடங்களில் இம்மக்களை குழுமி வரச்செய்து, அவர்கட்கு ஊசி மருந்து செலுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. புதிய சிகிச்சை முறைகளும், மருந்துகளும் இந்நோயைக் குணப்படுத்த கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவைகளால் கிராம மக்கள் பயன் பெறு கின்றனர்.

### மலையின் மேல் ஏற்றப்பட்டுள்ள தீபம்

சமீப காலத்தில் தொழுநோய், மனநோய், ஆகியவற்றிற் குப் புதிய சிகிச்சை அளிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. உலகின் பல பாகங்களிலும் மருத்துவத் துறையில் அடைந்துவரும் முன்னேற்றங்களை வெகு விரைவில் தம் மருத்துவ மனையில் பயன்படுத்த இத்தாபனம் முயலுகின்றது. படிப்படியாக வளர்ச்சி அடைந்து, இன்று ஆசியா நாட்டிலேயே சிறந்த மருத்துவசாலையாக வேலூர் மருத்துவசாலை விளங்குகின்றது.

இவ்வகை முன்னேற்றங்களை ஒருவர் தம் வாழ்வு காலத் தில் கண்டுகளிக்க பேறு பெறுவது அபூர்வம். ஐடா ஸ்கடர் அம்மையார், மருத்துவத் துறையில் கடவுட்காகப் பெரிய காரியங் களைச் சாதிக்க முயன்றவர். அவரின் வாழ்வின் இறுதிக் காலத் தில், ''இவ்வகை முன்னேற்றங்களைக் காணும் பொழுது மன நிறைவு தோன்ற வில்லையா? எச்சிறு ஆரம்பம் இப்பெரும் வளர்ச்சியை வகுத்துள்ளது''? என வினவிய ஒருவரிடம்,

'' ஆம் கடவுள் எனக்கு நன்மையானவைகளைச் செய் துள்ளார் ''

என மனப்பூர்வமாய்ப் பதிலளித்தாராம். பெருமைப்பட இடமில்லை. நன்றி உணர்ச்சிகள் தான் மேலிட்டன. இப்

பெரியாரின் வாழ்க்கையும் சேவையும், இந்திய நாட்டையும் இந்தியத் திருச்சபையையும் ஒரு முக்கியத் துறையில் வளம் செய்துள்ளது.

துவக்கத்தில், இத்தாபனம் ஐடா ஸ்கடரை அனுப்பிய அமெரிக்க சீர்திருத்தச் சபையின் முயற்சியாகவே ஆரம்பித்தது. ஆனால் நாளடைவில் வேறுபல சபைப் பிரிவினரும் உதவ முன் வந்தனர் இங்கிலாந்து, கனடா, டென்மார்க்கு, வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா முதலான பல நாடுகளிலும், இத்தாபனத்தின் ஆதரவுக்காகச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தாபனத்தின் அதிசய வளர்ச்சிக்கு ஒரு காரணம், "இது பல சபைப் பிரிவினரின் கூட்டு முயற்சிக்கும், பல நாட்டவரின் கிறிஸ்தவ சகோதரத்துவத்துக்கும் சிறந்த சின்னமாக விளங்குவதே" எனக் கூறின் அது பொய்யாகாது. இன்று பத்து நாடுகளிலுள்ள நாற்பது புரோட்டஸ்தாந்து சபைப் பிரிவினர் இத்தாபனத்தை ஆதரிக்கின்றன.

இயேசுவா யூதர்களுக்கு வாக்களிக்கப்பெற்ற மேசியா என அறிந்துவர, யோவான் முனிவர் தொண்டர்களை அனுப்பினார். காரணம் கூறியோ, தீர்க்கரின் உரைகளைச் சுட்டிக் காட்டியோ, ஆண்டவர் தம் தெய்வத் தன்மையை நிரூபிக்கவில்லை. தம் வல்லமையால் சரீரத்தில் குணமாக்கப்பட்ட மக்களையும், ஆவியில் புதுப்பிக்கப்பட்ட ஆட்களையுமே அவர்கட்குச் சுட்டிக் காண்பித்தார். இந்திய நாடும், இற்றைச் சூழ்நிலையில், தன்னல மற்ற சேவை புரியம் மருத்துவ ஊழியர் மூலம் இயேசுவின் தெய்வத் தன்மையை அறிந்து, உணர்ந்து உய்ய வழி பிறக்கலாம்.

# 7

## வேதநாயகம் சாமுவேல் அசரியா

முதலாம் நூற்ருண்டு முதல் இந்தியாவில் தோன்றி நிலேத்து வந்த இந்தியத் திருச்சபை, விழிப்புணர்ச்சியுடன் தன் பொறுப்பை உணர ஆரம்பித்த காலம் 20 ஆம் நூற்ருண்டு தான்! 1903 ஆம் ஆண்டு திருநெல்வேலியிலும், 1905 ஆம் ஆண்டு செராம்பூரிலும், இரு இந்திய மிஷனெரித் தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதுகாறும் சுவிசேடத் தூதின் நலன்களேத் தாமே அனுபவித்து வந்த இந்தியக் கிறிஸ்தவர், தம் சகோதரருடன் அந்நலன்களேப் பகிர்ந்துக் கொள்ள ஆரம்பித்தனர். இம்முயற்சிகளில் முன்னின்று வழி காட்டிய வாலிபர் வேதநாயகம் சாமுவேல் அசரியா.

### தமிழ்க் குலத்தின் தவப் புதல்வர்

தென்னுட்டில், இன்றும் கிறிஸ்தவருக்குள் நிலவி வரும் ஒரு வழக்கம், தாம் விரும்பிப் பெற்ற பிள்ளே ஆணுயிருப்பின், அதற்குச் சாமுவேல் எனப் பெயர் சூட்டி, அப்பிள்ளேயைத் திருப்பணிக்கென ஒப்படைப்பது. இவ்வாறு, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வெள்ளாளன்விளே கிராமக் குருவான தாமஸ் வேதநாயகம் ஐயரும் அவரது மனேவியும், தமக்கு 14 வருடங்களுக்குப் பின் பிறந்த செல்வச் சிறுவனுக்குச் சாமுவேல் அசரியா எனப் பெயர் சூட்டி, அவரைத் திருப்பணிக்கென ஒப்படைத்தனர். பெற்ருேர் தம் பொறுப்பை அத்துடன் நிறுத்தி விடவில்லே. பிள்ளேயில் கிறிஸ்தவப் பணபு உருவாக தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தனர்.

ஒரு சமயம் பள்ளியில், ஆப்பிரிக்காவிலுள்ள உகாண்டா நாட்டில் நடைபெறும் மிஷனெரி பணிபற்றிக் கேட்டறிந்த அசரியா, அப்பணியை ஆதரிப்பதற்காகத் தம் கையில் போட்டிருந்த தங்கக் காப்புக்களேக் கழற்றி, ஆசிரியரிடம் கொடுத்துவிட்டார். பையன் சிறுவன் என்றும், பெற்ருேர் இச்செயலே ஆமோதிக்க மாட்டாரென்றும் ஆசிரியர் எண்ணி, பெற்ருேரின் உத்தரவைப் பெற்று வர அனுப்பி விட்டார். உத்தமக் கிறிஸ்தவரான பெற்ருேர் இருவரும் மகனின் வாஞ்சை அறிந்து மகிழ்ந்தனர். பொற்காப்புக்களே

மிஷனெரிப் பணிக்கெனக் கொடுக்க அனுமதித்தனர். பிற்காலத்தில் தன்னை முழுவதுமாகக் கடவுளின் பணிக்கெனப் படைக்க வேண்டிய பிள்ளை, முதலில் தன் பொருளைக் கொடுத்தும் பழகட்டுமென உற்சாகமளித்தனர் போலும். எவ்வாறெனினும், சிறுவன் உள்ளத்தில், இள வயது முதல், தாம் "கடவுட் கெனப் பிரித்து வைக்கப்பட்டவன்" எனும் எண்ணம் ஊன்றிப் பதிந்து நின்றது.

அசரியா சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்டார். ஆனால், தாயாரின் முன் மாதிரியான வாழ்க்கையும், கடவுட் பற்றும் சிறுவனைக் கவர்ந்தன. தாயின் மடியிலிருந்து கற்ற சத்திய வேதத் திருமொழிகள், பச்சை மரத்தில் அடித்த ஆணி போல், அவர் மனத்தில் பதிந்தன. தனிப்பட்ட ஆன்ம அனுபவம் யாதும் கடவுளை நெருங்கிச் சேர அசரியாவுக்கு அனுகூலம் அளித்ததாகத் தெரியவில்லை. பொதுவாக வீட்டிலும், பள்ளியிலும், கிராமத்திலும் நிலவி நின்ற கிறிஸ்தவச் சூழ்நிலை, அவர் வாழ்க்கை வேறுபடாது, கிறிஸ்துவின் சாயலில் மட்டும் மாறுதலடைய உதவி வந்தது.

உயர்நிலை பள்ளிப் படிப்பை, மெய்ஞ்ஞானபுரத்தில் முடித்து விட்டு, திருநெல்வேலியில், இரண்டு வருடம், கல்லூரியில் சேர்ந்து பயின்றார். இங்குக் கிறிஸ்தவருக்குள் நிலவி வந்த சாதி வேறுபாட்டை ஒழிப்பதற்காக, "கிறிஸ்தவ சகோதர சங்கம்" என ஒன்றை ஆரம்பித்தார். இதன் பின் இரண்டு வருடம் சென்னையில் கல்வி கற்றார். ஆனால் பீ. ஏ. பட்டத் தேர்வு எழுத முடியாதவாறு நோய்வாய்பட்டார்.

அடுத்து யாது செய்வதென அறியாது காத்திருக்கையில், வாலிபர் கிறிஸ்தவ சங்கத்தின் (Y. M. C. A.) தென் இந்தியக் காரியதரிசிப் பதவி அவருக் களிக்கப்பட்டது. இதனை விருப்பத்துடன் ஏற்று அடுத்த 13 ஆண்டுகள் சிறந்த சேவை புரிந்தார்.

20 ஆம் நூற்றாண்டின் துவக்க காலம், பாரத நாடெங்கும் சுதந்தரக் கிளர்ச்சிகள் உருவாகி வளர்ந்தன. அச்சூழ்நிலையில், மிஷனெரிமாரின் ஆளுகைக்குக் கீழ் இயங்கி

வந்த திருச்சபையின் பணியில், நேர்முகமாகப் பங்கு பெறத் திறமைமிக்க வாலிபர் பலருக்கு விருப்பமில்லை. ஆகவே, அசரியாவைப் போல, கே. டி. பால், ஏ. ஒ. அப்பாசாமி, வி. சத்தியாகு முதலான பெயர் பெற்ற பெரியார்களும், கிறிஸ்தவ இயக்கங்களில் தொண்டாற்ற ஆரம்பித்தனர். இவ்வகை இயக்கங்களின் சேவையில் இவர் தம் வாலிபப் பிராயத்தைச் செலவிட்டதால், பிற்காலத்தில் திருச்சபைக் குள்ளே பயனுள்ள சேவை செய்யப் பக்குவ மடைந்தனர். தம் பணியின் காரணமாய், நாட்டின் பல பாகங்களுக்கும், சில வேளைகளில் அயல் நாட்டுக்கும் செல்ல வேண்டிய தாயிற்று. இதனால் பல இடங்களில் கிறிஸ்தவரின் நிலை பற்றி நேர்முகமாக அறிய அவருக்கு வாய்ப்பு கிட்டியது. விசுவாசம் நிறைந்த தலைவர் பலருடன் பழகவும், இந்தியத் திருச்சபையின் வருங்கால வாழ்க்கை பற்றிக் கலந்து ஆலோசிக்கவும், தருணம் வாய்த்தது.

அசரியா அங்ஙனம் வாலிபர் சங்கத்தில் காரியதரிசி யாகப் பணியாற்றிய சமயம், அவருக்கு ஷெர்வூட் எடி (Sherwood Eddy), ஜாண் மாட் (John Mott) என்னும் இரு பெரியாருடன் நட்பு கொள்ளும் பேறு கிடைத்தது. இதனால் இவ் அமெரிக்கர் இந்தியரின் மனநிலை பற்றித் தெளிவுடன் அறிந்து பணி ஆற்றினர். அசரியாவும் மேனாட்டவரைச் சகோதரராகப் பாவித்துப் பழக கிறிஸ்துவுக்குள் வழி உண்டு என்பதை விளங்கிக் கொண்டார்.

முரசொலி

தமிழ் மகன் ஒருவன் செவியில் முரசொலி பட்ட மாத் திரத்தில், அவன் தோள்கள் விம்மிப் பூரிக்கும். பகைவனை வென்று ஒடுக்க வீர முழக்கமிட்டுப் போர்க்களம் ஏகுவான். தமிழ்க் குடியில் தோன்றிய அசரியாவும், இம் மரபுக் கேற்ப முரசொலி எழுப்பினார் — போர்க்களம் புக அல்ல — இன் னும் இரட்சிப்பின் நற்செய்தியைக் கேட்டிராத இந்திய மக்களைத் தேடி, காடோ, மேடோ, கடலோ, மலையோ, நாடோ, வனமோ எங்கெனினும் செல்ல. இப்பணியை இந்தியரே, இந்தியப் பணவுதவியுடன், இந்தியரின் மேற் பார்வையிற் செய்தல் வேண்டும். இவ்வகைப் பணி ஒன்றை யாழ்ப் பாணம் கிறிஸ்தவர் செய்து வந்தனர். அதனைக் கண்ணுற்று,

இந்தியாவிலும் அவ்வகைப் பணியை ஆரம்பிக்க அசரியா விரும்பினர். தம் சகாக்களுடன் சேர்ந்து, கடவுள் தம் தாய் நாட்டைச் சூழ்ந்து நிற்கும் அறியாமை இருளை அகற்றும் போருக்கென, வீரர்களை அனுப்ப வேண்டி வந்தார். ஊழியரும் பணவுதவியும் வேண்டாமலே கிட்டின. 1903 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் இந்திய மிஷனெரி சங்கம் அமைக்கப்பட்டது. அதின் முதல் காரியதரிசியாக அசரியாவே நியமிக்கப்பட்டார். முதல் மிஷனெரிமாராக, சாமுவேல் பாக்கியநாதனும், அவர் உடன் பிறந்தார் சாலொமோன் பாக்கியநாதனும், தோர்ணக்கல் சென்றனர். தெலுங்கு நாட்டில், நைசாம் மாகாணத்துக் கருகிலுள்ள பிற்போக்கான ஒரு பாகம் இது. இதுகாறும் இயேசுவின் நாமத்தைக் கேட்டறியா மக்களிடையே, தமது பணியை ஆரம்பிப்பதற்காகப் புறப்பட்டுப் போயினர்.

1905 ஆம் ஆண்டு இதைவிட விரிவானதோர் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. செராம்பூரில், சுதேச மிஷனெரி சங்கம் ஒன்று, எல்லாச் சபைப் பிரிவினருக்கும் பொதுவாக ஆரம்பிக்கப்பட்டது. அதுவும், இந்திய மக்கள், இந்தியப் பணவுதவியுடன், இந்தியர் மேற் பார்வையின் கீழ், தம் சகோதரருக்குள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தித் தொண்டாற்ற வேண்டிய கடமையை உணர்த்துவதற் காகவேயாம். இச்சங்கம் ஆரம்பிக்க முன் நின்று உழைத்தவரும் அசரியாவே ஆவார்.

மேல் நாட்டினரால் இந்திய மக்களின் மன நிலையை முற்றிலும் விளங்கிக் கொள்ளுதல் கடினம். அவர்களை விட வெற்றியுடன் சுவிசேடத் திருப்பணியை இந்தியருக்குள் செய்யக் கூடியவர் இந்தியக் கிறிஸ்தவரே. இதனை நன்கு அறிந்தவர் அசரியா. எனினும், இக்காரணங்களை மட்டும் மனத்தில் வைத்து, சுவிசேடப் பணியை இந்தியர் மேற் கொள்ள வேண்டுமென அவர் தூண்டி எழுப்பவில்லை.

> ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவுக்குச் சாட்சி என்பதே, நாங்கள் இந்திய நாட்டைக் கிறிஸ்துவுக்காக வெல்ல முயலும் திட்டத்தின் கருத்துச் சுருக்கம். இயேசு கிறிஸ்து விட்டுச் சென்ற ...

பணியைத் தொடர்ந்து நடத்தியது திருச்சபை. ... அச்சபையின் அங்கத்தினர், ஒவ்வொரு காலத்திலும், தொடர்ந்து அவர் துவக்கிய பணியைச் செய்ய வேண்டும். அல்லது தாம் பெற்ற திரு முழுக்கைப் பொய்யாக்குகின்றனர். ஆதித் திருச்சபையில் சாதாரண மனிதன் தான் கிறிஸ்துவின் சுவிசேடத் தூதைப் பரப்பியவன்... ஓர் அடிமை மற்ருெரு அடிமையிடமும், ஒரு போர்ச் சேவகன் மற்ருெரு போர்ச் சேவகரிடமும், ஒரு தொழிலாளி இன்னெரு தொழிலாளியிடமும், தத்தம் அனுபவத்தைப் பகிர்ந்து கொடுத்து வந்தார். ஒருவர் தம் கிறிஸ்தவ அனுபவம் பற்றி மற்ருெருவரிடம் கூறுவதால், தாமே விசுவாசத்தில் வளர்ச்சி பெறுகின்ருர்.

இவ்வாறு, அசரியா 1938ஆம் ஆண்டு தாம்பரத்தில் நடந்த மிஷனெரி மகாநாட்டில் கூறியது, சுவிசேடப் பணி பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்களை விளக்குகின்றது. ஒருவன் கிறிஸ்தவனுயிருப்பதின் நோக்கம் கிறிஸ்துவுக்குச் சாட்சி பகருதலுக்காகவே என அவர் எண்ணினுர்.

அசரியா கண்காணியாராகிய பின் தம் ஆளுகையின் கீழ்க் கிறிஸ்தவராகிய ஒவ்வொருவரையும், தம் தலையின்மேல் தம் கையை வைத்துக் கொண்டு "சுவிசேடத்தைப் பிரசங்கியாவிட்டால் எனக்கு ஐயோ" எனக் கூறச் செய்வார். சுவாசிக்க முடியாத மனிதன் உயிரற்றவன். அது போல சுவிசேடத்தைப் பிரசங்கியாத தனிக் கிறிஸ்தவனே, தனிச் சபையோ உயிரற்றவர். உயிரும் உரமும் உள்ள திருச்சபையை இந்திய நாட்டில் நிலைகொள்ளச் செய்ய வேண்டி, அவர் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் சுவிசேடப் பணியில் பங்கெடுக்க வேண்டினர்.

### முதல் இந்தியக் கண்காணியார்

அசரியா இந்திய மிஷனெரி சங்கத்தின் செயலாளராகவும் பணி ஏற்று நடத்தி வந்ததால், வாலிபர் மகாநாடுகளிலெல்லாம், இந்திய நாட்டில் கிறிஸ்து சமயச் தொண்டாற்ற வாலிபர் தேவை என்பதை விளக்கி வந்தார். ஒரு கூட்டத்

தில், மாணவர் ஒருவர், "ஏன் அசரியா தாமே நற்செய்திப் பணியாற்றுவதற்குத் தோர்ணக்கல் செல்லக் கூடாது?" என வினவினர். இவ்வினவானது முன்னரே இவ்வகைப் பணிக்காகப் பக்குவம் அடைந்திருந்த அசரியாவின் உள்ளத்தில் இறைவன் அழைப்பாகவே தொனித்தது. அசரியா அக்கணமே சென்னைத் திருமண்டிலக் கண்காணியாரிடம் புறப்பட்டுப் போய், தாம் தோர்ணக்கல்லில் சுவிசேடப் பணி செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார்.

சென்னைக் கண்காணியார் ஒயிட்ஹெட் என்பார் (Bishop Whitehead திறமை மிக்கவர். பக்தியும் விசுவாசமும் நிறைந்தவர். கடவுள் இந்தியத் திருச்சபைகளுக்குள் தம் இரட்சிப்பின் வல்லமையை விளங்கச் செய்வார் என நம்பிக்கையுடன் காத்திருந்தவர். அசரியாவின் விருப்பம் அறிய வந்தவுடன், அவரே கடவுள் தமது வல்லமையை விளங்கச் செய்ய உபயோகிக்க விரும்பும் கருவி என்பதை உணர்ந்தார் இளைஞரின் ஆர்வத்தையும், ஆற்றலையும், தக்க வகையில் வளர்த்துப் பயன்படுத்த ஒயிட்ஹெட் பெரிதும் உதவி புரிந்தார்.

ஒயிட்ஹெட்டின் ஆலோசனைக்கிணங்கி, அசரியா அவருடன் தங்கி, இறையியற் கல்வி பெற்றார். 1909 ஆம் ஆண்டு டீக்கன் பட்டம் பெற்று, தோர்ணக்கல் சென்றார். அவரது திருப்பணியில் ஒத்த ஆர்வம் கொண்டிருந்த அவரது அருமை மனைவி சிறு குழந்தைகளுடன், உற்றார் உறவினர், உதவியாளர் எவரும் வந்து எட்டாத காடுகளுக்குள், அவரைப் பின் சென்றார்.

1908 ஆம் ஆண்டு முதல் ஒயிட்ஹெட் கண்காணியார், தமக்கு உதவிக் கண்காணியாராக அசரியாவை நியமிக்க முயற்சிகள் செய்து வந்தார். ஒரு சிலர் எதிர்ப்புக்கள் தெரிவித்தனர். பலர் இந்தியத் திருச்சபை தன் வீட்டுக் காரியங்களுக்குத் தானே பொறுப்பேற்கத் தக்க வகையில் வளர்ச்சி அடைந்து விட்டதென மகிழ்ந்தனர். இந்தியர் சிலரின் மனம் பொறாமையால் புழுங்கியது. மிஷனெரிமார் சிலர் "எமக்கு மேல் கண்காணியராக ஓர் இந்தியர் இருப்பதா?" என வினவினர். கடவுள் எல்லாக் காரியங்களையும் அற்புதமாய் அடக்கி ஆண்டார். 1912 ஆம் ஆண்டு, அசரியா தமக்

கெனத் தனி ஆளுகை செலுத்த ஓர் அத்தியட்சாதீனம் உடையவராய், தோர்ணக்கல் கண்காணியார் என அபிடேகம் பெற்ருர். சென்னை உதவிக் கண்காணியாராகவும் பணிபுரிந்தார். இச்செயல்பற்றிப் பெரியார் ஒருவர் கூறியதாவது:—

> ஆங்கிலிக்கன் சபை பெரிதும் முக்கியமுமான பல காரியங்களை இந்தியாவில் செய்துள்ளது. இந்தியக் கிறிஸ்தவர்க்குள் தலைவர்களை எழுப்ப, அது செய்துள்ள முயற்சிகள் மெச்சத்தக்கன ஆனல் அவை யாவிலும் சாமுவேல் அசரியாவை முதல் இந்தியக் கண்காணியாராகத் தோர்ணக்கல்லில் நியமித்ததே, யாவரும் அதிசயிக்கத் தக்க தீரச் செயல் ஆகும்.

முதல் உலகப் போரின் முடிவில் பணக் குறைவாலும், விலைவாசிகளின் உயர்வாலும், நாடெங்கும் நெருக்கடி நிலை நிலவியது ஆனல், தோர்ணக்கல் திருமண்டில வளர்ச்சிக்காகப் போதிய உதவி கிட்டியது. தேவையான கட்டடங்கள் எழும்பின. ஊழியர் தொகை பெருகியது. ஆயிரக்கணக்கில் மக்கள் கிறிஸ்துவின் மந்தையில் வந்து சேர்ந்தனர். 1917 ஆம் ஆண்டு, தோர்ணக்கல் திருமண்டிலத்தின் மேற்பார்வையிற் பணியாற்ற, தெலுங்கு நாட்டில் தொண்டாற்றி வந்த சி. எம். எஸ். (C. M. S.) சங்க மிஷனெரிமாரும், எஸ். பி. ஜி. (S. P. G.) சங்க மிஷனெரிமாரும், முன் வந்தனர். அசரியாக் கண்காணியார் தம் பொறுப்பைத் திறமையுடன் நிறைவேற்றி வந்தார் என்பதற்கு, இச்செயல் சான்று பகர்ந்தது.

### இந்தியர் - மிஷனெரிமார் ஒத்துழைப்பு

இந்தியக் கிறிஸ்தவருக்கும், மிஷனெரிமாருக்கும் இடையில் நிலவி வந்த தொடர்பு பற்றி, அசரியா பலமுறை கவலை கொண்டதுண்டு. மிஷனெரிமாரில் பலர் இந்தியாவில் அரசு செலுத்தி வந்த ஐரோப்பிய வகுப்பினராய் இருந்ததினுலோ, வேறு காரணத்தினுலோ, சபை மக்களை விட்டு ஓரளவு ஒதுங்கி வாழ்ந்து வந்தனர். சபை ஆட்சி முறையில் அதிகாரம் அவர்களிடமிருந்தது. இந்திய ஊழியரை அவர் தம்

கையாட்களாகக் கருதி நடத்தி வந்தனர். இந்நிலை கிறிஸ்தவ சிந்தைக்கு மாறுனது; கிறிஸ்தவ விசுவாசத்தில் பிறக்கும் சுவாதீனத்தை வளர்க்க தடையாக அமைவது; இந்தியத் திருச்சபையில், இந்தியர் பொறுப்புடன் தலைமை வகித்துச் செயலாற்ற இடம் அளியாதது. ஆகவே, அசரியா 1910-ஆம் ஆண்டிலேயே எடின்பரோவில், நிகழ்த்திய உலகப் பிரசித்தி பெற்ற பேருரையில் கூறியதாவது:—

துவக்க காலத்தில் மிஷனெரிமார் புதிதாய்க் கிறிஸ்தவரானவர்களுக்குத் 'தகப்பன்மார்' போல் அதிகாரம் வகித்தனர். கிறிஸ்தவரானவரும் தாம் 'குழந்தைகள்' என்னும் நிலையில் நிற்கத் தயங்கவில்லை......இன்று புதிதாக வரும் மிஷனெரிமார் தொடர்ந்து தகப்பன்மாராக இருக்க விரும்புகின்றனர். ஆனல், கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ந்துள்ள இரண்டாம் மூன்றும் தலைமுறைக் கிறிஸ்தவர், அவர்களுக்குப் பிள்ளைகள் போல் அடங்கி நடக்க விரும்பவில்லை......மிஷனெரிமார் தாம் பணியாற்றும் மக்களின் நடுவில் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரிகள் போல் நடந்து கொள்ளாது, சகோதரர், அல்லது சிநேகிதர் என்ற அளவில் பழகி ஒழுக விரும்புகிறோம்.

இரு திறத்தாருக்குள்ளும் கூட்டுறவு தோன்ற வேண்டுமெனின், சபை ஆட்சி முறையில் மாறுதல்கள் தேவை......இந்தியக் கிறிஸ்தவர், சபையில் சுவாதீனத்துடன் சுய ஆட்சி செய்ய வாய்ப்பளிக்க வேண்டும்......சபைப் பொறுப்பை இந்தியரிடம் விடுவதென்பது, வெளி நாட்டு உதவியையும், மேற்பார்வையையும், திடீரென நிறுத்தி விடுவதாகாது. ஆராய்ந்து நிதானமாக இக்காரியத்தில் செயலாற்ற வேண்டும். ஆனல் கட்டாயமாக இவ்வகைக் கட்டுப்பாட்டை நீக்குதல் அவசியம். சபைப் பொறுப்பை ஏற்றுச் செயலாற்றப் பழகுவதினலே தான், உள்ளம் உரம் கொண்டு, பண்படும்.

ஆவிக்குரிய வகையில் தொடர்பு தோன்றினுல் தான் கூட்டுறவு நிலைக்கும்...... இந்திய நாடு இன்னும் பல காலத்துக்கு ஆன்ம வாழ்வை வளர்க்க மேனுட்டவரின் உதவியை நாடும். நீங்கள் பல நூற்ருண்டுகளாகக் கிறிஸ்தவ வாழ்க்கை நடத்தியவர். நாங்கள் உங்களிடமிருந்து அறிய வேண்டிய காரியங்கள் பல உண்டு..... கிறிஸ்துவில் அடங்கியுள்ள சொல்லி முடியா ஈவுகளைத் தனித் தனியாக ஆங்கிலேயர், அமெரிக்கர், ஐரோப்பியர் என்ற முறையிலோ, ஜப்பானியர், சீனர், இந்தியர் என்ற வகையிலோ, கண்டறிய முடியாது. யாவரும் ஒன்ருக உழைப்பதால், கடவுளை ஆரா திப்பதால், ஒருங்கு சேர்ந்து கடவுளின் உண்மை களை விளங்கிக் கொள்வதால், அவரின் சாயலில் மாறக் கூடியவர்களாவோம்.

வருங்காலத்தில், தலைமுறை தலைமுறையாக, இந்தியர் எழும்பி, மேனுட்டு மிஷனெரிமாரின் வீரத்தையும், சுயநலமற்ற சேவையையும், நன்றி யுடன் பாராட்டுவார். நீங்கள் உங்கள் பொருளை ஏழைகட்கு வழங்கத் தயங்கவில்லை; உங்கள் உடலைத் தீயிலிடவும் அஞ்சவில்லை. இவைமட்டும் போதா; உங்கள் அன்பையும் நாங்கள் நாடு கின்ருேம்; நண்பர்கள் எங்களுக்குத் தேவை.

பல காலமாக இவ்விரு திறத்தாருக்கும் இடையில் வளர்ந்து நின்று கேடு விளைவித்து வந்த நச்சுச் செடியின் ஆணி வேரை அறுத்தெறிந்தவர் அசரியா. வருங்காலத் தில் இத்தொடர்பு எவ்வகையில் நிலைக்க வேண்டுமென வழி காட்டியவரும் அவரே.

இந்தியாவில் கிறிஸ்தவர் சி. எம். எஸ். (C. M. S.), எஸ். பி. ஜி. (S. P. G.) போன்ற மிஷன் மக்கள் என்னும் நிலைமாறி, ஒவ்வொரு ஊரிலும் கிராமத்திலும் அடங்கிய மக்கள், அவ்விடத்தில் கிறிஸ்துவின் திருச்சபையின் அங்கத்தினர் எனும் நிலை தோன்றக் காரணமாய் இருந்த

வருள் ஒருவர் அசரியா. இதனால் கிறிஸ்தவ மக்கள் தாமே தம் சபை வளர்ச்சிக்காகத் திட்டங்கள் போட்டுச் செயலாற்றச் சுவாதீனம் கிடைத்தது. இவ்வகைச் சுவாதீனச் சூழ்நிலை, இந்தியக் கிறிஸ்தவருக்குள் தலைவர்கள் எழும்ப உதவும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சபையின் சுவாதீனம், சபையின் பரிபாலனத்துக்கென அமைக்கப்பட்டிருக்கும் ஆட்சிக் குழுவினரின் தரத்துக்கேற்ற அளவே அமையும். ஆகவே அவர்கள் கிறிஸ்தவப் பண்பும் திறமையும் படைத்தவராக அமைய ஆவன செய்தல் வேண்டுமென அசரியா கூறுவார்.

புதிய திராட்சை ரசம்

தோர்ணக்கல் பிரதேசத்தில், தொகுதி தொகுதியாகத் தாழ்குல மக்கள் கிறிஸ்தவராக முன் வந்ததால், சபை வெகு விரைவில் வளர்ச்சி அடைந்தது. இவர்களில் பலர் கிறிஸ்தவராவதால் கிடைக்கக்கூடிய சலுகைகளை நாடி மத மாறியவர். இத்தகையாரைக் குறை கூறலாகாது. கெட்ட குமாரன், தன் தகப்பன் வீட்டை நினைவுகூரக் காரணமாய் அமைந்தது அவனது இழி நிலை தான். எவ்வகைக் காரணத்தினால் எவர் திருச்சபையில் வந்து சேர்ந்தாலும் அவரை அன்புடன் வரவேற்று, பரம தகப்பனின் ஐசுவரியத்தை அவர் பெற்று அனுபவிக்க உதவ வேண்டும் என்பார் அசரியா. பண்போ, படிப்போ, இல்லாத இப்பாமர மக்களின் வாழ்க்கை கிறிஸ்தவ ஐக்கியத்தில் பெற்ற ஆதரவினால், அரும்பி மலர்ந்தது.

இவ்வகையாய்க் கிறிஸ்தவரானவர், மேனாட்டு வணக்க முறை, பாட்டுகள் முதலியவற்றால், கவரப்பட மாட்டார். ஏனைய கிறிஸ்தவரும் உணர்வுடன் பங்கெடுக்கக் கூடியது சுய நாட்டின் சூழ்நிலைக்கேற்ப அமைக்கப்பட்ட பாடல்கள், ஆராதனை முறைகளில்தான். ஆகவே கிறிஸ்தவக் கீர்த்தனைகள், கதைப் பாட்டுகள் முதலியவை எழுதப்பட்டன. இந்தியப் பண்பாட்டின் அடிப்படையில், ஆராதனைகள் அமைக்கப்பட்டன. திருமணம், புதுமனை புகுதல் முதலிய குடும்ப விழாக்களில் அனுசரிக்கப்படும் சடங்குகள், கிறிஸ்தவ ஒளியால் புதுமை அடைந்தன. இந்தியச் சிற்பக்

கலையின் சிறப்பிற்கேற்ப அழகிய தலைக்கோயில் ஒன்று தோர்ணக்கல்லில் கட்டப்பட்டது. மேனாட்டுத் தோரணை யில் அலங்கரிக்கப்பட்டு, உயிரும் வேரும், உரமும் இல்லாத "கிறிஸ்மஸ் மரம்" போல் இதுகாறும் காட்சி அளித்து வந்தது இந்தியக் கிறிஸ்தவ சமூகம். தோர்ணக்கல் காடு களுக்குள் பிற்போக்கான மக்கள் என ஒதுக்கப்பட்டவர் நடுவில் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபையோ, இந்திய இலக் கியம், கலை, கலாசாரம், பண்பாடு அனைத்திற்குள்ளும் தன் நெடுவேர்களைச் செலுத்தி, அவைகளில் காணக்கிடக்கும் தூய சக்திகளை உறிஞ்சி எடுத்துத் தனதாக்கிக் கொண்டு, வலிமையும் செழுமையுமுள்ள நற்கனி மரமாகக் காட்சி அளித்தது.

> இந்தியக் கிறிஸ்தவர், தம் நாட்டின் ஆன்ம ஞான பாரம்பரியத்திலிருந்து தம்மை துண்டித்துக் கொள்ளக் கூடாது. கடவுளின் நகருக்குள், தம் நாட்டின் தனிச் சிறப்புக்களைக் கொண்டு வந்து படைப்பதால், அவருக்குத் துதியையும் புகழையும் செலுத்துவர்.

இயேசு கிறிஸ்துவின் மார்க்கம், மனிதனை முழுவதும் உயிர்ப்பித்துப் புதுப்பித்து நடத்துவது. அதில் அடங்கிக் கிடக்கும் அதிசய சக்திகளை உலகுக்கு விளக்க, பல்வேறு காலத்திற்கும், பல்வேறு நாட்டுக்கும், ஏற்ற முறைகளைப் பயன்படுத்துதல் தேவை. இவ்வகை இயற்கை வளர்ச்சியை அனுமதியாது அஞ்சிக் கட்டுப்படுத்த முற்படின், விசுவாசம் குன்றிக் கிறிஸ்தவ சமூக வாழ்க்கை சீர்கெடும். எனவே, புதிய எழுப்புதலையும், புதிய கிறிஸ்தவச் சமூகத்தையும், புதிய துருத்திகளில் காப்பாற்றி வைக்க, அசரியா முயன்றார்.

### ஐக்கியத் திருச்சபை

1935 ஆம் வருடம், அம்பேத்கார் இந்து சமயக் கட்டுப் பாடுகளை எதிர்த்து, தாம் தனியாகப் பிரிந்து கொண்டார். இந்திய நாட்டில் பல்வேறு திக்குகளில் சிதறிக் கிடந்த ஹரிஜன மக்களையும் தம்முடன் சேர்த்துக் கொண்டார். அடுத்து இவ்வகுப்பினர் யாவரும் எச்சமயத்தில்

சேர்வாரென யாவரும் ஆவலுடன் எதிர்நோக்கி நின்றனர். அத்தருணம் அசரியா அவர்கள் அம்பேத்காரைச் சந்தித்து, அன்னார் கிறிஸ்தவச் சமயத்தை ஏற்றுக் கொள்ளத் தடையேதும் உண்டோ என வினவினர். அம்பேத்கார் அளித்த மறுமொழி: "இன்று இந்திய நாட்டின் தாழ் குலத்தவராகிய நாங்கள் யாவரும் ஒன்று சேர்ந்து நிற்கின்றோம். எங்களின் வலிமை எங்கள் ஐக்கியத்திலேயே அடங்கியுள்ளது. உங்கள் கிறிஸ்தவச் சபையில் இவ்வகை ஐக்கியத்திற்கு நிகராக யாதேனும் உண்டோ? நாங்கள் ஒற்றுமை குலையாத வகையில், உங்கள் திருச்சபையில் சேரத் தக்கதாக, உங்களுக்குள் பிரிவுபடாத சபை ஒன்று உண்டோ?" இக்கேள்விகள் அசரியாவைச் சிந்தனையில் ஆழ்த்தியது. தலை குனிந்த வண்ணம் திரும்பி வந்தார்.

இந்தியத் திருச்சபைகளுக்குள் காணப்படும் எண்ணிறந்த பிரிவுகள், இந்தியாவில் தோன்றியவை அல்ல. பல சபைப் பிரிவுகளைச் சேர்ந்த மிஷனெரிமார் மேல் நாடுகளிலிருந்து இந்தியாவிற்குப் பணியாற்ற வந்தனர். இவர்கள், தம் பணியால், கிறிஸ்து சமயத்தைச் சேர்ந்த மக்களைத் தத்தம் சபை ஒழுங்கைத் தழுவி ஒழுகச் செய்தனர். இதனால் இந்தியாவிலும் எண்ணிறந்த பிரிவுகள் கிறிஸ்தவ மக்களுக்குள் உருவாயின. இப்பிரிவினைகள் இந்தியக் கிறிஸ்தவர்களின் வலிமையைக் குறைத்ததன்றி, ஏனைய இந்தியர் கிறிஸ்தவர் ஆகிறதற்கு இடையூருகவும் அமைந்தது. கிறிஸ்துவில் கடவுள் காட்டியுள்ள ஒரே வழியைப் போதிக்கும் கிறிஸ்தவர், தாமே பிரிவுபட்டு நிற்பது, அவர்தம் சாட்சியைப் பொய்யாக்கியது. அசரியா இச்சிக்கலைத் தவிர்க்க, தம் பணியின் ஆரம்பக் கால முதல் பாடுபட்டார்.

1919-ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் அசரியாவும், தென்னிந்திய ஐக்கிய சபைக் குரு சந்தியாகுவும் சேர்ந்து, சபை ஐக்கியம் பற்றிச் சிந்திக்கவும், ஜெபிக்கவும், பல இந்தியச் சபைத் தலைவர்களைச் சேர்த்துக் கூட்டினர். இக்கூட்டத்தின் இறுதியில், சபை ஐக்கியத்தின் தேவை பற்றி இத்தலைவர்கள் விடுத்த வேண்டுகோள், தென் இந்தியத் திருச்சபை ஐக்கியத்திற்கு மூலைக் கல் நாட்டியது.

இதன் பின் தம் வாழ்நாளின் முடிவு மட்டும், விசுவாசத்துடன், சபை ஒற்றுமைக்காக உழைத்து வந்தார். அவர் நிகழ்த்திய உரைகளில், மிக உணர்வுடன் பேசப்பட்டவை சபை ஐக்கியத்தைப் பற்றியவையே.

> "சபை ஐக்கியம் பற்றி, அமெரிக்கா ஐரோப்பா போன்ற மேல்நாடுகளில் சிந்தித்து விட்டு, பேச்சளவில் நிறுத்திக்கொள்ளலாம். ஆனுல் புறமதஸ்தர் மத்தியில் வைக்கப்பட்டிருக்கும் கிறிஸ்தவ சபைக்கு, அதைச் செயலளவில் காணவேண்டியது தீராத அவசியம். கிறிஸ்தவ நாடுகளில் சபைப் பிரிவை ஒரு பெருங்குறை எனக் கூறலாம். கிறிஸ்தவ நாடுகள் அல்லாதவைகளில், சபைப் பிரிவு, பாவமும், கிறிஸ்துவின் நாமம் தூற்றப்படுவதற்குக் காரணமுமாம்."

சபை ஐக்கியத்திற்குரிய ஆலோசனைகள், பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. பல அறிஞரிடம் ஆலோசனைகள் கேட்டறிந்தனர். சபை ஐக்கியத் திட்டத்தை எழுத்தளவில் அமைப்பதற்கே கால தாமதம் ஆயிற்று. ஐக்கியத்தின் நிறைவை விரைவில் காண விரும்பிய அசரியாவின் மனம் சோர்ந்தது. விசுவாசிகளின் வரிசையில் தோன்றிய அப் பெரியாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமல், தூரத்திலே அதனைக் கண்டு, நம்பி, அணைத்துக் கொண்டு, விசுவாசத்துடனே மரித்தார். அவர் மரணத்திற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரே, தென் இந்தியத் திருச்சபை ஐக்கியம் மெய்ம்மை ஆயிற்று. கடந்த 17 ஆண்டுகளாக இவ்வைக்கியத்துக்குள் லுத்தரன் சபைகளையும் கொண்டுவர முயற்சிகள் செய்யப்படுகின்றன. வட இந்தியச் சபைகளுக்குள்ளும், இன்னும் ஐக்கியம் நிறைவு காணவில்லை. இந்திய நாடு முழுவதும் ஒரே சபையின் அமைப்புக்குள் கிறிஸ்தவ மக்கள் யாவரையும் சேர்த்துக் கூட்டும் நாள் என்று வருமோ?

இயேசு கிறிஸ்து "அவர்கள் யாவரும் ஒன்ருயிருக்க வேண்டு" மென வேண்டிய இலக்கே, அசரியா முன் நின்றது. சபை ஐக்கியம் இந்தியச் சபையின் வருங்கால வாழ்

விற்குத் தீராத தேவை என்பதை மேனாட்டுத் தாய்ச் சபைகளுக்கு விளக்குவது எளிதான காரியம் அன்று. எனினும் அசரியா முயன்றார். தம் ஆற்றல், திறமை, யாவையும் கடவுளின் ஒத்தாசையால் பயன்படுத்தித் தம் உயிரை விடப் பெரிதாக மதித்த சபை ஐக்கியத்தை உருவாக்க உழைத்தார்.

> "இந்தியக் கிறிஸ்தவர் அனைவரும் ஒரே சபை அமைப்புக்குள் கூட்டிச் சேர்க்கப்படுவது அத்தியாவசியம். அத்திருச்சபை இந்திய மக்களின் ஆன்ம அடைக்கலமாய் விளங்கும். அதன்கண், இந்தியரின் ஆன்ம ஆற்றல்கள் இயற்கையான வளர்ச்சியையும், நிறைவையும் காணும். அது ஐக்கிய அப்போஸ்தலத் திருச்சபையின் ஒரு கிளையாகவும், பலவகைப் பிரிவுகளினால் சிதைவு பட்டு வருந்தும் இந்திய நாட்டில் கிறிஸ்துவுக்குள் அடையக்கூடிய ஒற்றுமைக்கு மாறாத சாட்சியாகவும் நின்று, பல திக்குகளிலுமிருந்து மக்களை ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் அண்டை அழைத்து வரும்."

இது அசரியா கண்ட கனவு.

கடவுளின் மனிதர்

ஒவ்வொரு நாளும் காலை 4½மணிக்கே துயில் எழுந்து, கடவுளின் பாதத்தில் ஜெபத்தில் காத்து நிற்பார். கிழக்கு வெளுக்கு முன் அவர் ஆன்மா தெய்வீக மன்னாவைச் சேகரித்து விடும். வேதத்தை ஆராய்ந்து கற்பதிலும், அதிகக் கவனம் செலுத்தி வந்தார். வேத ஆராய்ச்சி, சாக்கிரமெந்துக்களில் பங்கெடுத்தல், கடவுட்கெனச் சேவை புரிதல் இம் மூன்றும் அவர் வாழ்வை உயிரூட்டும் சக்திகளாக அமைந்தன எனச் சாட்சி கூறுகின்றார்.

> "வேத ஆராய்ச்சி ... நம்மைப் பற்றிய எண்ணங்களிலிருந்து நம்மை விடுவித்து, கடவுள் பேரில் நம் எண்ணத்தையும், சிந்தையையும் வைக்க, உதவுகின்றது ... திருவிருந்து ... கிறிஸ்துவின் சிலுவை, அவரின் உயிர்த்தெழுதல் ஆகிய

கிறிஸ்தவ வாழ்க்கையின் மையமான கட்டங்களை விட்டு விலகிப் போகாவண்ணம், அவரண்டை இழுத்துக் கொள்கின்றன...கிறிஸ்தவ சேவை... கடவுள் நம்மை அவர் பணிக்காக அழைப்பதால், நாம் நமது இழிவான தன்மையை அதிகமாக உணர்ந்து, அவருடைய பணி செய்ய தேவையான பலனை ஜெபத்தின் மூலம் ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்."

அசரியா கடினமான உழைப்பாளி. போக்குவரத்துக்கு வசதியான வழிப்பாதைகள் இல்லாத அக்காலத்தில், மாட்டு வண்டியில் ஏறிச் சென்றும், இரவு வேளைகளில் கூடாரங்களில் வசித்தும், சபை மக்களைச் சந்திப்பார். கிராமப் பெண் ஒருவரிடம், 'தன் பிள்ளையின் உள்ளான வளர்ச்சிக்குத் தேவையானது யாது?' எனக் கண்காணியார் கேட்க, 'விளக்கெண்ணெய்' எனப் பதிலுரைத்தாராம்! இவ்வாறு, கிறிஸ்தவ உண்மைகள் விளங்காதிருப்பவர்களுக்காக முயற்சி செய்து, உண்மையை விளக்குவார். தம் குருமாரும், உபதேசிகரும், கிரமமாக வேத போதனை, கடவுளின் திட்டத்தில் திருச்சபையின் இடம், அதின் அங்கத்தினராயிருக்க வேண்டியதன் அவசியம், சபைகளிலிருந்து பிரிந்து போவதின் கேடு, அதின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைக்கும் செயல்களின் கொடுமை, முதலியவை பற்றி அறிந்து, கடவுளிடமிருந்து அவர் பெற்றிருக்கும் அதிகாரத்துடன் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டுவார்.

வருடத்துக்கொரு மாதம் ஓய்வெடுக்கக் கோத்தகிரி வருவது கண்காணியாருக்கு வழக்கம். ஆனால் தம் திருமண்டில மக்களின் தேவை, இந்தியத் திருச்சபையின் வருங்காலம், உலக அரங்கில் சபைகளுக்குள் இன்றியமையாத ஒற்றுமை என்னும் பழுவான சுமைகளைக் கடவுட்கெனச் சுமந்து நின்ற அடியானுக்கு, பணி செய்து கிடப்பதில் அல்லாது, வேறு எவ்வகையில் ஓய்வு கிட்டும்? இவ்விடுமுறை காலங்களில் ஆழ்ந்து சிந்தித்து, கிறிஸ்தவ ஈகை, திருமணம், சபை ஐக்கியம், திருமுழுக்கு எனப் பலவகைப் பொருட்பற்றி அற்புத

மான நூல்களைப் படைத்தார். இவைகளால் அன்றைய திருச்சபையும், இன்றைய கிறிஸ்தவரும், பெரும் பயன் பெற்று வருகின்றனர். தம் ஓய்வு நேரங்களைப் பல நூல்கள் ஆராய்ச்சி செய்து கற்கவும் பயன்படுத்தினர். இதனால் ஒதுங்கிய காடுகளில் தம் காலத்தைக் கழித்த பொழுதும், அசரியாவின் மனம் விரிவடைந்து வளர்ந்தது. வெளிநாடுகளுக்குச் செல்லும் பொழுது, உலக அரங்கில் மகா மேதைகளின் கவனத்தையும் கவரக்கூடிய வகையில், அவர் தம் அரிய கருத்துக்களை வெளியிடுவார். இங்கிலாந்தில், காம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அவருக்கு அறிஞர் (டாக்டர்) என்னும் பட்டம் அளித்து, அவரைச் சிறப்பித்தனர்.

1938 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ஆம் நாள், அசரியாவின் வாழ்வில் ஒரு பொன் நாள். அன்று அவர் கண்காணியாராய்ப் பதவி ஏற்று 25 வருடமாகியதால், வெள்ளி விழாக் கொண்டாட ஏற்பாடுகள் செய்தனர். 2,20,000 கிறிஸ்தவர், 150 குருமார், உதவிக் கண்காணியார் யாவருக்கும், அவர் ஆன்ம தந்தை; இந்தியக் கிறிஸ்தவரின் தலைவர்; உலகின் சபை வட்டாரங்களில் எல்லாம் அவரை விரும்பி வரவேற்கும் கிறிஸ்தவ பக்தர். அன்று அன்புடன் தம்மைச் சூழ்ந்து வாழ்த்தி நின்ற நண்பர், சபையினருடன் ஆலயத்துக்குள் சென்று, கடவுளை வாழ்த்தித் துதிக்கப் பாடகர் வரிசையில் காத்திருக்கையில், அவர் கூறியது:—

> "கடவுள் முன் அமைதியாகத் தாழ்மையுடன் பின் செல்வது போல், நன்றி செலுத்தி நடக்க வேண்டும் என்னும் எண்ணமே என் மனதில் ஓடுகின்றது. அவர் இப்பெரும் நாளை நான் காணக் கருணை புரிந்தாரே"

என்றாராம். இப்பெரியாரின் உள்ளக் கருத்து, அவர் கடவுளின் மனிதர் என்பதை எத்தகைச் சிறப்புடன் விளக்குகின்றது!

### இந்தியத் திருச்சபையின் திருத்தொண்டர்

அசரியா அப்போஸ்தலர், இரத்த சாட்சிகளின் வரிசையில் நிற்கத் தகுதி பெற்றவரா என்பதை, வருங்காலம்

விளக்கும். அசரியா நேற்று நம் நடுவில் வாழ்ந்தவர். இன்று வாழும் பலருக்கு அறிமுகமானவர். ஆகவே அவரது தொண்டின் சிறப்பைக் கலப்பற்ற உள்ளத்துடன் நாம் கணிப்பது அரிது.

எனினும் அவர் தொண்டின் சில சீரிய அம்சங்கள் பளிச்சிட்டு மின்னுகின்றன. அவைகளைத் தெளிவுடன் உற்று நோக்குதல், வருங்கால சபை வாழ்வுக்கு வழிகாட்டக்கூடும்.

இந்திய நாட்டில் இந்தியக்கிறிஸ்தவர் ஆற்றவேண்டிய சுவிசேடப் பணியின் பொறுப்பு, இந்தியர் — மிஷனெரிமாரிடையே நிலவ வேண்டிய தொடர்பு, கிறிஸ்தவ சமயத்தை இந்திய மயமாக்குதல், சபை ஒற்றுமை, சபை வாழ்வில் இந்தியர் தலைமை வகித்தல் ஆகிய கடுமையான பிரச்சினைகள் யாவுக்கும் தீர்ப்புக் காண வேண்டிய பொறுப்பு அசரியாவின் மேல் விழுந்தது. திருச்சபை வாழ்வில் இத்தனை மிகுதியும், ஆழமுமான பிரச்சினைகளைத் தவிர்க்க அழைக்கப்பட்டவர் வெகு சிலரே ஆவார். இவைகளில் ஒன்றோ, அல்லது இரண்டோ பிரச்சினைகளை விளங்கித் தம் வாழ்நாளில் தீர்க்கத் தகுதி பெறுவதையே, பெரும் பேருக எவரும் கருதக் கூடும். பலர் பிரச்சினைகளைத் தவிர்க்கும் முயற்சியில் திருச்சபையின் கூட்டு வாழ்வுக்கும், ஐக்கியத்துக்கும், தாம் பங்கம் விளைப்பதை அறியாமலோ, அறிய நேரினும் அதைப்பற்றிக் கவலை காட்டாமலோ, கடந்து செல்கின்றனர்.

அசரியா அத்தகையோர் அல்லர். அவர் தனிப்பட்ட அறிவாற்றலும் ஆன்மீக வல்லமையும் பெற்ற மகான். தம்மைச் சுற்றி நெருங்கி நின்ற பிரச்சினைகளைக் கடவுள் அளிக்கும் ஒளியில் உயர்த்திப் பார்த்தவர். அவரது ஆழ்ந்த பக்தியும், வேத அறிவும், மக்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பும், இப்பிரச்சினைகட்குக் கடவுள் அளிக்கும் நிவிர்த்தி யாது என்பதைத் தவருது விளக்கின. அத்தோடு நில்லாது, நடைமுறையில் தம் வாழ்வின் அடிப்படையில், தாம் கூறி அறிவித்த நிவிர்த்திகளைச் செயலாக்கிக் காண்பித்துத் திருச்சபையின் ஐக்கியத்தையும் உறுதிப்படுத்தினர்.

# 8

## சாது சுந்தர் சிங்

நீண்ட காவி உடை. அதே நிறத்தில் ஒரு மேல்துண்டு. தலையில் காவித் தலைப்பாகை. இவைகளே அவரின் அலங்காரம். மிதியடி இல்லாக் கால்கள். பணம் இல்லா பை. உறவினர் இல்லா உலகம். இக்கோலத்துடன் உலகைச் சுற்றி வந்த உத்தமர் ஓர் இந்தியர். கையில் திருமறையும் நெஞ்சில் கிறிஸ்தேசுவும் உண்டால் போதும் எனும் நிறைவு கண்டிருந்த பக்தர். அவரின் வதனத்தில் தெய்வீக ஒளி வீசியது. கண்கள் உள்ளத்தில் தேங்கி நிற்கும் அமைதியை தெரிவித்தன. அவரைக் கண்டவரும், கேட்டவரும், அவருடன் நெருங்கிப் பழக நேர்ந்தவரும் கூறிய சாட்சி இதுவே — அவர் கடவுளின் அன்பர்.

உயர் கல்வி பெற்றவர் அல்லர். வேத சாஸ்திர நிபுணர் அல்லர். திருச்சபையில் உயர் பதவி வகித்தவரும் அல்லர். சமூக சீர்திருத்தத்தையோ, ஆன்ம எழுப்புதலையோ வருவித்தவரும் அல்லர். இந்நிலையில் இந்தியத் திருச்சபைக்கு இத்தொண்டர் செய்த திருத்தொண்டுதான் யாது? இந்தியருக்கும், மேனாட்டினருக்கும், பண்பும் கல்வியும் படைத்தவருக்கும், படிப்பறியா எளியவருக்கும், ஏன்? உலகுக்கே இந்தியப் பண்பாட்டின் சிறப்பையும், ஆன்ம வாஞ்சையையும் ஒருவர், இயேசு கிறிஸ்துவின் திருவடிகளில் படைத்துப் பணிவதால் எய்தக் கூடிய உயர்நிலையை எடுத்துக் காட்டியவர் சாது சுந்தர் சிங்.

### பிறப்பும் வளர்ப்பும்

இந்திய நாட்டின் வட கோடியில், இந்து நதியின் ஐந்து உபநதிகளால் வளம் பெற்று விளங்கும் பஞ்சாப் தேசம் உள்ளது. இத்தேசம் சீக்கிய குலத்தவரின் உறைவிடம். இவ்வகுப்பினர் குலப்பெருமை மிகுந்தவர். சிறந்த போர் வீரர். தம் மதக்கொள்கைகளை விடாது கடைப்பிடிப்பவர். நவீன நாகரீகத்துக் கடிபணிந்து, பிராமணர், தாமும் தம் குடுமியைச் சிரைத்து விட்டனர். ஆனால் சீக்கியரில் ஒலிம்

பிக் பந்தயத்தில் ஓடும் வீரராயினும், பிறநாட்டுக்கு இந்திய நாட்டின் சார்பில் செல்லும் அரசியல் தூதரேயாயினும், தம் தலை முடியில் பிறப்பு முதல் இறப்பு வரை சவரன் கத்தி பட விடார். இவ்வகைச் சீக்கியரில், சீரும் செல்வமும் பெற்று, வாழ்ந்த சர்தார் ஷெர்சிங் என்பாருக்கு மகனாக 1889 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ஆம் தேதி சுந்தர் சிங் பிறந்தார்.

வீட்டில் அவர் கடைசிப் பிள்ளை. ஆகவே தம் தாயாருடன் நெருங்கி வாழ வாய்ப்புப் பெற்றார். சுந்தர் சிங்கின் தாயார் கடவுட் பற்று மிகுந்தவர். உண்மை யாதெனக் கண்டறிய வாஞ்சை உடையவர். அவர் தம் சிறுமகனை நோக்கி “ நீ ஆன்ம சாந்தி காண முயல வேண்டும். சமய கிரியைகளைச் சிரத்தையாக செய்தல் வேண்டும். ஒரு காலத்தில் நீ புனித சாது ஆக வேண்டும்” என்பர். இவ்வாறு தாயார் கூறியதைப் பல முறை கேட்டு வந்த சுந்தருக்கு, தாம் பிற்காலத்தில் சாதுவாவதை விட, வேறு எவ்வகை முயற்சியிலாவது காலத்தைக் கழிக்கவேண்டு மென்னும் எண்ணம தோன்றியதே இல்லை.

அன்னையின் ஆன்ம தாகம் அவரை இந்து, சீக்கிய முகமதிய மத போதகரிடமெல்லாம் இழுத்துச் சென்றது. சுந்தர் அவரை எங்கும் தொடர்ந்து சென்று, இச்சமயப் பெரியார்களை யெல்லாம் தம் சிறு வயது முதல் அறிந்து, அவர் சொற் கேட்டு நடந்து வந்தார். முக்கிய மத நூல்களையும் ஆவலுடன் கற்றார். அவர் 14 வயது இளைஞனாய் இருந்தபொழுது, அன்புள்ள அன்னை ஆண்டவர் அடி சேர்ந்தார்.

அன்னையின் மறைவுக்குப் பின், அவர் கூறிய வாய் மொழிகள் சுந்தரை அதிகமாக வருத்தின. ஆன்ம சாந்தி அடையவேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார். இரவு நெடுநேரம் விழித்திருந்து சமய நூல்களை ஆராய்ந்தார். ஆனால், ஆன்மாவில் அணுகி நின்ற சுமை மேன்மேலும் கூடியதேயன்று குறையவில்லை. இக் காலத்தில் இராம்பூரிலிருந்த மிஷன் பள்ளியில் கல்வி பயில அனுப்பப்பட்டார். அங்கு கிறிஸ்தவத் திருமறைப் போதனையும் கொடுக்கப்பட்டு வந்தது. அவற்றிற்குச் செவி சாய்க்க மட்டும் சுந்தர் விரும்பவில்லை. ஒரு முறை புதிய ஏற்பாட்டு

நூல் ஒன்றைத் தம் தோழர்களுடன் சேர்ந்து நெருப்பில் இட்டு எரித்தார். பின்பு அப்பள்ளியில் கல்வி கற்க விரும்பாது, மூன்று கல் தொலை நடந்துசென்று, அரசாங்கப் பள்ளி ஒன்றில் சிறிது காலம் கற்று வந்தார். அவர் அதிகத் தூரம் நடப்பதால், களைப்புறுவதைக் கண்ட தந்தையார், மீண்டும் அவரை மிஷன் பள்ளியில் சேர்த்தார்.

இச்சமயம் சுந்தரில் ஆன்ம தாகம் அதிகரித்தது. எவ்வகையிலாவது சாந்தி காண வேண்டுமென்று தவித்தார். ஒருகால் தான் அவமதித்த கிறிஸ்தவத் திருமறை தனக்குதவக் கூடுமோ என அதை வாசித்துப் பார்த்தார். அப்பொழுது "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" என்னும் வசனம் அவரைக் கவர்ந்தது. மிஷனெரிமாரிடம் சென்று விளக்கம் கேட்கவும் முன் வந்தார் ஆனால் இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவில் அடங்கியுள்ள தென்பதை அவர் விளங்கிக் கொள்ளவில்லை. சில வேளை விளங்குவதாகத் தோன்றினும், அதை நம்ப அவருக்கு மனமில்லை. தேசப்பற்று, குலப்பெருமை, மதப்பற்று, முதலிய உணர்வுகள் செழித்தோங்கி நின்ற அவர் உள்ளத்தில், கிறிஸ்தவ சமயம் மேல்நாட்டினருக்கே உரிய மதம் என்று தோன்றியது. தாழ்குலத்தவர் வெள்ளையர் மட்டுமே அதனைத் தழுவியுள்ளார் என நினைத்தார்.

ஆனால் உண்மையுடன் கடவுளைத் தேடும் எவருக்கும் உதவும் வல்ல பராபரன், வேறு உதவி கிட்டாது தவித்த சுந்தருக்குத் தம்மை வெளிப்படுத்தி இரட்சித்தார். ஆன்ம சாந்தி கிடையாவிடின், தாம் இருப்பதை விட இறப்பதே மேல் எனக் கருதி, சுந்தர் ஓர் இரவு குளித்து விட்டுக் கடவுள் தியானத்தில் அமர்ந்திருந்தார். அன்று விடியுமுன் சாந்தி கிடைக்காவிடின், காலையில் தம் வீட்டின் அருகில் ஓடும் இரயில் வண்டி முன் விழுந்து உயிரை விட வேண்டும் என்பது அவரது தீர்மானம் திடீரென விண்ணொளி அவர் அறையில் வீசியது மின்னும் மேகத்தினூடே இயேசுவின் திருச்சாயல் தோன்றியது. அவரது தெய்வத் திருமுகத்தைக் கண்டவுடன், சுந்தர் உள்ளத்தின் கலக்கம் நீங்கியது. அமைதி நிலவியது. தாம் தேடித் தவித்த சாந்தியைக் கிறிஸ்து இயேசுவில் நிறைவாகப் பெற்றார். வெள்ளையரோ,

வேறு கிறிஸ்தவரோ சுவிசேடத்தைக் கூறி அறிவித்ததால் சுந்தர் கிறிஸ்துவை ஏற்றவர் அல்லர். உலக இரட்சகர், தாமேதம்மை வெளிப்படுத்தச் சித்தம் கொண்டதால், சுந்தர் தம்மைக் கிறிஸ்துவின் அடியாரென உடனே ஒப்படைத்தார். பொழுது புலர்வதற்கும் காத்திராது, தம் தந்தையிடம் ஓடிச் சென்று, தாம் ஒரு கிறிஸ்தவன் எனக் கூறினர். தந்தைக்கு ஒன்றும் விளங்காது, மறுபடியும் பையனைப் போய் நித்திரை செய்யச் சொன்னர்.

மகன் கிறிஸ்துவுக்குத் தொண்டன் ஆகி விட்டதாகக் கூறியதைக் கேட்ட தகப்பனும், இனத்தவரும். சுந்தர் தம் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் கொம்பென எண்ணி வருந்தினர் வெளிப்படையாக விளம்பரம் செய்யாது, மறைவில் தம் விசுவாசத்தை வளர்க்க வேண்டினர். ஆனல் தாம் முன்னர் வெளிப்படையாகத் திருமறையை எரித்துப் பரிகசித்ததால் அதற்காக வருந்தி, தமக்கு நேரிடக் கூடிய இன்னல்களைப் பொருட்படுத்தாது, வெளிப்படையாகத் திருமுழுக்குப் பெற விரும்பினர். அன்று அவ்விளைஞர் தம் உள்ளக் கோவிலில் ஆண்டவருக்களித்த இடத்தை, உலகின் எவ்வகைச் சக்தியாலும் நீக்க முடியாமற்போயிற்று. உற்ருர் உறவினர் அன்பாகச் சொல்லிப் பார்த்தனர்; ஆசைகாட்டிப் பார்த்தனர்; அவமதித்துப் பார்த்தனர். ஒன்றும் வெற்றி பெருது போகவே, அவருக்கு நச்சுணவு கொடுத்து, இரயில் வண்டியிலேற்றி அனுப்பி விட்டனர். கடவுள் அற்புதமாய் அவர் உயிரைக் காத்தளித்தார். அவர் உயிரோடிருப்பதை அறிந்து மீண்டும் அவரைக் கைப்பற்ற முயன்றனர். ஒருகால் அவர் தகப்பன் கண்ணீருடன் அவர் முன் வந்து நின்று. அவர் தாயார் அவரை எவ்வளவாய் நேசித்தார் என நினைப்பூட்டிப் பேசிய பொழுது, அவரது உள்ளம் உருகியது தாமும் கண்ணீர் சொரிந்தார். ஆனல் தம் நேசரை மறுதலிக்க அவர் மனம் இடம் தரவில்லை. துன்பங்களும் இடர்களும், இடுக்கண்களும், வருத்தங்களும் அதிகரிக்க, அதிகரிக்க அவர் கடவுள் பேரில் வைத்த பற்றும் கூடியது.

மிஷனெரிமார் அவர் நிலைமையைக் கண்டு, அவரைத் தம் பாதுகாப்பில் வைத்துக் கல்வி கற்பிக்க ஒழுங்குகள் செய்தனர். ஆனல் சுந்தருக்குத் திருமுழுக்கு பெற்று, கிறிஸ்து

வின் சாட்சியாகச் செல்ல வேண்டுமென்னும் அவாவே பெரு கியது. அவர் போதிய வயது பெருதவராயிருந்தமையால் திருமுழுக்குச் சடங்கு 1905 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ஆம் நாள் மட்டும் தாமதிக்கலாயிற்று. அன்று சுந்தருக்கு 16 வயது.

**இந்தியக் கிறிஸ்தவ சாது**

திருமுழுக்குப் பெற்று, சுந்தர் கிறிஸ்துவின் மெய் அடி யார் ஆனுர். அவர் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீர் ஊற்றுக்கள் கிளம்பின. பலர் அப்பானத்தைப் பருகி, இயேசுவில் இளைப்பாறுதல் காணவேண்டுமே என வாஞ்சித் தார். திருமுழுக்குப் பெற்று 33 நாட்கள் ஆயின. பள்ளிப் படிப்புக்கு முடிவு கட்டி விட்டு, காவி உடை அணிந்து, சாது வாக வாழ்ந்திருக்க விரதம் பூண்டார்.

திருச்சபை வரலாற்றில் துறவிகளாக வாழ்ந்து தொண் டாற்றிய பல பெரியார் பற்றி அறிய வருகின்ருேம். இன் றும் உரோம சபையில் திருப்பணியாளர் யாவரும் துறவறம் பூண்டவர்தான். எனினும் கிறிஸ்தவர் ஒருவர், காவி உடை அணிந்து சாதுவாக அலைந்தது பலருக்கு வியப்பை ஊட்டி யது. எவரும் இவ்வகை வாழ்க்கையை மேற்கொண்டு சுவி சேடப் பணி செய்ய சுந்தர் சிங்குக்கு ஆலோசனை கூறியது கிடையாது. அவரின் முயற்சியைத் தடை செய்யவும் எவ ரும் துணியவில்லை. தம் அன்னையாரது போவாவை நிறை வேற்ற வேண்டும் எனும் எண்ணமே, துவக்கத்தில் சுந்த ரைச் சாது ஆகும்படி தூண்டியிருக்க வேண்டும். ஆனுல் காலப் போக்கில், இந்திய நாட்டில் கிறிஸ்தவப் பணி செய் வதற்கு, சாது வாழ்க்கை ஏற்றதோர் முறை எனக் கண்டார்.

பிற்காலத்தில் அவர் கூறியது :

> ஜீவதண்ணீரை இதுகாறும் மேலைநாட்டவர் உபயோகிப்பதை ஒத்த கோப்பைகளில் வார்த்து, தாகத்தினுல் தவித்து வாடும் இந்தியருக்குக் கொடுக்க முயன்றனர். ஆனுல் இந்தியரோ மரிக்கும் தறுவாயில் இருப்பினும், தாம் பழகியுள்ள குவளைகளிலன்றி, வேறு பாத்திரங்களில் வாய் வைக்க மாட்டார்.

தம் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பெருகிய ஜீவ தண்ணீரை, இந்தியருக்கு, இந்திய முறையில், இந்தியர் ஒருவர் பகிர்ந் தளிக்க முன் வந்தார்.

சாதுவாக விரதம் பூண்டு வாழ்க்கை நடத்துவதில் இன்னல்கள் உள்ளன. ஆனால், அவ்வகை வாழ்க்கையின் கட்டுப்பாடுகளுக்கு முற்றிலும் அடங்கி வாழும் சாதுக்கள் முன்னே, இந்திய நாட்டின் எப்பெருந் தலைவரும் தாழ்மை யுடன் தலை குனிவார். கிரேக்க நாடுகள் விளையாட்டுக் கலை களையும், உரோம வல்லரசுகள் இசை இலக்கியக் கலைகளை யும், மேலை நாடுகள் விஞ்ஞானக் கலைகளையும், போற்றி வளர்த்தது போல், இந்திய நாட்டில் ஆன்ம ஞானக் கலை கள் வளர்க்கப்பட்டன. சாது நோன்பு பூண்டு, உலகின் ஆசா பாசங்களை வெறுத்துத் தள்ளி, உடைக்காகவோ, உற விடத்துக்காகவோ கவலை கொள்ளாது, மறுவேளை உணவை எங்கே பெறுவோம் எனவும் அறியாது, தனிமையில் சுற்றித் திரிந்து, இன்னல்களைப் பொறுத்து வாழ்ந்தால் ஆன்ம ஞானம் பெற்று, இறைவனை அடையக்கூடும் எனும் எண்ணம் இந்தியருக்குள் தோன்றி வளர்ந்தது. சரீரத்தை அடக்கி ஒடுக்கியதால், ஆன்ம வாஞ்சை அதிகரித்ததே அன்றி, அது தீர வில்லை. சாது சுந்தர் சிங்கோ, ஆன்ம சாந்தி கண்டவர். எனினும், அவர் சாது வாழ்க்கையின் அடிப்படையில் தம் சரீரத்தை அடக்கியதால், அவரின் ஆன்ம வாழ்வு ஆண்டவருக்குள் அதிசயிக்கத்தக்க வகை யில் பலம் பெற்று வளர்ந்தது.

சுந்தர் சிங்கின் சாது வாழ்க்கை, தனிமையில் அவர் ஆண்டவருடன் தனி உறவு கொண்டு வாழ்வதற்காக மேற் கொள்ளப்பட்டதன்று. அவர் ஆண்டவரின் பிரசன்னத்தை அதிகமாக உணர்ந்து அனுபவித்த பக்தர். அவரின் நோக்கம் முழுவதும், ஆண்டவரைப்பற்றிப் பிறருக்கு பறை சாற்றி அறிவிக்க வேண்டும் என்பதே யாம்.

சுந்தர் சிங் சாதுக்கோலம் பூண்டதால், அவர் இந்திய நாட்டின் எல்லாக் குலத்தவருக்கும், வகுப்பினருக்கும் பொதுச் சொத்து ஆயினர். ஆண் மக்கள் எவரும் தாராள மாகப் பிரவேசிக்க முடியாத அந்தர்ப்புர மாதர், கோஷா

பெண்கள், இவர்கள் நடுவிலும், தடை இல்லாமல் சென்று, சுவிசேடச் செய்தியைக் கூற அவருக்கு வாயில் திறக்கப் பட்டது.

சுவிசேடத் திருப்பணி

சாது தம் திருப்பணியை முதன் முதல் ஆரம்பித்தது இராம்பூரில். தம் சொந்த ஊரில், தம் இனத்தவர் முன், இயேசுவின் இனிய நெறி பற்றி எடுத்துரைத்தார். பின் வடக்கே சென்று, ஆப்கானிஸ்தான், காஷ்மீர் முதலான பாகங்களில், பெரும்பாலும் புற மதஸ்தர்க்குள்ளேயே, கிறிஸ்துவைப் பிரசங்கித்து வந்தார். இறுதியாக, கிறிஸ்தவர் எவரும் அது மட்டும் முயன்று உழைத்திராத திபெத்து நாட்டவருக்குச் சுவிசேடத்தை அறிவிப்பதே தம் கடன் என உணர்ந்து, அங்கேயே அரிய பணியாற்றினர்.

சாது எனக் கண்டவுடன், யாவரும் அவரை விருப்பத்துடன் வரவேற்று, அவர் சொல்வதைக் கேட்கக் கூடி வந்தனர். ஆனல் அவர் கிறிஸ்தவர் என அறிந்தவுடன், வசைமொழி கூறி, அவரைக் கிராமத்துக்கு வெளியில் துரத்தி விட்டார். என் செய்வார்? குளிர் ஒரு புறம் ஆட்ட, பசி மறுபுறம் வாட்ட, காட்டிலுள்ள குகை எதிலும் ஒடுக்கி, நித்திரையில் ஆழ்ந்த இரவுகள் பல, தனிமையில் இவ்வாறு சில மாதங்கள் கடந்தன. பின் இரண்டு வருடங்கள் ஸ்டோக்ஸ் என்னும் அமெரிக்கரின் துணை கிட்டியது. இவரும் சுந்தரைப் போல், பணி செய்ய விரும்பினர். இருவரும் தொழு நோயாளருக்கும், பிளேக் வியாதியாளருக்கும், பலவகையான சுயநலமற்ற சேவைகளைச் செய்தனர். ஒரு முறை பற்பல வசதிக் குறைவுகளைப் பொருட்படுத்தாது, சவிசேட சேவை செய்துவிட்டு, காடுகள் வழியாய் வந்து கொண்டிருக்கையில், சுந்தர் மயக்க முற்று வீழ்ந்து விட்டார். கடுமையான ஜுரம் கண்டிருந்தது. வயிற்று நோவால் முகம் வாடிக் கிடந்தார். ஸ்டோக்ஸ், நண்பரை வசதியாக படுக்க வைத்து, உடல்நிலைபற்றி விசாரிக்க, சுந்தர் புன் முறுவலுடன். "நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர் நாமத்துக்காகப் பாடுபடுவது எவ்வளவு இன்பமானது!" என்ருராம். இது சுந்தர் சிங்கின் வாழ்க்கையில் எக்காலமும்

விளங்கிய சிறப்பு. தமக்கு வரும் இன்னல்களைக் கடவுட்காக பொறுக்க மட்டும் அவர் முயலவில்லை; அவைகளை விரும்பி வரவேற்கவும் செய்தார்!

சுந்தரின் சிறப்பை அறிய வந்த சபை அதிகாரிகள், அவர் ஓரளவு இறையியற் கல்வி பெற்றுக் கொண்டால், குரு அபிடேகம் பெற்று, திருச்சபையின் அரவணைப்புக்குள் நல்ல முறையில் பணி செய்யக்கூடும் எனக் கருதினர். ஆகவே, இறையியற் கல்வி இரண்டு வருடங்கள் பெற்றார். ஆனால் குரு பட்டம் பெற்றால், ஆங்கிலிக்கன் சபை அமைப்புக்குள் அடங்கிய பாகங்களில், அதுவும் பெரும்பாலும் கிறிஸ்தவருக்குள்ளேயே அவரின் சேவை கட்டுப்படும் என்பதை அறிந்தார். தான் பெற்றிருந்த டீக்கன் லைசன்சையும், கண்காணியாரிடம் ஒப்படைத்து விட்டு, உலகம் அனைத்தையும் தம் சபையாகப் பாவித்துப் பணியாற்றப் புறப்பட்டு விட்டார்.

ஸ்டோக்ஸ் விரத்தராய் வாழ்ந்து, கிறிஸ்தவ சேவையில் ஈடுபடுகிறவர்கட்கென ஒரு சேவா சங்கம் ஆரம்பித்தார். அதிலும் சாது முழு அங்கத்தினராகச் சேர விரும்பவில்லை. தான், தனிமையில், தன் ஆண்டவரிடம் செய்து கொடுத்த ஆணையின் உண்மைத் தன்மை மாறாதிருக்கையில், வெளியிலுள்ள வேறு ஒழுங்குகளுக்குள் தம்மைக் கட்டுப்படுத்தி அடக்குவது அவசியமற்றதென எண்ணினாரோ?

இதனால் திருச்சபை, அதின் சட்டதிட்டங்கள், நிர்வாக அமைப்புக்கள், முதலியன எல்லாம் அவசியமற்றவை எனச் சுந்தர் சிங் கருதியது கிடையாது. அவற்றின் வழியாய்ப் பலகோடி மக்கள் கிறிஸ்தவ வாழ்வின் நலன்களை அனுபவிக்க முடிகிறதெனக் கூறுவார். அதே வேளையில், தம்மைப் போல் தனி அழைப்புப் பெற்ற தொண்டர்கள், தனிப் பணி செய்வதற்கும் இடம் இருக்க வேண்டுமெனவும் கூறுவார்.

இமயமலைச் சிகரத்திலிருந்து உருண்டோடி வரும் தூய மழை நீரும், பனி நீரும், நதிகள் கால்வாய்கள் வழிச் சென்று, மக்களின் தேவைக்கு உதவுமுன், ஓரளவு அழுக்கேறி விடுகின்றது. இவை மட்டும் அன்றி, தூய்மை மாறாத நிலையில் பாய்ந்து வந்து, மக்கள் பருகிக் களிக்க உதவும்

அருவி நீர்களும் அவசியம் எனக் கூறி இக்கருத்தை அழகுடன் விளக்கியுள்ளார்.

வட இந்தியாவின் எல்லைகள் எங்கும் சுற்றித் திரிந்து, சுவிசேடத்தைப் பிரசங்கித்தார். கிறிஸ்தவர்கள் ஆனவரை ஆங்காங்கேயுள்ள சபையின் பாதுகாப்புக்கு விட்டு விட்டு, தம் கவனத்தைக் குணப்படாத ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துவதிலேயே செலவிட்டார். சாதுக்கள், துறவிகள் முதலானோருக்குள் சுந்தர் சிங் ஆற்றிய பணி குறிப்பிடத் தக்கது. அவர்களில் பலர் கிறிஸ்தவராய் இருப்பதாகவும் அறிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் வேனிற் காலத்தில், ஆறு மாதம் தீபெத்தில் கழித்தார். இமயமலையின் சிகரங்களைக் கடந்து சென்று, இந்நாட்டை அடைவது அரிய செயல். சுந்தர் சிங் தம் 19ஆம் வயது முதலே, இன்னல்களைப் பொருட் படுத்தாது, உறைபனியின் மேல் மிதியடி இல்லாக் காலால் நடந்து சென்று, இயேசுவின் இனிய தூது பற்றிக் கூறி அறிவித்து வந்தார். இப்பாகங்களில், தனிமையில் வாழ்ந்து வந்த சில கிறிஸ்தவர், பேராவலுடன் அவரது வரவுக்காகக் காத்திருந்தனர். ஒரு சில திபெத்தியர், சுந்தரின் நற் செய்தியும் அவரின் தியாக வாழ்க்கையும், அவர் கூறி அறிவித்த தெய்வ அன்புக்கு ஒத்ததாக இருக்கக் கண்டு, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். ஆனால் பெரும்பாலும் சொல்லொண்ணு துன்பங்களே, இந்நாட்டில் அவர் பங்காய் அமைந்தது. அடிக்கப்பட்டார், வாதிக்கப்பட்டார், சிறையில் போடப்பட்டார், பாழ்ங் கிணற்றில் எறியப்பட்டார். இவ்வகைச் சந்தர்ப்பங்களி லெல்லாம், கடவுள் தம் தாசனை அற்புதமாய் விடுவித்தருளினர். ஆனல் தாம் கடவுள் பணியைச் செய்வதால், கடவுள் தம்மைக் காக்க வேண்டுமெனும், முரட்டு நம்பிக்கையுடன், சுந்தர் சிங் உழைக்கவில்லை.

பிற்காலத்தில் அவர் திபெத்துக்குப் போகு முன், தம் நண்பர்களிடம், பவுல் அப்போஸ்தலர் எபேசு சபையினரிடம் கடைசி முறையாக விடை பெற்றுச் சென்ற விபரத்தை கூறிச் சென்ருர் (அப். 20 : 18—35). ஆவியில் கட்டுண்டவ

ராய், தம் உயிரை ஒரு பொருட்டாக மதியாது. ஆண்டவரா கிய இயேசுவினிடத்தில் தாம் பெற்ற ஊழியத்தை நிறை வேற்றவே, தாம் செல்வதாக எண்ணினர். கடைசி முறை, 1929ஆம் ஆண்டு, அவர் தம் சரீர பலவீனத்தையும் கவனி யாது சென்றார். அம்முறை அவர் விரும்பி எதிர்பார்த்தி ருந்த முடிவு நேரிட்டிருக்க வேண்டும். தம் ஆண்டவரை முகமுகமாய்த் தரிசிக்கும் பேறு பெற அவர் அழைக்கப் பட்டார்.

'நான் அவர்களிலும் ... அவர்கள் என்னிலும்'

சுந்தர் சிங் எப்பொழுதும் கடவுளின் சமூகத்திலேயே வாழ்ந்தார். தாம் சென்ற இடமெல்லாம் கடவுளின் சமூகத் தையே கொண்டு சென்றார். அவரைக் கண்டவர் எவரும், அவர் இயேசுவுடன் இருந்தவர் என்பதைச் சொல்லாமலே அறிந்து கொண்டனர். அவரது அகத்தின் அழகு முகத்தில் தெரிந்தது. இதனால் கடவுள் தமக்கு அப்பால் கடந்து நிற் பவர் போல் பாவித்து, "உம்மண்டை தேவனே...நான் சேரட்டும்" என்னும் பாட்டைத் தாம் உருக்கத்துடன் பாட முடியாது எனக் கூறுவார்.

தனிமையாக அருகிலுள்ள காடுகளுக்குச் சென்று, ஜெபத்திலும், தியானத்திலும், அமைதியாகக் காத்திருப்பதி லும், காலத்தைச் செலவிட்டு, கடவுளின் சமூகத்தை அனு பவிப்பது, சுந்தருக்கு வழக்கம். ஒரு முறை இவ்வாறு வீட்டுக்கு அருகிலிருந்த மலைப் பகுதியில் அமர்ந்து, சுந்தர் காத்திருந்தார். அவர் அருகில் சிறுத்தை ஒன்று வந்தது. தம் கையை உயர்த்தவே, காட்டு மிருகம் வீட்டுப் பூனை போல் அவர் முன் நீண்டு படுத்து, தன்னை அவர் தடவிக் கொடுக்க விட்டுக் கொண்டிருந்தது. இச்சம்பவத்தைச் சன் னல் வழியாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அவர் சிநேகிதர், மறுநாள் இதைப் பற்றி வினவ, "சிறுத்தை எனக்கு ஏன் தீமை செய்ய வேண்டும்? நான் அதற்கு விரோதி அல்லன். மேலும் நான் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டிருக்குமள வும் கலங்க வேண்டியதில்லையே" என்றாராம்.

சுந்தர் சிங் எழுதிய நூல்கள் அவர் ஆண்டவருடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பை விளக்குகின்றன,

ஆழ்ந்த கருத்துக்களை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறி, பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்கிக் காட்டுவதில், அவருக்கு நிகர் அவரே தான். இவ்வகை மனத்தெளிவையும், ஆழமான கருத்துக்களையும், ஆண்டவர் அடியில் அமர்ந்திருந்து சுந்தர் சிங் பெற்றார்.

ஆண்டவரின் அருமையை அனுதினமும் அனுபவித்து ருசித்து வந்த அடியான், இயேசு இரட்சகர் உலகில் வந்து வாழ்ந்திருந்த நாட்டைக் கண்டு வரவேண்டுமெனவும், அவர் போல் 40 நாட்கள் உபவாசம் செய்ய வேண்டுமெனவும், பல காலமாக வாஞ்சித்தார். 1912 ஆம் ஆண்டு தனிமையாகக் காட்டில் இருந்து கொண்டு உபவாசத்தை ஆரம்பித்தார். சுயநினைவு அற்ற நிலையில் காட்டில் கிடந்த அவரைச் சில விறகு வெட்டிகள் தூக்கிக் கொண்டு வந்து பாதுகாத்தனர். 40 தினங்கள் அவர் உபவாசம் நீடித்திருக்க முடியாது. எனினும், இதன்பின் அதிகமான ஆன்ம சக்தியைப் பெற்று தம் சோர்புகளையும், சோதனைகளையும், அதிகச் சுலபமாக வெல்லக் கூடியவர் ஆனார்.

1920, 1922 ஆம் ஆண்டுகளில் மேல் நாடுகளுக்குச் சென்று திரும்பினார். அங்குப் பலர் சாதுவின் தோற்றத்தையும், உடையையும் கண்டவுடன், இயேசு இரட்சகர் உலகில் இருந்த பொழுது, இவ்வாறே காணப்பட்டிருப்பார் என விளம்பினர். ஆண்டவரின் அன்பில் மூழ்கிக் கிடந்த அடியானில், அன்பரின் சாயல் பிரதி பலித்ததில், அதிசயம் யாதும் இல்லை. முதல் முறை ஐரோப்பா சென்று திரும்புங்கால், பலஸ்தீனா நாட்டையும் சுற்றிப் பார்த்து வந்தார்.

### கல்வாரிப் பாதை

இந்தியக் கிறிஸ்தவருக்குள்ளும், சுந்தர் சிங் சில காலம் சேவை செய்தார். திருவாங்கூர்க் கிறிஸ்தவரின் மாபெரும் கன்வென்ஷன் கூட்டங்கள், இந்திய நாட்டின் வருங்காலம பற்றி அவர் உள்ளத்தில் நம்பிக்கை தோன்றச் செய்தது. எவரும் தம்மைப் பின் செல்ல அவர் அனுமதிக்கவில்லை. சாதுவாக விருமபுகிறவர், கடவுளிடம் தனி அழைப்பைப் பெற வேண்டு

மென எச்சரித்தார். அது தனிமையில் சிலுவையைச் சுமந்து வேதனையைப் பொறுத்து, கல்வாரி மேட்டில் நடக்கும் அனுபவம் என்பதை எடுத்துரைத்தார்.

தன் தாயின் பக்தி வாழ்க்கையைப் பற்றி எடுத்துக் கூறி, பலமுறை பெயர்க் கிறிஸ்தவ வாழ்க்கை நடத்தியவரைக் கண்டித்துள்ளார்:—

> என் தாயார் என்னைப் பக்திச் சூழ்நிலையில் வளர்த்தார். கடவுள் பணிக்காக என்னை ஆயத்தப்படுத்தியவர் அவரே ...... மணிக்கணக்காகக் கடவுட் வணக்கத்தில், அவர் ஆழ்ந்திருப்பார். ஆனால் ஒரு சில நிமிடங்கள் ஜெபம் செய்து விட்டு, கடமை முடிந்ததென எண்ணும் கிறிஸ்தவர், நித்தியத்தைக் கடவுளைத் துதித்துச் சேவிப்பதில் கழிக்கப் போவதாக நம்புகின்றனர்.

அதே வேளையில் " ஒரு புற மதப் பெண், தன் மகனிடம் இப்பெரும் மாறுதல்கள் தோன்ற காரணமாயிருந்திருப்பாள் ஆனால், கிறிஸ்தவத் தாய்மார் ஆகிய நீங்கள், எவ்வளவு பெரிய காரியங்களை உங்கள் பிள்ளைகளிடம் காணக்கூடும் என்பார்."

இமயத்தில் கைலாசகிரியில், பல காலமாக உயிருடன் வாழும் மகா ரிஷி ஒருவர் இருப்பதாகச் சுந்தர் சிங் கூறிய செய்திகள், மக்களுக்குள் பரபரப்பைத் தோற்றுவித்தன. கிறிஸ்துவைப் பற்றிக் கேட்க விரும்பாது, இவ்வகை நூதனங்கள் பற்றி அறியவே விரும்பினர். அதை அறிந்த சாது, பிற்காலத்தில் இவை பற்றி அதிகமாகக் கூறவில்லை. மேல்நாடுகளுக்குச் சென்று திரும்பிய பின், தம் காலத்தைப் பெரும்பாலும் நூல்கள் எழுதுவதிலேயே செலவிட்டார்.

ஓயாத உழைப்பாலும், கடின வாழ்க்கையாலும், உடல் நலம் குன்றியது. ஒரு கண் பார்வையை இழந்தார். நெஞ்சில் நோவு தோன்றியும், அவருக்கு வேதனை தந்தது. அவருக்குத் தம் 33-ஆம் வயதில் இயேசு கிறிஸ்துவைப் போல், உலக வாழ்க்கையை முடிக்கும் பேறு கிட்டும் என்பது நம்பிக்கை. அவ்வெல்லையைக் கடந்தும், அவர் ஓட்டம் முடியவில்லை. எனினும், பொறுமையுடன் காத்திருந்தார். 1929-ஆம் வருடம் கடைசி

முறையாகத் திபெத்துக்குச் சுந்தர் சிங் சென்றார். அதன் பின் அவரைப்பற்றிய எவ்வகைச் செய்தியும் கிடைக்கவில்லை.

இன்று சாது சுந்தர் சிங் உயிருடன் இருந்தால், அவருக்கு வயது 75 தான் ஆகியிருக்கும். கண்காணியார் அசரியா, டாக்டர் ஐடா ஸ்கடர் என்பார் இருவருக்கும் இளையவரான சுந்தர் சிங், அவர்கட்கு முன் தம் தொண்டைத் தொடங்கி முடித்து விட்டு, மறைந்து விட்டார்.

"கிறிஸ்தவ உண்மைகள் இந்திய நாட்டில் வேர் கொண்டு நிலைக்கக் கூடுமா?" என எழும்பிய கேள்விக்கு ஏற்ற பதில் அளித்தவர் சுந்தர் சிங்.

> இந்து சமய வாஞ்சை பூரண உருக்கொள்வது கிறிஸ்தவ சத்தியத்திலே தான். இந்து சமயம், மடை வெட்டி வைத்தது. அதின் ஊடே ஓடி, உயிரளிக்க வேண்டிய ஜீவ தண்ணீர் கிறிஸ்து...இந்து சமயத்தில் பல சீரிய அம்சங்கள் அடங்கியுள்ளன. ஆனால் இயேசு கிறிஸ்துவே முழு ஒளியைக் கொடுக்கிறவர்.

இவ்வாறு ஸ்டிரீட்டர் (Streeter) என்னும் பெரியாரிடம் சுந்தர் சிங் கூறினார். கிறிஸ்தவத் தூதை ஏற்க இந்து சமுதாயம் காத்து நிற்கின்றது. தக்க முறையில் அதனை எடுத்து விளக்க மெய்த்தொண்டர் தான் தேவை.

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி எவருக்கும் உரியது, அது நாடு, மொழி, பண்பாடு இவைகளால் கட்டுப்பட்டதன்று. அதே வேளையில், ஒரு நாட்டின் கலை, கலாசாரம், பண்பாடு, ஒழுக்கம், ஆன்ம வாஞ்சை முதலியவற்றைப் பூரணப் படுத்து கிறதற்கு இயேசு கிறிஸ்துவின் இரட்சண்ணிய தூது தேவை. இவ்வகைக் கருத்துக்களைச் சொல்லளவில் கூறிவந்த இந்தியத் திருச்சபைக்குச் செயல் மூலம் நிரூபித்துக் காண்பித்த பெருமை சாது சுந்தர் சிங்குக் குரியது.

### ஆசிரமத் தொண்டு

தென் இந்தியாவில் கிறிஸ்தவ வாழ்க்கையையும் சாட்சியையும் நாட்டுவாயிலாக வெளிப்படுத்துவதற் கெனப் புதுவகை முயற்சி ஒன்று எடுக்கப்பட்டது. 1921-ஆம் ஆண்டு டாக்டர்

சவரிராயன் இயேசுதாசன் என்னும் அறுவை மருத்துவ வல்லுநர், திருப்பத்தூரில் கிறிஸ்து குல ஆசிரமம் ஆரம்பித்தார்.

பழங்காலத்தில் நம் நாட்டில், துறவறம் பூண்டு தூய நெறியில் நிலேத்து வாழ்ந்த பெரியாருடன், வாலிபரைச் சிறிது காலம் சேர்ந்து வாழ வைப்பது மரபு. இதனால் வாலிபரில் பக்தி உணர்வு தோன்றி, பிற்காலத்தில் அவர் எவ்வகையில் தம் வாழ்வைக் கடத்தினும், கடவுட் பற்றுள்ளவர்களாக நிலேக்க உதவியது. இதே வகையில், கிறிஸ்துவுக்குள் அருளப்படும் நித்திய ஜீவனைக் கிறிஸ்தவ வாலிபர் பருகி அதின் அருமையைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள உதவ வேண்டும் என்பது கிறிஸ்து குல ஆசிரமத்தின் ஒரு நோக்கம்.

பக்தி. படிப்பு, திருத்தொண்டு, எளிமையான வாழ்வு, சகோதரத்துவம், ஒழுங்கு முறை எனும் ஆறு கட்டுப்பாடுகட்கு இணங்கி ஆசிரமவாசிகள் வாழ்க்கை நடத்துகின்றனர். ஆசிரமங்கள், பரலோக சிந்தையை உலகுக்கு எடுத்துக் காட்டும் ஏதுக்களாக அமைந்து தொண்டாற்றுகின்றன. வாலிபருக்குள் விசுவாசத்தைப் பிறப்பிக்க, வாழ்க்கைப் போராட்டங்கள், நெருக்கடிகள் ஊடே வருந்தும் பெரியவர் ஆசிரமத்தின் அமைதியான சூழ்நிலேயில் ஓய்ந்திருந்து புத்துயிர் பெற, பல சபைப் பிரிவினர் ஒன்று சேர்ந்து கிறிஸ்தவ ஐக்கியத்தின் அருமையை ருசிக்க, சபையின் வருங்காலத்தின் முன்னேற்றத்துக்காகத திட்டம் வகுப்போர், கடவுளின் சமூகம் சூழ்ந்து நிற்கும் ஆசிரமத்தில் அமர்ந்திருந்து ஆலோசனைகள் செய்ய, புறமதத்தினர் அச்சமின்றி ஆண்டவரைப்பற்றி அறிந்து கொள்ள, எனப் பலவகைப்பட்ட நலன்களேக் காண, ஆசிரமங்கள் தக்க சாதனமாக அமைந்துள்ளன. இந்திய நாட்டின் பல பாகங்களில் ஆசிரமங்கள் திறக்கப்பட்டுள்ளன. எனினும் அவைகளேப் போதிய அளவுக்கு திருச்சபை ஆதரிப்பதாகவோ, அவைகளால் பெறக்கூடிய பயனே ஏற்று திருச்சபையின் வாழ்வை வளம் செய்வதாகவோ தெரியவில்லே.

யாழ்ப்பாணத்தில் 1939-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆசிரமம் அந்நாட்டு மக்களின் வாழ்விலும் திருச்சபை வாழ்விலும் மையமான இடம் பெற்று, பெரும் தொண்டாற்றுகின்றது.

எதிர்காலம்

இருபது நூற்ருண்டுகட்கு முன் இந்தியாவில் தோன்றிய திருச்சபை, சிற்றரசர்களின் சீற்றங்கள், வல்லரசுகளின் போட்டிகள், உள்நாட்டுப் போர்கள், வெளி நாட்டவரின் ஆதிக்கம், இவை ஒன்றுக்கும் இரையாகாது, கடவுளின் அதிசய அரவணைப்புக்குள் காக்கப்பட்டு வளர்க்கப்பட்டது. காலத்தின் மாறுதல்களையும், தேவைகளையும் அறிந்து, அவைகளின் ஊடே மாருத கடவுளின் நற்செய்தியின் சிறப்பை அறிவுறுத்த, ஆண்டவர் அவ்வப்போது அடியார்களை எழுப்பினர். இந்தியத் திருச்சபை, பக்தர் விசுவாசிகள், இரத்த சாட்சிகள், ஆகியோரின் உறுதியான அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளது. இன்று, சுதந்திர இந்தியா ஆத்மீக சுவாதீனத்தின் மெய்ச் சிறப்பைக் கிறிஸ்தேசுவில் காண உதவ வேண்டியது இந்தியத் திருச்சபையின் பொறுப்பு. இந்திய நாட்டின் எதிர்காலம் இந்தியத் திருச்சபையின் நல்வாழ்வில் அடங்கி யுள்ளது.

Q6:458.2
N64
ARCHIVES
109276

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை — P. 1218 — C. 3000.

112

**தற்காலத் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு**
**உறுதுணையாக நிற்கும் உன்னத நூல்கள்**


**கிறிஸ்தவரும் சமுதாயமும்** — தே. ஆ. தங்கசாமி ரூ. 3 · 30

**கிறிஸ்தவ அறம்** — யோ. ரசல் சந்திரன் ரூ. 2 · 75

**இறையியல் அணிந்துரை** — ஆல்பர்ட் மனுவேல் ரூ. 2 · 90

**கிறிஸ்து நெறிக் கல்வி** — சாலமோன் துரைசாமி ரூ. 2 · 75

**கிறிஸ்தவ வழிபாடு** — தோ. சா. காரட் ரூ. 4 · 00

**திருமறை விளக்கம் : ஆதியாகமம்**
ரா. எட்வர்ட் சாம் (அச்சில்)

**புதிய ஏற்பாட்டுப் பின்னணி வரலாறு**
சா. தா. ஜெபஞானம் (அச்சில்)

**திருச்சபைப் பரிபாலனக் கைந்நூல்**
பதிப்பாசிரியர் : ஆல்பர்ட் மனுவேல் (அச்சில்)

**திருச்சபை, திருப்பணிவிடை, திவ்விய சாக்கிரமெந்துகள்**
வில்லியம் ஸ்டுவட் (அச்சில்)

---

**Servants of the Indian Church**

*by*

**Vimala Manuel,** B. A., B. T., B. D.

*Copies available from :*

**The C. L. S., P. Box 501, Madras — 3**


**0 · 75 காசு**

428
4-11